குண்டூசி

ஆகஸ்ட்'52...8 அணா

438

438
3.52

289

THE REGISTRAR OF BOOKS
18 AUG 1952
MADRAS



ஸ்ரீ சுகுமாரின்

சின்னதுரை

M.S. RELEASE

இப்பொழுது தமிழ் நாடெங்கும்—கேரளத்தில்
முக்கிய இடங்களிலும் வெற்றிகரமாக நடைபெறுகிறது

அன்றலர்ந்த மலர்போல்
புதுமையாகவும் மோகன
காந்தியுடனும் விளங்குங்கள்...

ஹமாம்

டாய்லட் ஸோப்பு

உபயோகியுங்கள்

ஹமாம் புதிய
வாசனை பொருந்தியது...
அதிக நாள் வரவும்
செய்கிறது!

தி டாடா ஆயில் மில்ஸ்
கம்பெனி லிமிடெட்

A TATA PRODUCT

டாடா தயாரிப்பு

ஆறு தடவைகள் சுடும்
சிறந்த பாதுகாப்பு பிஸ்டல்



134134.
சென்னை

1952-ம் வருஷ புது மாடல்
(லைசென்ஸ் தேவை இல்லை)

இதைப்பற்றி உயர்வாகச் சொல்வது சூரியனிடம் வெளிச்சம் காட்டுவது போல்தான். இந்த பிஸ்டல்கள் புதிதாக அமெரிக்காவில் தயாராகி வந்துள்ளவை. இதில் ஆறு ரவைகள் கொள்ளக்கூடிய அறை உள்ளது. விசையை அழுத்தினதும் சட்டு சட்டென்று ஆறு முறை சுடக்கூடிய முறையில் அமைந்துள்ளது. அது போடும் சப்தம், சுடுகிறவரைக்கூட ஆச்சரியப்படும்படி செய்யும். உங்கள் உயிரையும், சொத்தையும் பாதுகாப்பதற்கு இதைவிட சிறந்த பிஸ்டல் காண்பது அரிது. நிஜ பிஸ்டல் போலவே உள்ள இதன் தோற்றத்தையும், போடும் சப்தத்தையும் கேட்டு பயங்கர விலங்குகள் பயந்து ஓடும்.

சைஸ்: 7½" × 4".1" உள்ள குண்டுகள் (தகடுகள்) இந்த பிஸ்டலில் உபயோகிக்கப்படுகின்றன. இம்மாதிரி பிஸ்டல்களை நாங்கள் ஒருவரே அளிக்கிறோம். நெ. 7777, 12 ரவைகளுடன் விலை ரூ. 6—12—0. விசேஷ ஸ்பெஷல் தினுசு, 12 ரவைகளுடன் விலை ரூ. 8—12—0. பிஸ்டல் எண்ணெய் ஒரு புட்டி விலை 8 அணா. மேற்கொண்டு ரவை டஜன் விலை ரூ. 1—8—0.

கடிதத்தை ஆங்கிலத்தில் எழுதவும்.

AMERICAN TRADING Co.,
(G. M) JULLUNDUR CITY.

ஜூபிடர் &
சங்கீதா
தயாரிப்பு

ஜமீன்தார்

டைரக்ஷன் P.V. கிருஷ்ணன் .... ஸ்டூடியோ சென்ட்ரல்

பலஹீனர்களுக்கு

போர்டிஸ் (FCRTIS): மிகவும் ஆச்சரியமான புது தயாரிப்பு. மனித உடலின் சகல சக்திகளுக்கும் புத்துயிரளிக்க உத்திரவாதபளிப்பது. புதிய ரத்தம் உற்பத்தியாவதுடன், 5 முதல் 10 பவுண்டு எடை அதிகரிக்கிறது. முகத்திற்கு தேஜஸையும் அழகையும் அளிக்கிறது. இரவில் இந்திரிய ஸ்கலிதம், சகலமான பலஹீனங்கள், முதுகு வலி, இருமல், சளி, நீரிழிவு, நரம்புத் தளர்ச்சி, மலச் சிக்கல், அஜீரணம் இவைகளுக்கு நிச்சயமான நிவாரணம் அளிப்பது. இது ஒரு ஆச்சரியமான டானிக். உபயோகிப்பவர்களுக்கு பிரமிக்கத் தக்க ஆண் தன்மையை அளிக்கிறது. ஒரு புட்டி மருந்தை உபயோகிப்பதன் மூலம் 10 முதல் 15 வயது வரை இளமையாய் காணப்படுவார். இதை உபயோகிப்பவர் இந்த டானிக்கின் குணத்தையும், அது உடலில் செய்யும் குறிப்பிடத்தக்க மாறுதலையும் கண்டு பிரமிப்பார். இது மனிதத் தன்மையை அடையும்படிச் செய்து, வாழ்க்கையை இன்பமாக அனுபவிப்பதற்கு மிக உதவுகிறது. விலை: புட்டி ஒன்று ரூ. 3. தபால் செலவு அணா 14.

போர்டிஸ் 'டலா' (FORTIS 'TAIA') இது இரண்டாவது தயாரிப்பு. மர்மஸ்தானங்களில் பூசினதும் மின்சாரம்போல் பலன் அளித்து, அதற்கு இரும்புபோன்ற வலுவை அளிக்கிறது. இதில் சிறிதளவு ஒரு இறைச்சித் துண்டு மீது ஊற்றப்பட்டால், அது ஜீவன் பெறுவதுபோல் அசைந்து கொடுக்கும். இது நபும்ஸகத்திற்கு சிறந்த நிவாரணி என்பதற்கு இதுவே சான்று. இந்த 'டலா' மூலம், வாலிப சேஷ்டைகளால் ஏற்பட்ட தவறுகள் நீக்கப்படும். பாட்டில் ஒன்று ரூ. 3. தபால் செலவு அணா 12. இரண்டு மருந்தையும் சேர்த்து வாங்குவோருக்கு தபால் செலவு இனாம். இவைகளை மழை, குளிர், கோடை, எந்தக் காலத்திலும் உபயோகிக்கலாம்.

Sole Distribu'ors:

M/s. BAGH SINGH SIDHU & SONS, (G.M)

CHEMISTS AND DRUGGISTS

BAZAR BHAIRON :: JULLUNDUR CITY



இனாம்! இனாம்!! இனாம்!!!

எமது நெ. 501 கருப்பு மயிர் தைலத்தை (ரிஜிஸ்டர்டு) உபயோகிப்பதன் மூலம் எல்லா விதமான மயிரும் மைக் கருப்பாக மாறி, பின்னர் எப்பொழுதுமே கருப்பாக வளரும். இது மயிர்கள் உதிர்ந்து போவதைத் தடுத்து, மிகவும் நீண்டதாகவும் பிரகாசமாகவும், சுருண்டதாகவும் வளரச் செய்கிறது. புட்டி ஒன்றின் விலை

ரூ. 1—15—0;

3 புட்டிகள் (பூரா முறை) ரூ. 5—0—0.

இந்த அதிசயத் தைலத்தை எங்கும் பரப்ப, ஒவ்வொரு புட்டியுடனும் அழகிய பான்ஸி ரிஸ்ட்வாட்சும்; நியூகோல்டு மோதிரமும் அளிக்க நாங்கள் முடிவு செய்திருக்கிறோம். வாட்சின் அழகும், உறுதியும் 15 வருஷங்களுக்கு உத்திரவாதம். 8 புட்டிகள் வாங்குவோருக்கு 6 பான்ஸி ரிஸ்ட் வாட்சுகளும், 6 நியூ கோல்டு மோதிரங்களும் இனாம். அங்கீகரிக்காமல் போனால் பணம் வாபஸ்.

ஆங்கிலத்தில் கடிதம் எழுதவும்:

AMRIT PHARMACY (G. M.) Jullundur City.

காம சாஸ்திரம்

★

உலகத்தில் மிக்க அத்தியாவசியமான ஆண்-பெண் சேர்க்கையைப் பற்றிய 84 ஆசனங்களை உடைய, ரகசியக் குறிப்புகளுடன் கூடிய மிகவும் உயர்ந்த புத்தகம். 84 ஆசனங்களின் 200 வகை நிஜ போட்டோப் படங்கள்; தனித்தும், சேர்ந்தும் பல்வகை முறையில் போகம் துய்ப்பதுமானவை. இப்புத்தகம் நீங்கள் இதுவரை அறிந்திராத பல ரகசியங்களையெல்லாம் வெளிப்படுத்துகிறது. கல்யாணம் ஆகாதவர்கள் இப்புத்தகத்திற்கு எழுதற்க. 1 புத்தகம் விலை ரூ. 2-12-0. ரகசிய போட்டோ பலவகை தோற்றத்தில் கிடைக்கும். 25 கார்டுகள் தனித்திருப்பது ரூ. 2-12-0. 50 கார்டுகள் சேர்ந்திருப்பது விலை ரூ. 5-0-0. ஆங்கிலத்தில் கடிதம் எழுதவும்.

விலாசம்:

M/S FRENCH PHOTO SUPPLY COMPANY (G. M.),
JULLUNDUR CITY.

மூன்றே ரூபாய்க்கு

கைக்கடிகாரம்

இக்கடிகாரத்திற்கு உடனே ஆர்டர் செய்யுங்கள். அழகுக்கும், உறுதிக்கும் பத்து வருஷ உத்திரவாதம் உண்டு.

விலை ரூ. 3 தான்.

தபால் சார்ஜ் தனி.

SWISS WATCH SUPPLIERS

PUTLIGHAR, AMRITSAR.

பரிசு ரூ. 500

மாய மோதிரம்

மிக மிக சக்தி வாய்ந்தது. ரொம்பவும் கடினமான எண்ணமும் கைகூடும். விரும்பும் பெண்ணை மணக்கலாம். பரீக்ஷை உத்தியோகம், வழக்குகள், போ டிப் பரிசு, எதிலும் வெற்றி பெறலாம். மலடிகளும் குழந்தை பிறக்கும். கஷ்டங்களைப் போக்கி, உங்களுக்கு ஒரு மெய்க் காப்பாளனாய்த் துணை புரியும். விலை 8 அணா தான். அதிக சக்தி வாய்ந்த எக்ஸ்ட்ரா ஸ்பெஷல் ரூ. 1—4—0.

பலனில்லை யென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 500 பரிசளிக்கப்படும்.

Mahalakshmi Jotish Ashram

Azad Nagar :—: Amritsar.

உங்கள்
குடும்பங்களுக்கு வேண்டிய
அலுமினியம்

பர்த் ஸ்டேபிரைட்

பாத்திரங்களுக்கு

M.A. எத்திராஜுலு நாயுடு

7-A, எவினிங் பஜார் ரோடு

சென்னை.

பூத்தையல் மிஷின்

துணிகள்மீது நூலால் இயற்கைக் காட்சிகள், பூவேலைகள் போட லகுவானது. பெண்மணிகளுக்கு மிகவும் உபயோகமானது. நான்கு விதமான ஊசிகளுடன் கொண்ட பூரா மிஷின், விபரங்கள் கொண்ட இனாம் புஸ்தகத்துடன் நன்கு பாக்கிங் செய்யப்பட்டது. விலை ரூ. 5/-. தபால் செலவு ரூ. 1/-.

எம்பிராய்டரி டிஸைன் புஸ்தகம்

திருத்திய பெரிய பதிப்பு ரூ. 4/-. தபால் செலவு அணு 10. இரண்டும் சேர்ந்து ரூ. 7/-. தபால் செலவு ரூ. 1-8-0.

IMPERIAL COMMERCIAL Co., (G-M.)
JULLUNDUR CITY.

ரூ. 500 பெறுமானமுள்ள ஆபரணங்கள் இனாம்!

எங்கள் அமெரிக்கன் நியூ தங்கத்தை பிரபலப் படுத்துவதற்காக ரூ. 500 பெறுமானமுள்ள ஆபரணங்களை இனாம் ஸாம்பிளாக அளிக்கிறோம். வைரப் பட்டையடித்த 4 வளையல்களும், ஒரு புது டிசைன் நெக்லஸும், ஒரு ஜோடி ஜெய் ஹிந்த் காதணிகளும், 4 பப்பாய் பாஷன் மோதிரங்களும் அடங்கிய ஒரு சாம்பிள் பெட்டியுடன் அதிகப்படியான 4 தோலா அமெரிக்கன் நியூ தங்கத்தை முழுவதும் இலவசமாகத் தருவது என நாங்கள் முடிவு செய்திருக்கிறோம்.

இலவச தங்கமும், சாம்பிள் பெட்டியும் பெற இன்றே எழுதுங்கள்.

AMERICAN NOVELTY STORES,
Halka No. 22 (G.M.) AMRITSAR

டி.எஸ்.ஆர்

கோகுல் ஹேர்ஆயில்

தயாரிப்பு...

டி.எஸ்.ஆர் & கோ
கும்பகோணம்.

சென்னை நகரத்திற்கு டிஸ்ட்ரிபியூட்டர்கள்: சுராஜ் ஏஜன்ஸிஸ், 37, ஜானி ஜான்கான் ரோடு, மதராஸ்—5. கோயமுத்தூர், பாலக்காடு, நீலகிரிக்கு ஹோல் ஏஜன்டு: B. பாலபட்டாபி (1933-ல் ஸ்தாபிக்கப்பட்டது) கோயமுத்தூர்.



குண்டூசி

ஆகஸ்ட் 1952

இ ந் த ஊ சி யி ல்

ரேடியோவில் சினிமாப் பாட்டுகள்	9
"தர்ம தேவதா" (பட விமர்சனம்)	10
சர்க்காரின் கடைசிப் படப் பரிசு விழா	11
"கல்யாணி" (பட விமர்சனம்)	12
டி. ஆர். ராஜகுமாரி (மூவர்ணப் படம்)	13
நாகேந்திர ராவ் (வாழ்க்கை வர்ணனை) ...	15
நுனிப்புல்—"வெட்டுக்கிளி" ...	20
மந்திரி கேஸ்கர் எச்சரிக்கை ...	25
காற்றினிலே நக்ஷத்திரப் பேட்டி ...	27
"ஜமீன்தார்" (படக் காட்சிகள்)	28
சினிமாப் பாட்டுகளுக்கு கல்தா! ...	30
குண்டூசியைக் கேளுங்கள் ...	32
"ஆன்" (படக் காட்சிகள்) ...	38
இது செய்தி	40
சென்னை மேடையில் சென்ற மாதம்	46
செய்திப் படங்கள்	47
பொதுஜனம் பேசுகிறர்	51
புஸ்தகப் பொழுது	56
ராமராஜுவின் கனவு (சிறுகதை)...	59
பிரம்மலோகம்	67
நடனம் ஆடினர்	72
மூன்று பிள்ளைகள் (பட விமர்சனம்)	73
குண்டூசி டைரி	76

வருஷ சந்தா:

இந்தியா, இலங்கை ... ... ரூ. 6
வெளி நாடுகள் ... ... ரூ. 9

தனிப் பிரதி:

இந்தியா: 8 அணு. வெளிநாடு 12 அணு.
இலங்கை: 50 சதம்.

குறிப்பு:—"குண்டூசி"யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகள், விகடத் துணுக்குகள் முதலியவைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே. அவை நிஜ நபர் யாரையும் குறிப்பிடுபவை அல்ல.

குண்டூசி

ஆசிரியர்-பி.ஆர்.எஸ்.கோபால்

நிகரற்ற விநியோகமுள்ள மாத சினிமாப் பத்திரிகை

ஆகஸ்ட், 1952

பட்டை—5 ஊசி—11 பிரதி—59

ரேடியோவில் சினிமாப் பாட்டுகள்

சென்ற மாதம் நம்மைத் திடுக்கிட வைத்துவிட்டார் நம் புதிய விளம்பர இலாகா மந்திரி ஸ்ரீ கேஸ்கர். "ரேடியோவில் சினிமா இசைத் தட்டுகள் ஒலிபரப்பப் படுவது படிப்படியாகக் குறைக்கப் படும்" என்ற அவரது அறிவிப்புதான் இதற்குக் காரணம். "அப்படியானால் ரேடியோ நிலையங்களில் ஒலிபரப்பு நேரம் தினத்திற்கு மூன்று நான்கு மணி நேரமாகக் குறைக்கப் பட்டு விடுமா?" என்று பக்கத்திலிருந்த ரேடியோ ரஸிகர் கவலையுடன் கேட்டார். அவர் கவலைப் பட்டதில் நியாயமிருக்கிறது. நம் ரேடியோ நிலையங்கள் பெரும்பாலும் சினிமா இசைத் தட்டுகளை வைத்துத்தானே காலத்தை 'தள்ளி' வந்தனர்.

ரஸிகர்களுக்கு வெறுப்பு ஏற்படும் அளவிற்கு சினிமா இசைத் தட்டுகளையே வைத்து காதைத் துளைக்கச் சொன்னார்களா நம் படாதிபதிகள்? அல்லது நிலையங்கள் ஒன்றுக்கொன்று போட்டி போட்டுக் கொண்டு, ஒரு சில சினிமா இசைத் தட்டுகளையே வாரத்திற்கு—ஏன் சில சமயம் ஒரே தினத்தில் கூட!—இரு முறையோ மும் முறையோ வைக்கும்படி அவர்கள் வற்புறுத்தினார்களா? அல்லது சினிமாப் பாட்டுகளிலேயே அசல் 'டப்பா சங்கீத'மாயிருப்பதைத்தான் ரேடியோக்காரர்கள் தேர்ந்தெடுக்க வேண்டுமென்றோ, தங்கள் படத்திற்கு விளம்பரம் செய்ய வேண்டுமென்றோ மன்றாடினார்களா? இதெல்லாம் ஒன்றுமேயில்லை. ஒலிபரப்பும் நேரத்தை சுலபமாக ஓட்டுவதற்கும், பணச் சிக்கனம் செய்வதற்கும், ரேடியோ பெட்டிகள் அதிகரிப்பதற்காகவுமே ரேடியோ நிலையங்கள் சினிமாப் படாதிபதிகளிடம் தாமாக அனுமதி கோரிப் பெற்றுள்ளனர். அப்படியிருக்க, ஸ்ரீ. கேஸ்கர் தம் இலாகாவின் மேல் பாயாமல் சினிமாப் பாட்டுகளைத் தூற்றுவானேன்? 'சாக்கடை'யில் விழுந்தவன் ஓசைப் படாமல் குளிக்கப் போய் விட்டால் அல்லவா கௌரவமாயிருக்கும்!

ஆனால் ஸ்ரீ. கேஸ்கர் நினைப்பது போல சினிமாப் பாட்டுகள் எல்லாமே மட்டரகமானவை அல்ல. தற்போதைய படங்களில் பெரும்பாலும்—எந்த தேச சங்கீதத்திலும் சேராத கதம்ப ஒலிகளான 'டப்பா' சங்கீதமே தலை தூக்கி நிற்கிறது என்பதை நாம் மறுக்கவில்லை. இந்த அர்த்தமற்ற தலைவேதனை நம் படங்களிலிருந்து ஒழியவேண்டுமென்று நாம் பலமுறை எழுதியிருக்கிறோம். ஆனால் சினிமா இசைத் தட்டுகளில் கூட நல்ல பாட்டுகள் வெளிவருவதை நம் மந்திரி கவனிக்க வேண்டும். இந்த மாதிரியான நல்ல இசைத் தட்டுகளைக் கூட—சினிமாப் பாட்டுகள் என்ற பெயரில்—பகிஷ்கரிப்பதும் சினிமாவில் வராத பாட்டுகள் என்ற பெயரில் மட்டமான பாட்டுகளை ஒலிபாப்புவதும், இரண்டுமே விவேகமற்ற செய்கைகளாகும்.

ரேடியோக்காரர்கள் எப்படியோ போகட்டும். இப்படியாக, சந்தி சிரிக்கும் படியாய் அவமானம் அடைந்த பிறகாவது நம் படாதிபதிகளுக்கு புத்தி வருமா? வட நாட்டு 'ட்யூன்'களை அப்படியே காப்பியடிக்கும் வழக்கத்தை அவர்கள் விடுவார்களா?

"தர்ம தேவதா"வில் தமிழ்க் கொலை!

பொழுது போக்கு நிறைந்த ஆபாஸமற்ற படம்

பல பேர்கள் சேர்ந்து செய்யும் வேலை அவ்வளவாக சுகப்படாது என்று சொல்வார்கள். அதை உண்மைப் படுத்துவது போலத் தான் அமைந்து விட்டிருக்கிறது "தர்ம தேவதா"வின் கதைப் போக்கு. ஐந்து பேர்களின் முயற்சியாதலால் கதையும் பல சம்பவங்களைக் கொண்ட கதம்பமாக இருக்கிறது.

ஒரு கொடுங்கோல் மன்னனது வாழ்க்கையைச் சுற்றி வளருகிறது கதை. இறுதியில் அவனது புத்தி திருந்தும் படியாக சம்பவங்கள் நிகழ்ந்து சுபமாக முடிகிறது. இடையே, காதல், கத்திச் சண்டை இவைகளுக் கெல்லாம் நிறைய இடம் வைத்து கதையைப் பின்னியிருக்கிறார்கள். வசனங்கள் பற்றி ஒன்றும் உயர்வாகச் சொல்வதற்கில்லை.

பாட்டுகளின் சாகித்யமும் சாதாரணமாகவே உள்ளது. காலஞ் சென்ற சங்கீத டைரெக்டர் ஸி. ஆர். சுப்பராமன் சில நல்ல மெட்டுகளைக் கையாண்டிருக்கிறார் என்னும், பாட்டுகள் எடுப்பாக இல்லை.

ராஜ புத்திரியை வளர்க்கும் தாய் நந்தினியாக சாந்தகுமாரி நடிக்கிறார் படத்தில். நடிப்பில் முதலிடத்தை இவரே பெறுகிறார். சோகக் கட்டங்களில் மிகவும் சோபிதமாக இருக்கிறது இவரது நடிப்பு. ராஜகுமாரி வாஸந்தியாக வரும் கிரிஜாவின் தோற்றம் நன்றாக இருக்கிறது. நல்ல முக வெட்டும் இருக்கிறது. நடிப்பில் தான் நிறைய அபிவிருத்தி ஏற்பட வேண்டும். லம்பாடி பிஜ்லியாக லலிதா குற்றமற்ற வகையில் நடித்திருக்கிறார். அவரது நடனம் ரஸிகர்களுக்கு ஒரு விருந்தாக இருக்கிறது. இவர் ஆண் வேஷத்தில் வரும்போது நன்றாகத் தான் இருக்கிறது. அதிக சந்தர்ப்பம் இல்லை எனினும் உள்ளவரை நன்றாகவே நடித்திருக்கிறார் ராணியாக வரும் லக்ஷ்மி பிரபா. ஆனால், அவர் நடனம் ஆடியிருக்க வேண்டியதில்லை.

சூரசேனனாக வரும் கௌளிக் நடிக்கும் முதல் படம் இது என்ற அளவில் பார்த்தால், பாதகமில்லை என்றே கூறத் தோன்றுகிறது. முக்கமாலாவின் நடிப்பு நன்றாகவே இருக்கிறது. கொடுங்கோல் மன்னனாக வரும் லிங்கமூர்த்தி ஒரு நல்ல நடிகர். ஆனால், மிகையாக இருப்பதால் அவர் நடிப்பு இப்படத்தில் பரிமளிக்கவில்லை.

இப் படத்திலுள்ள பெருங் குறை தமிழ்க் கொலைதான். தமிழ் நடிகர்களைக் கொண்டு எல்லோருக்குமே குரல் இரவல் கொடுத்திருக்கலாம். சிலர் நன்றாக நடித்திருந்தும் அவர்களது தமிழ்க் கொலையினால் நடிப்பை நம்மால் ரஸிக்க முடியவில்லை.

டைரெக்ஷனைப் பற்றி சர்வ சாதாரணம் என்று தான் குறிப்பிட வேண்டும். கதை பல இடங்களில் ஆமை வேகத்தில் நகருகிறது. கத்திச்சண்டைக் காட்சிகளை மேலும் விறுவிறுப்புடன் தயாரித்திருக்க வேண்டும்.

படப் பிடிப்பு பின் பகுதியில் நன்றாக இருக்கிறது. ஒலிப் பதிவு சுகமில்லை. பல இடங்களில் ஒரே இரைச்சலாக இருக்கிறது.

மொத்தத்தில் "தர்ம தேவதா" பொழுது போக்குக்கான அம்சங்கள் கொண்ட, ஆபாஸமற்றபடம். —"ஸ்ரீ"

"தர்ம தேவதா"

தயாரிப்பு : ராகினி பிலிம்ஸ்

வெளியீடு : நாராயணன் கம்பெனி

ஸ்டுடியோ : வாஹினி.

டைரெக்டர் : பீ. புல்லய்யா

நடிகர்கள் : சாந்தகுமாரி, லலிதா, கிரிஜா, லக்ஷ்மிப் பிரபா, கௌளிக், முக்கமாலா, ரேலங்கி, மற்றும் பலர்.

நீளம் : சுமார் 18,000 அடிகள்.

சர்க்காரின் கடைசிப் படப் பரிசு விழா

ராஜாஜி அபிப்பிராயத்திற்கு பலர் கண்டனம்

குமாரசாமி ராஜா மந்திரி சபை காலத்தில் அமைக்கப்பட்டு, சமீபத்தில் கலைக்கப்படவிருக்கும் சென்னை அகாடமி சார்பில், 1950ம் வருஷத்தின் சிறந்த நக்ஷத்திரங்களுக்கும், சிறந்த படத் தயாரிப்பாளர்களுக்கும் அரசாங்கத்தின் பரிசுகள் வழங்கப் பட்டன. இந்தப் பரிசளிப்பு வைபவம், சென்ற மாதம் 27ந் தேதி சென்னை செயின்ட்மேரீஸ் ஹாலில் நடைபெற்றது. வைபவ ஆரம்பத்தில் டைரெக்டர் கே ராம்னுத் அனைவரையும் வரவேற்றுப் பேசினர்.

நல்ல படங்கள் தயாரிக்க ஊக்கமளிக்கும் இந்த அகாடமியைக் கலைத்து விடும் அரசாங்கத்தின் முடிவுக்கு தென்னிந்திய பிலிம் சேம்பர் தலைவர் அதிருப்தி தெரிவித்தார். தற்போதைய அரசாங்கம் சினிமாத் தொழிலை அலட்சியம் செய்வதைப் பலர் கண்டித்தனர்.

சிறந்த நடிகராக நாகய்யாவும், சிறந்த நடிகையாக அஞ்சலி தேவியும், "ஏழை படும் பாடு" தயாரிப்பாளர் ஸ்ரீராமுலு நாயுடுவும், "ஜீவிதம்" படத் தயாரிப்பாளரான ஏவி. மெய்யப்பனும் வந்திருந்து பரிசுகளைப் பெற்றுக் கொண்டனர். நக்ஷத்திரங்களுக்கு பதக்கங்களையும், படத் தயாரிப்பாளர்களுக்கு கோப்பைகளையும், அகாடமி சார்பில் வர்த்தக இலாகா மந்திரி கனம் பட்டாபி ராமராவ் வழங்கினர்.

பதக்கத்தைப் பெற்றுக் கொண்ட அஞ்சலி தேவி ஆரவாரம் செய்த ரஸிகர்களுக்கு தமது வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டார். பரிசைப் பெற்றுக் கொண்ட நாகய்யா, 'அகாடமி அற்பாயுளில் முடிந்து விட்ட போதிலும், என்னை கௌரவித்ததற்காக, என் சார்பிலும், சகோதரி அஞ்சலி தேவி சார்பிலும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்" என்று கூறினர்.

டைரெக்டர் ஸ்ரீராமுலு நாயுடு வந்தனம் தெரிவித்து சர்க்காரின் நடத்தையைக் கண்டித்து காரசாரமாகப் பேசினர். "அரசாங்கத்தின் முடிவைக் கண்டு ஆச்சரியப்பட வேண்டியதில்லை. அவர்கள் சினிமாத் தொழிலிலிருந்து பணம் வசூல் பண்ணுவதில் தான் அக்கரை கொண்டுள்ளனர். பாக்கி விஷயங்களில் அலட்சியமே காட்டி வருகின்றனர்"— இப்படிப் பேசி, உலகிலேயே இரண்டாவது ஸ்தானம் வகிக்கும் இத் தொழிலை சர்க்கார் கவனிக்காமல் இருப்பதற்குக் கண்டனம் தெரிவித்தார்.

பரிசுகளை வழங்கிய மந்திரி, குற்றச்சாட்டுகளுக்கு சமாதானம் கூறும் முறையில் பேசினர். "சினிமாத் தொழில்மீது நான் பெரும் மதிப்பு வைத்துள்ளேன். நல்லதோ, கெட்டதோ மக்களிடம் அதிகப் பிரபலமாக இருப்பது சினிமாதான். பொழுது போக்குக்கான இத் தொழிலை வெறும் லாபகரத் தொழிலாகக் கருதாமல் மக்களுக்குக் கல்வி புகட்டும் சாதனமாகக் கருத வேண்டும். அரசியல் சட்டப்படி, சினிமாத் தொழில் மத்திய சர்க்காருக்கு உட்பட்டது. ஆகவே சினிமாப் பட அபிவிருத்தி வேலையையும் அவர்களிடமே விட சென்னை அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது."

இறுதியில் டாக்டர் கிருஷ்ண பிள்ளை வந்தனோபசாரம் கூறினர்.

பிறந்தநாள் வைபவம்

பிரபல நக்ஷத்திரம் புஷ்பவல்லி தம் புத்திரன் ஐ. வெங்கட-பார்த்த-சேஷ-ராமாவதாரம் பிறந்த நாளை சென்ற மாதம் 29ந் தேதி சிறப்பாகக் கொண்டாடினர். பட உலகப் பிரமுகர்களும், பத்திரிகாசிரியர்களும் விஜயம் செய்து குழந்தையை ஆசீர்வதித்தனர்.

பத்திரிகைக் காட்சி

விஜயாவின் "கல்யாணம் பண்ணிப் பார்" தமிழ் படத்தின் பத்திரிகைக் காட்சி வாஹினி ஸ்டுடியோவில் சென்ற மாதம் 31ந் தேதி நடைபெற்றது. இக் காட்சிக்கு ஆசிரியர்கள் குடும்ப சமேதராய் விஜயம் செய்து பார்த்தனர். ஆரம்ப முதல் கடைசிவரை ஹாஸ்யமும் சங்கீதமும் நிறைந்துள்ள—இம் மாதம் வெளிவரும்—இப் படம் பிரமாதமான பொதஜன ஆதரவைப் பெறக்கூடும் என்று தோன்றுகிறது.

‘பைத்தியக்கார’ப் படம் “கல்யாணி”

மாடர்ன் தியேட்டர்ஸின் மாபெரும் தோல்வி

சமூகப் படங்களை மக்கள் விரும்பிப் பார்ப்பது போக, அவைகளை மக்கள் வெறுக்கஆரம்பிக்கும்நிலைமைவந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. சமூகப் படக் கதை என்பது "கல்யாணி" படக் கதை மாதிரித்தான் இருக்கும் என்றால் 'வேண்டவே வேண்டாம் சமூகப் படங்கள்' என்றுதான் சொல்லத் தோன்றும்.

"கல்யாணி" கதை பைத்தியக்காரக் கதை: கதா நாயகனுக்குப் பைத்தியம் பிடித்து, அது தெளிவடைகிறபோது, அவன் தாயாருக்குப் பிடித்து விடுகிறது அந்தப் பைத்தியம். அர்த்தமற்ற, நடக்க இயலாத பல சம்பவங்களைக் கொண்டு பின்னப்பட்ட இதுபோன்ற இன்னும் சில கதைகளைப் படமாக பார்க்க நேர்ந்தால் நிச்சயம் ரஸிகர்களுக்கும் பைத்தியம் பிடித்து விடக்கூடும்! மாடர்ன் தியேட்டர்ஸ் கதை இலாகாவின் அபத்தமான கற்பனைக் களஞ்சியமே "கல்யாணி" படக் கதை.

அரைப் பைத்தியத்தைக் கணவனாக அடைந்த கல்யாணி, மாமியின் கொடுமைகளுக்கு ஆளாகி வீட்டைவிட்டுவிரட்டப்படுகிறாள். பைத்தியம் தெளிந்தகணவன் மூர்த்தி மனைவியைத்தேடி சென்னைக்கு வருகிறான்; சந்திக்கிறான். பிறகு, ஒரு டாக்டர் வீட்டில் போய் திருட, அவர் தான் மூர்த்தியின் தந்தை என்பது வெளிப்பட்டு, கதை சுபமாக முடிகிறது. இதுதான் கதை. மூர்த்தியின் பைத்தியம் தெளியும் முறையும்; அவன் திருடப் போனது அவனது தந்தை வீடாகவே இருப்பது; இப்படியான சம்பவங்கள் அசட்டுக் கற்பனைகள். படத்தின் வசனங்கள் பரவாயில்லை.

பாட்டுகள் எதுவும் கவர்ச்சிகரமாகவோ, மனதில் நிற்கும்படி இனிமையாகவோ இல்லை. ட்யூன்களோ, ஸாஹித்தியமோ உயர்தரமாக இல்லை.

தமக்குப் பொருந்தாத ஒரு கதாபாத்திரமாய் இப்படத்தில் வருகிறார் எம். என் நம்பியார். ஆகவே அவரது நடிப்பு சோபிதமாக இல்லை. அவரது அரைப் பைத்திய நடிப்பு அவர்மீது நமக்கு பச்சாத்தாபத்தை ஏற்படுத்துவதை விட்டு, கேலிக் கூத்தாக இருக்கிறது.

"கல்யாணி"யாக வரும் பி. எஸ். சரோஜா நடிக்க முயற்சித்திருக்கிறார் எனினும் அவரது நடிப்பு எடுப்பாக இல்லை. காரணம், டைரெக்டரின் கவனக் குறைவுதான். எம். சரோஜா கூடிய வரை தம் பாகத்தைக் குற்றமற்ற முறையில் நடித்திருக்கிறார். பண ஆசை பிடித்த மாமியாக பழங்காலத்து நடிகை பி. எஸ். சிவபாக்கியம் நன்றாக நடித்திருக்கிறார். முத்துலக்ஷ்மி—கருணாநிதி ஹாஸ்ய ஜோடியின் ஹாஸ்யம் அபத்தமாகவும், அமிதமாகவும் இருக்கிறது. இதற்கு முந்திய படங்கள் மூலம் முத்துலக்ஷ்மி தமக்குக் கிடைத்த புகழை இப் படத்தில் இழந்து விடுகிறார்.

ஒளி, ஒலிப்பதிவுகள் பாதகமில்லை. டைரெக்ஷன் மகா மட்டம். அவர்களது கவனக் குறைவே படத்தின் தோல்விக்குப் பெருமளவு காரணமாக இருக்கிறது.

மொத்தத்தில் "கல்யாணி" மாடர்ன் தியேட்டர்ஸுக்கு ஒரு பெரும் தோல்வி என்றே கூறவேண்டும்.

—"ஜாம்பவான்"

"கல்யாணி"

தயாரிப்பு & ஸ்டுடியோ: மாடர்ன் தியேட்டர்ஸ்

டைரெக்ஷன்: ஆசார்யா, மஸ்தான்.

நடிகர்கள்: எம். என். நம்பியார், டி. பாலசுப்ரமண்யம், எம். ஜி. சக்ரபாணி, பி. எஸ். சரோஜா, எம். சரோஜா, முத்துலக்ஷ்மி மற்றும் பலர்.

சினிமாவுக்கெனவே "வாழப் பிறந்தவள்"
எனத் தோற்றுகிறதல்லவா டி. ஆர்.
ராஜகுமாரியைப் பார்க்கும்போது!



நாகேந்திர ராவ்

அபூர்வ சகோதரர்கள்

ஹரிச்சந்திரா

நம்மில் பெரும் பாலோருக்கு ஒன்று அல்லது இரண்டு பாஷைகளுக்கு மேல் சுட்டுப் போட்டால் கூட வர மாட்டேன் என்கிறது. ஆனால், குறிப்பிட்ட சிலர் இந்தியாவில் பேசப்படும் அத்தனை பாஷைகளையும் கற்றுக் கொண்டு விடுவதோடு, சில அந்நிய பாஷைகளைக் கூட கற்றுக் கொண்டு விடுகின்றனர். இதை ஒரு ஆச்சரியப் படத்தக்க பிறவித் திறமை என்று நான் சொன்னால் நீங்கள் ஆட்சேபிக்க மாட்டீர்கள் எனறே நினைக்கிறேன். இந்த அபூர்வ

வாழ்க்கை வர்ணனை

••••• குண்டூசி •••••

வலது புறம்:
கோவலனில்
நாகேந்திர ராவ்
லீலா
கீழே:
அபூர்வ
சகோதரர்களில்
நாகேந்திர ராவ்
நாராயண ராவ்

பிரவித் திறமையைப் பெற்றுள்ளவர் நடிகர் – டைரெக்டர் நாகேந்திர ராவ். அவர் தம் தாய் பாஷையான மஹாராஷ்டிரத்தோடு கூட தமிழ், தெலுங்கு, கன்னடம், ஹிந்தி, ஆங்கிலம், ஆகிய பாஷைகளையும் எழுதப் படிக்கப் பேசக் கற்றுக் கொண்டிருக்கிறார்! இன்னமும் ஏதேனும் புது பாஷையைக் கற்றுக்கொள்ளும் அவா அவரை விட்டபாடில்லை!

ஆறு பாஷைகள் அறிந்த நாகேந்திர ராவ் தமிழ், தெலுங்கு, கன்னடம், ஹிந்தி, ஆகிய பாஷைப் படங்களில் நடித்து, "நான்கு பாஷைகளில் நடித்த முதல் நடிகர்" என்ற புகழைப்பெற்று விளங்குகிறார். சீக்கிரமே அவர் ஆங்கிலம், மஹாராஷ்டிரம், வங்காளி, போன்ற மற்றும் பல பாஷைப் படங்களில் நடித்து வைத்தால்கூட நாம் ஆச்சரியப் படுவதற்கேயில்லை.]

இதில் ஒரு விசேஷம் முக்கியமாய் குறிப்பிடப் படவேண்டும். பள்ளிக்கூடத்தில் நாகேந்திர ராவ் படித்ததெல்லாம் மூன்றாவது பாரம் வரையில்தான். பிறகு அவர் தாமே தம் சுய முயற்சி மூலமே — ஆசிரியர் இன்றியே — இவ்வளவு பாஷைகளையும் கற்றிருக்கிறார். இதே அவருக்கு ஒரு பெரிய வெற்றி என்றுகூட கூறலாம்;

அபூர்வ சகோதரர்கள்

இடதுபுறம்: பூகைலா

பாஷைகள் விஷயத்தில் மட்டும்தான் அவருக்கு மிகுந்த அக்கறை என்று எண்ணிவிடக் கூடாது. எந்த விஷயத்தையும் அவர் சும்மா விட்டுவிடுவதில்லை. தம்மாலான முயற்சிகளைச் செய்து அதில் தேர்ச்சி பெற முயலுவது தான் அவரது குணம். வேதம் வேதாந்தம், மின்சாரம், இப்படியாகப் பலதரப்பட்ட விஷயங்களைப் படித்து அவர் சதா ஆராய்ச்சி செய்துகொண்டேயிருக்கிறார். முதலில் ஒரு நாடக மேடை நடிகராக வாழ்க்கையைத் தொடங்கிய அவர், பிறகு சினிமா நடிகராகி, டைரெக்டராகி, படாதிபதி ஆகவும் பார்க்கிறார் என்றால், அதற்கு முக்கியமாக அவருடைய சலியாத உழைப்புதான் காரணம் ஆகும்.

மைசூர் சமஸ்தானம், சித்தல்துர்கம் ஜில்லா, ஹொளல்கரே என்ற நகரில் 1896ம் வருஷம் ஜூன் மாதம் 23ந் தேதியன்று பிறந்தவர் நம் நாகேந்திர ராவ். அவரது தகப்பனரான ரட்டேஹள்ளி கிருஷ்ண ராவ் என்பவர் மைசூர் அரசாங்கத்தின் மராமத்து இலாகாவில் ஒரு ஓவர்ஸியராக வேலை பார்த்து



மூன்று பிள்ளைகள்

வந்தார். அவருக்குப் பிறந்த மூன்று பிள்ளைகளில் நடுப் பிள்ளையாகப் பிறந்தவர் தான் நம் நாகேந்திர ராவ். ராவுக்கு ஒரு தமக்கையும் கூடப் பிறந்திருக்கிறார்.

ராவ் ஐந்தாம் வயதில் தம் சொந்த ஊர்ப் பள்ளியில் சேர்க்கப் பட்டார். அவர் அப் பள்ளிக்கூடத்திலேயே படித்து, மூன்றாவது பாரத்தை எட்டிப் பிடித்தார்.

இந்த சமயத்தில் (1906ல்) ராவின் தகப்பனார் காலமானார். பங்களூரில், சர்க்கார் உத்தியோகங்களில் இருந்து வந்த அவரது இரு மாமன்மாரின் வேண்டுகோளுக்கிணங்க குடும்பம் பங்களூருக்குச் சென்று வசிக்கலாயிற்று. ராவ் பங்களூரில்

பூகைலாஸ்

உள்ள தோட்டண்ணா ஹைஸ்கூலில் மூன்றாவது பாரத்தில் சேர்க்கப் பட்டார்.

நாகேந்திர ராவ் சிறு வயதிலேயே இனிய சாரீரத்தையும், சங்கீதத்தில் மிகுந்த ஆசையையும் இயற்கையாகவே பெற்றிருந்தார். தாமாகவே பாடிப் பழகி, பிறர் விரும்பக்கூடிய அளவுக்கு பாடும் திறமையையும் அவர் அடைந்தார். இந்த சமயத்தில் அவருக்கு நாடகங்களில் நடிக்க வேண்டுமென்ற தவிர்க்க முடியாத அவா ஏற்பட்டது. அதற்காக அவர் பெரும் முயற்சி ஏதும் செய்யாமலே மைசூரில் நடந்து வந்த ஒரு தொழில் நாடகக் கம்பெனியில் பெண் வேஷத்தில் நடிக்கும் சந்தர்ப்பம் கிட்டியது. அவருக்கு அப்பொழுது பத்தே வயதுதான் ஆகியிருந்தது. அந்த நாடகத்தில் நடித்ததால் அவர் அடைந்த பலன் என்னவென்று கேட்கிறீர்களா! இரவலாக தம் தமக்கையிடம் வாங்கிப் போட்டுக் கொண்டு சென்ற நகைகளை

(தொடர்ச்சி 68-ம் பக்கத்தில்)

கோவலன்

பொது மக்களின் விருப்பம்

ஆயிரக்கணக்கான ஜனங்களுக்கு பிடித்திருக்கும் பிலிமுக்கு ஒரு பிரத்தியேக குணம் இருக்கும். அதாவது குறிப்பிட்ட வேளையில் ஒவ்வொருவருக்கும், மனதிற்கும் கண்ணுக்கும் பிடித்தமான எதையாவது கொடுக்கிறது. ஆனால் இத்தன்மை தற்காலிகமானது. நேற்று பொது மக்களுக்கு பிடித்தமாயிருந்தது இன்று அப்படியில்லாமலும், இன்று பிடித்தமாயிருப்பது நாளை அப்படியில்லாமலும் இருக்கலாம். நல்ல உன்னத பிலிமுக்கு மக்களின் ஆதரவு கிட்டும்.

'டீ'யை பொறுத்த மட்டில் பொது மக்களின் விருப்பம் வளர்ந்துகொண்டேயிருக்கு. தினந்தோறும் மக்கள் 'டீ'யின் அருமையான ஒப்பற்ற குணங்களை பற்றி தெரிந்து கொள்ளுகிறார்கள். ஒவ்வொருவருக்கும் குறிப்பிட்ட வேளையில் உற்சாகம், ஊக்கம், விச்ராந்தி இவைகளை கொடுக்கிறது. வேறென்றுக்கும் கொடுக்க முடியாத இன்பத்தை 'டீ' எல்லோருக்கும் கொடுக்கிறது. 'டீ'யின்மேல் பொது மக்களுக்கிருக்கும் விருப்பம் கால, அளவில்லாதது.

டீ

உங்களுக்கு அதிக
இன்பத்தை கொடுக்கிறது.

சென்ட்ரல் டீ போர்டாரால் வெளியிடப்பட்டது

நுனிப்புல்

வெட்டுக்கிளி

'ஆகஸ்டு மாதத்திற்கு ரஸிகர்களுக்கு எந்த விஷயத்தைப் பற்றிக் கூறுவது?' என்ற பிரச்னை வந்ததும், எனக்குச் சட்டென்று "மரியாதை வாரம்" தான் ஞாபகத்திற்கு வந்தது. சென்ற வருஷம் இந்த மாதம்தான், சென்னை மாகாண போலீஸ் இலாகாவினர், ஜரூரா "மரியாதை வார"த்தைக் கொண்டாடினார்கள். இப்படிப்பட்ட அதிசயமான — ஆனால், அவசியமான — ஒரு வாரத்தைப் பற்றிப் பலருக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. நம் தேசம் சுதந்திரம் அடைந்த பின், முதன் முதலில் தபால் இலாகாவினரும், பின்னர் சென்ற வருஷத்தில் போலீஸ் இலாகாவினரும் இப்படி ஒரு வாரத்தை அனுஷ்டித்தார்கள். மேற்படி இரு இலாகாக்களும், 'பொதுமக்களின் நலனுக்காவும், உதவிக்காகவும் ஏற்பட்டவை' என்பதை, அவைகளில் பணி ஆற்றுவோர் உணர்ந்து, பொது மக்களிடம் மரியாதையாகப் பழகுதல் வேண்டும் என்பதை அவர்களுக்கு ஞாபகமூட்டுவதே இந்த மரியாதை வாரத்தின் தாத்பர்யம். ஒரே வாரம் அனுஷ்டிப்பதன் மூலம் இலாகாவிலுள்ளோர் நிரந்தரமாக மரியாதை பழகிக் கொண்டுவிடுவார்கள் என்பது இந்த வாரத்தைப் புகுத்தியவர்களின் நோக்கமாக இருத்தல் வேண்டும். நோக்கம் என்னவோ. நல்ல நோக்கம் தான்; ஆனால், நடைமுறையில் அது எவ்வளவு தூரம் சாத்தியமாகி இருக்கிறது என்பது வேறு விஷயம்! நிற்க.

• • •

என்னைக் கேட்டால் இப்படிப்பட்ட ஒரு வாரம், மற்ற இலாகாக்களைவிட சினிமா உலகில் கொண்டாடப்பட வேண்டியதுதான் மிகப் பொருத்தம். அனுஷ்டிக்கப்படுவது அத்தியாவசியமான ஒரு தேவை என்றுகூடக் கூறுவேன். ஏனெனில், இத்தொழிலின் பல்வேறு துறைகளிலும் வேலை பார்த்து வரும் நூற்றுக் கணக்கானவர்களில் பாதிப் பேருக்கு மேல் 'மரியாதை' என்ற பதத்திற்கு அகராதியில் அர்த்தம் தேடக்கூடிய ஆசாமிகள். இந்தப் பச்சையான உண்மையை வெளியிட எனக்கு வெட்கமாகவும் வருத்தமாகவும்தான் இருக்கிறது. அவர்களது நடவடிக்கைகளிலும், பேச்சுகளிலும் 'மரியாதை' என்பது மருந்துக்குக்கூட இருப்பதில்லை. 'மரியாதை கொடுத்து மரியாதை வாங்கவேண்டும்' என்பது அவர்களில் பலருக்குத் தெரியாத விஷயமாக இருப்பது வருந்தத்தக்க விஷயம். முழுக்க முழுக்க, பொது ஜனங்களின் ஆதரவில் — அவர்களது செலவில் — வளரும் தொழில் இது. ஆகவே, அத்தொழிலில் இருக்கிறவர்கள் பொதுமக்களிடம் மரியாதையுடனும் அன்புடனும் நடந்துகொள்ள வேண்டுவது அவசியம். அதற்கு, அப்படிப்பட்டவர்கள் மரியாதை 'படித்துக்கொள்ள' வேண்டியது மிக மிக முக்கியம்.

• • •

சினிமாத் தொழிலின் ஒவ்வொரு துறையிலுள்ளவர்களும் மரியாதை வாரம் கொண்டாடுவது அவசியம். எனினும், முக்கியமாக ஸ்டுடியோக்களில் இது தவறாது அனுஷ்டிக்கப்பட வேண்டும். இப்படி நான் கூறக் காரணங்கள் இல்லாமல் இல்லை. ஸ்டுடியோக்களின் 'துவாரபாலகர்'களான காவல்கார கூர்க்காவும், விசாரணை ஆபீஸரும் மரியாதை படிக்கவேண்டிய முதல் புள்ளிகள். ஸ்டுடியோ முகப்பில் காவல் காக்கும் கூர்க்கா மூர்க்கதனமாக யிருக்கக் கூடாது. புரியாத பாஷையிலோ, அல்லது உடைந்த தமிழிலோ விரட்டி அடிக்கும் 'குணம்' அவனிடமிருந்து விடைபெற வேண்டும். அவனைத் தாண்டி உள்ளே போய் விட்டால் 'ஸ்ரீமான் விசாரணை ஆபீஸர்' இருக்

றார். அவரின் கெடுபிடி பிரமாதமாக இருக்கும். மூஞ்சி கொடுத்துக்கூடப் பேசமாட்டார். ஆள் வந்ததையே சட்டை பண்ணாமல் அழுத்தலாக இருப்பார். ஸ்டுடியோவே தம்மால்தான் நடக்கிறது என்ற நினைப்புக்கூட அவருக்கு உண்டு. பல நிமிஷங்கள் கால்கள் கடுக்க நின்ற பிறகு அந்தப் பெரியவர் கொடுக்கும் பதில் பட் பட் டென்றுதான் தெரிக்கும். மரியாதை தெரிந்து கொள்ள வேண்டிய மாபெரும் இரண்டாவது மனிதர் இவர்.

• • •

ஸ்டுடியோவைத் தேடிவரும் பொது மக்களில் பாதிப் பேர்வழிகள் ஆவலுடன் வேடிக்கை பார்க்க வருகிறவர்கள்; மற்ற பாதிப் பேர்கள் அங்கு ஏதாவது வேலை கிடைக்குமா வென்று வருகிறவர்கள். ஆகவே, மேற்குறிப்பிட்ட ஸ்டுடியோ சிப்பந்திகள் இருவரும் வருகிறவர்கள் அனைவரிடமும் 'கருணாமூர்த்தி'களாக நடந்து கொள்ள முடியுமா! அப்படி நடந்துகொள்ள ஆரம்பித்தால் ஸ்டுடியோவில் ஒழுங்காக வேலை நடந்த மாதிரித்தான் என்று சொல்லலாம். வாஸ்தவம்; எனக்கும் தெரிந்த விஷயம்தான் அது. ஆனாலும் வந்தவர்களை "இல்லை" என்று சொல்லித் திருப்பி அனுப்புவதிலும் இரண்டுவிதம் இருக்கிறதே! மேலே விழுந்து பிடுங்குவதுபோல சீறி, அவர்களை விரட்டியடிப்பது ஒரு வழி. அதையே அன்புடன், மரியாதையுடன், நாசூக்காக, மற்றவர் மனம் நோகாதபடி சொல்லி அனுப்புவது மற்றொரு வழி. இவைகளில் இரண்டாவது வழியைப் பின்பற்றுவதனால் நஷ்டம் ஒன்றும் வந்துவிடப் போவதில்லை. பரஸ்பரம் மரியாதையைக் காப்பாற்றிக் கொள்ளலாமே!

• • •

எல்லா ஸ்டுடியோக்களிலுமே இந்த 'துவாரபாலகர்கள்' இப்படித்தான் நடந்து கொள்கிறார்கள் என்று நான் குற்றம் கூறிவிடத் தயாராயில்லை. நான் பல ஸ்டுடியோக்களுக்கும் சென்றிருக்கிறேன்; அங்கு இந்த இருவர் மற்றவர்களிடம் எப்படி நடந்து கொள்கிறார்கள் என்பதையும் கவனித்திருக்கிறேன். 'ஒவ்வொரு விதிக்கும் விலக்கு உண்டு'

உறுதிக்கும் நாகரீகத்திற்கும்

மைசூர் ஸில்க்ஸ்

ஜார்ஜெட்கள், கிரேப்கள், புடவைகள், கவர்ச்சியான டிஸைன்கள்! நூதனமான வர்ணங்கள்!

கவர்ன்மென்டு ஸில்க் வீவிங் பாக்டரி,

மைசூர்.

மதராஸ் ஆர்ட் புரொடக்‌ஷன்ஸின் ''ரோஹிணி'' தமிழ் தெலுங்குப் படங்களில் மாதுரியே பிரதம பாகத்தில் நடித்துக்கொண்டு வருகிறார்.

என்பதுபோல ஒன்றிரண்டு ஸ்டுடியோக்களில் மட்டுமே மரியாதைப் பட்டவர்களும் இருக்கின்றனர். பெரும்பாலான ஸ்டுடியோக்களில்—படே படே ஸ்டுடியோவில் கூடத்தான்—இந்த அவல நிலைதான். இது சின்ன விஷயமாகத் தோன்றலாம். ஆனால், சம்பந்தப்பட்ட முதலாளி இதை கவனிக்காது வளர விட்டு விட்டால் இதுவே பொதுஜன மனக் கசப்புக்குக் காரணமாகி அதனால் வெறுப்பு ஆரம்பமாகிவிடக் கூடும் என்பதை அவர்கள் மறந்துவிடக் கூடாது.

• • •

மரியாதை தெரிந்து கொள்ள வேண்டியவர்கள் நிறைந்த அடுத்த இடம் சினிமாத் தியேட்டர்கள். அங்கு வேலை பார்க்கும் ஊழியர்கள், இங்குள்ளவர்கள் பொது மக்களிடம் கண்டிப்பாக மரியாதையுடனும், அன்புடனும் நடந்துகொள்ள கடமைப்பட்டவர்கள். காரணம், அன்றாட கவலைகளையும் விசாரங்களையும் மறக்கவே மனிதன் படம் பார்க்கப் போகிறான்; சும்மாப் போகவில்லை: தான் கஷ்டப்பட்டு சம்பாதித்த பணத்தைக் கொட்டிக் கொடுத்து டிக்கெட் வாங்கிக் கொண்டுதான் போகிறான். போகும் இடத்தில் அவன் மனம் வருந்தும்படி யாரேனும் மரியாதைக் குறைவாக நடந்துகொள்ள நேரிடுவதாக வைத்துக் கொள்ளுங்கள். அப்பொழுது அவன் மனம் எவ்வளவு தூரம் வேதனைப்படும்! 'பொது மக்கள் கொடுக்கும் பணத்தில்தான் தனக்கு சம்பளம் கொடுக்கப்படுகிறது. தான் அவர்களின் ஊழியன்' என்பதையே மானேஜர் முதல் 'கேட் கீப்பர்' வரை உள்ளவர்கள் மறந்து விடுகிறார்கள். இனாம் டிக்கெட்டில் வந்தவர்களை நடத்துவது போல, சில சமயங்களில் அவர்களிடம் கேவலமாகவும் நடந்து கொள்கின்றனர்.

• • •

'இனாம் டிக்கெட்' என்றதும் தியேட்டரில் நடக்கும் அது சம்பந்தமான மரியாதைக் குறைவான நடவடிக்கைகளையும் என்னால் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை. ஒரு தியேட்டரில் ஒரு குறிப்பிட்ட படம் நடக்கிறது என்று வைத்துக் கொள்வோம். படத்தின் உரிமையாளருக்கும் தியேட்டர்காரர்களுக்கும் ஏதாவது ஒரு விஷயமாக மனக்கசப்பு ஏற்பட்டிருக்கலாம். அவர்களிடையே உள்ள விரோதத்தைப் பற்றி நமக்கு அக்கறை இல்லை. ஆனால், அதை அவர்கள் 'இனாம் பாஸ்' கொண்டு வருகிறவர்களிடம் காட்டிக் கொள்வது இருக்கிறதே, அது எவ்வளவு கீழ்த்தரமான செய்கை! தியேட்டர்காரர் கொடுக்கும் இனாம் பாஸ்களைக் கொண்டு வருகிறவர்களிடம் பட உரிமையாளரின் பிரதிநிதி மரியாதைக் குறைவாக நடந்து கொள்வார். அதாவது, அந்தப் பாஸைக் கொண்டு

வருகிறவரை உடனே உள்ளே அனுமதிக்காது நிறுத்தி வைத்தோ, அல்லது "அடுத்த காட்சிக்கு வா", "நாளைக்கு வா" என்று அலைக்கழித்தோ, அல்லது பாஸ் கொடுக்கப்பட்டிருக்கும் வகுப்பை விட்டு அதைவிடக் கீழ்த்தர வகுப்புகளில் உட்கார வைத்தோ தமது பஜமானருக்கு தியேட்டர்காரரர் மீதுள்ள வஞ்சத்தைத் தீர்த்துக் கொள்வார். தியேட்டர்காரரர்கள் மட்டும் சோடையா, என்ன! தம் பங்குக்கு அவர், படத்தின் உரிமையாளர்கள் அளித்த இனாம் டிக்கெட்டுகளைக் கொண்டு வரும் பேர்வழிகளிடம் மரியாதைக் குறைவாக நடந்து கொண்டு, பழி தீர்த்துக் கொள்வார்கள். பாவம்! இவர்கள் இருவரின் மனஸ்தாபத்தினால், இடையில் இனாம் பாஸ் பேர்வழிகள் படும் பாட்டை நினைத்தால் "வேண்டவே வேண்டாம், இந்த இனாம் டிக்கெட்" என்று வாய்விட்டுக் கதறத் தோன்றும்!

• • •

இந்த இனாம் டிக்கெட் விஷயமாக எழுதும் போது ஒரு ரஸமான சம்பவம் என் நினைவுக்கு வருகிறது. பிரபல பிரெஞ்சு நாவல் ஒன்றைத் தழுவித் தயாரிக்கப்பட்ட சிறந்த தமிழ்ப் படம் ஒன்று சென்ற ஆண்டு சென்னைத் தியேட்டர் ஒன்றில் ஓடிக்கொண்டிருந்த சமயம் நடந்தது அது. அந்தக் கதையை முதன் முதலில் தமிழ்ப் படுத்திய ஆசிரியர் ஒரு இலக்கிய மேதை; ஒரு யோகி; மாஜி ஆஸ்ரம வாசி. படம் பார்க்க விரும்பிய அவருக்குப் படத் தயாரிப்பாளர்கள் ஒரு பாஸ் கொடுத்தார்கள். படம் நடந்து கொண்டிருந்த தியேட்டர் மானேஜர், தமக்கு படத் தயாரிப்பாளரிடம் உள்ள மனக் கசப்பை வெளியிட, அவ்வளவு பெரிய மனிதருக்கு அளிக்கப்பட்டிருந்த அந்த பாஸுக்கு 'மதிப்பு'க் கொடுக்க மறுத்து விட்டார். இந்த அவமரியாதையைப் பற்றிக் கேள்விப்பட்ட படத் தயாரிப்பாளர் ஓடோடி வந்தார். விலை கொடுத்து டிக்கெட் வாங்கி ஆசிரியரைப் படம் பார்க்க உள்ளே அனுப்பி வைத்தார். அதன் பிறகு, படத் தயாரிப்பாளர் தியேட்டர் மானேஜரை சரியானபடி கண்டித்தார் என்றாலும், ஆசிரியருக்கு ஏற்பட்ட அவமானம் அதனால் நீங்கி விடுமா!

வினாயகர்

V. ARUMUGA CHETTY

சுருட்டுகள்

ஷைல்

பிராண்டு

TRADE MARK REGISTERED

PROPRIETOR. V. ARUMUGA CHETTY

மணிலா

சுருட்டுகள்

V. ஆறுமுக செட்டி

14, அண்ணா பிள்ளை தெரு, சென்னை.

N.B. பொடிக்கு உயர்ந்த பந்தர் புகையிலைகளும் எம்மிடம் கிடைக்கும்.

சினிமாத் துறையில் புதிதாகப் புகுந்தவர்கள் மரியாதைக் குறைவாக நடந்து கொள்வதையாவது ஓரளவு மன்னித்து விடலாம். ஆனால், இத்துறையில் 'பழம் பெருச்சாளிகள்' என்று தங்களைக் கூறிக் கொள்ளும் ஆசாமிகள் அப்படி நடந்து கொள்வதைத் தான் நம்மால் பொறுக்க முடிவதே யில்லை. சில மாதங்களுக்கு முன்பு நடைபெற்ற, அப்படிப்பட்ட ஒரு 'பெருச்சாளி"யின் திருவிளையாடலைப் பற்றி இங்கே குறிப்பிடாமல் மேலே போக முடியவில்லை. இவர் ஒரு 'படாதிபதி'-டைரெக்டர். சினிமாத் தொழிலின் மௌனப் படக் காலத்திலிருந்தே, கால் நூற்றாண்டாக இருந்து வருகிறார். தாம் கடைசியாகத் தயாரித்த படம் ஒன்றைப் பார்க்க வரும்படி பத்திரிகைக்காரர்களை அழைத்திருந்தார். அவரது அழைப்புக்கு மதிப்புக் கொடுத்து பலரும் வந்தார்கள். அவர்களுக்கு தியேட்டரில் கிடைத்த மரியாதையை அவர்கள் என்றென்றும் மறக்க மாட்டார்கள். தியேட்டர் மானேஜர், அழைப்பைப் பற்றித் தமக்குத் தகவலே கிடையாதென்று நிர்தாட்சண்யமாக அனைவரையும் திருப்பி அனுப்பி வைத்தார். பழுத்த அனுபவசாலியான இந்த 'படாதிபதி'—டைரெக்டர், மரியாதை தெரிந்த மனிதராக இருந்தால், தியேட்டரில் காத்திருந்து அழைத்தவர்களை வரவேற்றிருக்க வேண்டும். அல்லது பொறுப்புள்ள ஒரு நபரையாவது அந்த வேலைக்கு ஏற்பாடு செய்திருக்க வேண்டும். அப்படி எதுவும் செய்யத் தவறி பத்திரிகைக்காரர்களுக்கு மரியாதைக் குறைவு ஏற்படும்படி செய்தார், வெள்ளி விழாக் கொண்டாட வேண்டிய அந்த 'படாதிபதி'— டைரெக்டர்.

• • •

இப்படியாக, சினிமாத் தொழிலிலுள்ள சிப்பந்திகள் நடந்து கொண்ட, நடந்து கொள்ளும் மரியாதைக் குறைவான நிகழ்ச்சிகளைப் பற்றி எவ்வளவோ குறிப்பிடலாம். அதிகம் கூறினால் மரியாதைக் குறைவாகப் படும் என்பதை உத்தேசித்து இத்துடன் நிறுத்திக் கொண்டு விடுகிறேன்.

காதுக்கு விருந்து அளித்துவரும் அவருக்கு கண்ணிற்கு விருந்து நடந்து வருகிறது! சீக்கிரமே வயிற்றிற்கு விருந்து நடைபெறும்—இக் காட்சி விஜயாவின் "கல்யாணம் பண்ணிப் பார்" தமிழ்ப் படத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

"தணிக்கை விதிகள் கடுமையாக்கப்படும்"

'படாதிபதி'களுக்கு மந்திரி கேஸ்கர் எச்சரிக்கை

'படாதிபதிகள்' பட விநியோகஸ்தர்கள், தியேட்டர் முதலாளிகள், படங்களை இறக்குமதி செய்பவர்கள் ஆகியோரால் கூட்டப்பட்ட 'அகில இந்திய சினிமாப் பட மகாநாடு' சென்ற மாதம் 7-ம் தேதி, பம்பாயில் மத்திய சர்க்கார் மந்திரி டாக்டர் பி. வி. கேஸ்கரால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அவர் பேசுகையில், நாட்டில் வெளியாகும் சினிமாப் படங்களின் தரம், உயர்த்தப் பட்டாலன்றி, ஒழுக்கக் குறைவான அம்சங்கள் நீக்கப்பட்டாலன்றி சர்க்கார் சினிமாப் படங்களை இன்னும் கடுமையாக தணிக்கை செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் என்று இந்திய சினிமாத் தொழிலதிபர்களுக்கு எச்சரிக்கை விடுத்தார்.

அவர் மேலும் கூறியதாவது :—படங்களில் ஒழுக்கக் குறைவான அம்சங்கள் பெருகி விட்டிருக்கின்றன. அவைகளின் தரம் வெகுவாக சீரழிந்துள்ளது. மட்ட ரகமான பாட்டுகளும், சினிமாப் படங்களில் சமீப காலத்தில் அதிகரித்திருப்பதைக் காண வருந்துகிறேன். தற்காலத்தில் திரைக்கு வரும் படங்கள் ஒன்றிலாவது உயர்ந்த கருத்தைக் காணோம். அவைகள் மிகவும் மட்ட ரகமாகவும் நம் கருத்துக்கு ஒவ்வாதவையாகவும் உள்ளன. நல்ல கதைகளே வெளிவருவதில்லை. நல்ல கதையை, எளிய முறையில் படம் பிடிக்க நமது படத் தயாரிப்பாளர்களுக்குக் கொஞ்சம் கூடத் தெரியவில்லை. இந்திய படத் தயாரிப்பாளர்கள் தெரிந்தோ, தெரியாமலோ, சிந்தனை சக்தியற்று, "ஹாலிவுட்" மோஸ்தரில் படங்களைப் பிடிக்க முற்பட்டிருப்பது வருந்துவதற்குரிய விஷயமாகும். நமது கலாசாரம், கவுரவம், சமூகம் ஆகியவைகளைப் புறக்கணித்து மேல்நாட்டு முறைகளைக் காப்பி அடிப்பதால் நமது நாட்டில் சினிமாத் தொழில் செழிக்கவோ, வளரவோ முடியாது. மக்களின் ஆதரவு, நல்லெண்ணம் இவைகளின்றி சினிமாத் தொழில் செழிக்க முடியாது. ஆகவே, இந்த யோசனையை ஏற்று மேற்படி தொழிலதிபர்கள் தங்களது போக்கை பலம் வாய்ந்த அடிப்படையில் திருத்திக் கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

ஆபாசமான படங்கள் மூலம் ஒரு சில ஜனங்களையே கவரமுடியும் என்றும் ஆனால் அதையே பூரண ஆதரவாகக் கொள்ளக் கூடாது என்றும் அவர் சொன்னார். ஆபாசமான காட்சிகள் மூலம் மக்கள் மனதைக் கவர்ந்தபோதிலும், அதனால் மக்கள் அதை அப்படியே விரும்பி அங்கீகரிக்கிறார்கள் என்று அர்த்தமல்ல என அவர் சுட்டிக் காட்டினார். மனித உணர்ச்சிகளையும், ஆசாபாசங்களையும் பயன்படுத்தி படங்கள் தயாரித்து மக்களைச் சுரண்ட சினிமாத் தொழில் முயற்சிக்கக் கூடாது என்றார். தங்களுக்கென்று ஒரு அடிப்படையை வகுத்துக் கொண்டு அதன்படி படம் பிடிக்கும்படி மகாநாட்டுக்கு வந்திருந்தவர்களை மந்திரி கேட்டுக்கொண்டார்

"நாட்டின் கலாசாரத்துக்கு முக்கியத்வம் தராமல் சினிமாத் தொழில் முன்னேற முடியாது. நம் நாட்டில் சினிமாப் பார்க்கும் மக்களில் பெரும்பாலோர் கல்வி அறிவற்றவர்கள். அவர்கள் ஆபாசப் படங்களைப் பார்த்து, மனம் மழுங்கி, கெட்ட வழிகளில் போகாமல் தடுப்பது சர்க்கார் கடமை. தற்போது சினிமாத் துறையில் நிலவும் நிலைமை மிகவும் குழப்பமானது. சினிமாக் கலையில் ஈடுபட்டிருப்பவர்கள் அனைவரும் உண்மையிலேயே அந்தத் தொழில்மீது விசேஷ சிரத்தை கொண்டிருந்தாலொழிய அந்தத் தொழில் சிறக்க முடியாது. படத் தயாரிப்பாளர்கள் நாகரிகம், சமூக சிந்தனை, பொதுமக்களின் தொடர்பு ஆகியவைகளை மனதில் கொண்டவர்களாக இருக்க வேண்டும். அப்போதுதான் அவர்கள் வெற்றி காண முடியும்" என்று இறுதியில் குறிப்பிட்டார்

இந்த மகாநாட்டில் கலந்து கொள்ளப் போன தென்னிந்திய பிலிம் சேம்பரின் தலைவர் ஏ. ராமய்யா பம்பாயில் சென்ற மாதம் 9-ந் தேதி, பத்திரிகை நிருபர்களை அழைத்துப் பேசினார். சினிமாத் தொழிலை பாதிக்கக் கூடிய எந்த மசோதாவையும் வகுப்பதற்கு முன் அத்துறையிலுள்ளவர்களைக் கலந்து ஆலோசிக்க வேண்டுமென மத்திய சர்க்காரைக் கேட்டுக் கொண்டார். கேந்திரமான

படங்களை, இந்தியக் கலாசார பண்பாட்டுக்கே விரோதமானபடி தயாரிப்பதாகக் கூறப்படும் புகாரை அவர் மறுத்தார். தாம் போட்ட முதலுக்கு எந்த ஒருத்தரும் நல்ல பிரதிபலனையே விரும்புவார் சர்க்காரைத் திருப்திபடுத்த வேண்டி உயர்ந்த லக்ஷ்யத்தையும் கலாசாரப் பண்பாட்டையும் பிரதிபலிக்கக் கூடிய படங்களை சதா பிடித்துவிட்டு, பண விஷயத்தில் நஷ்டமடைய முடியாது என அவர் குறிப்பிட்டார்.

"சினிமாத் தொழிலின் பொருளாதார நிலைமை தற்போது சரிவர இல்லை. மொத்த வரும்படியில் 60 சத விகிதத்தைப் பல்வேறு வரிகள் மூலம் சர்க்காரும், ஸ்தல ஸ்தாபனங்களும் பிடுங்கிக் கொண்டு விடுகின்றன" என்றும், அவர் கூறினார். நாட்டின் தற்போதைய நிலைமையை உத்தேசித்து இன்னும் கொஞ்ச காலத்துக்கு தணிக்கை முறையைச் சினிமாத் தொழில் ஏற்றுக்கொள்ளத் தயாரென்றும், ஆனால், பலவந்தமாக திணிக்கப்படும் எவ்வொழுக்கக் கட்டுப்பாடும் வெற்றி யடையாதென்றும் தொழிலில் உள்ளவர்களே சுயமாகக் கட்டுப் பாடுகளை விதிக்க முன்வந்தாலொழிய நிலைமை சீர்படாதென்றும் சொன்னார். கதைப் படங்களை சர்க்காரின் இந்திய பிலிம் டிவிஷன் பிடிக்கத் தீர்மானித்திருப்பதைக் கண்டு சினிமாத் தொழிலில் உள்ளோர் கதி கலங்கியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

திரைப் படத் தயாரிப்பாளர் சங்கக் காரியதரிசி. ஆர். எம். சேஷாத்திரி 'கருத்துக்களை வெளியிட பத்திரிகை எவ்வளவு முக்கியமானதொரு சாதனமோ அவ்வளவு முக்கியமானது சினிமாவும். ஆகவே, அதேபோல் இதையும் நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

"தென்னிந்தியா அதன் படங்களின் மூலம் நாட்டை ஒன்றுபடுத்துவதில் பெரும் பங்கெடுத்துக் கொள்ளும். நாடு முழுதும் தற்போது தென்னிந்தியப் படங்கள் திரையிடப்பட்டு வருகின்றன. அவை கலாசார ஊடுருவலே தவிர வர்த்தக ஊடுருவலல்ல" என்று டைரெக்டர் கே. சுப்பிரமணியம் பேசினார்.

இந்திய சினிமாப்பட சம்மேளனம் முதலிய ஸ்தாபனங்களின் ஆதரவில் மந்திரி கனம் கேஸ்கருக்கு ஒரு வரவேற்பு அளிக்கப்பட்டது. அப்பொழுது, "இந்திய சினிமாப் படத்தொழில் வளர்ச்சிக்குக் குந்தகம் நேரும் அளவுக்கு வரி விதிப்பது கூடாது என்பதை சர்க்கார் முற்றிலும் உணர்ந்திருக்கிறார்கள்" என்று அவர் கூறினார்.

அவர் மேலும் பேசியதாவது :—
எனினும் சினிமா படத் தொழில் தன்னுடைய கடமைகளும் பொறுப்பும் இன்னதென்பதை உணர்வது அவசியம். தேசம் முழுவதிலும் படங்கள் மீது ஒரே மாதிரியான வரி விதிப்பு இருக்க வேண்டும் என்பதுதான் சர்க்காரின் கவலை. படத் தொழில் தனது கடமைகளை முற்றிலும் உணர்ந்திருந்தால் வரியைக் குறைக்கும்படியும் சர்க்காரை வற்புறுத்தலாம்; அத்துடன் சர்க்காரிடமிருந்து நிதி உதவி கூடக் கோரலாம். இந்தியப் படங்களின் தரத்தை முதலாளிகள் உயர்த்தவில்லையானால் மக்கள் அவற்றை ஆதரிக்க மாட்டார்கள். ஆரம்பத்தில் சம்மேளனத் தலைவர் பேசுகையில் வரி அதிகமாக விதிக்கக் கூடாதென்று கேட்டுக் கொண்டார்.

அளவிலா உற்சாகம் அளிப்பது

நீலகிரி காபி

தலைமை ஆபீஸ்:
28 வெங்கடாஜல முதலி தெரு,
பீ. டி. சென்னை.
கிளை : 82 காட்டுபிள்ளையார் கோயில் தெரு,
ஜீ. டி. சென்னை.
— 89 பாண்டி பஜார், —
தியாகராயநகர், : : சென்னை—17.

காற்றினிலே நக்ஷத்திரப் பேட்டி!

லிப்டனின் போற்றத்தக்க ஏற்பாடு

"ஏதைச் செய்தாலும் அது உயர்தரமாகவும் சிறப்பாகவும் இருக்க வேண்டும்; அதனால் பொதுமக்கள் பலனை அடைந்து மகிழ வேண்டும்" என்ற கொள்கை உடையவர்கள் தாங்கள் என்பதை, லிப்டன் டீ கம்பெனியார் பல விதத்திலும் வெளிப்படுத்தி வருகிறார்கள். தங்களது நேர்த்தியான டீ மூலம் பல்லாயிரக் கணக்கானவர்களுக்கு விறுவிறுப்பும் சுறுசுறுப்பும் அளித்து உற்சாகப்படுத்தி வருகின்றனர். அவர்கள் சந்தோஷப்பட ரேடியோ ஸிலோன் மூலம் சில நல்ல நிகழ்ச்சிகளை ஒலிபரப்பி நேயர்களின் பாராட்டுதலுக்கு இப்பொழுது உரியவர்களாகி விட்டார்கள்.

கடந்த ஜனவரி மாதம் முதல், பிரதி மாதமும் கடைசி ஞாயிற்றுக் கிழமையன்று, பிரபல வட இந்திய சினிமா நக்ஷத்திரங்கள், ரேடியோ ஸிலோன் மூலம் தங்கள் கணக்கற்ற ரஸிகர்களுடன் உறவாடி வருகின்றனர். இதுவரை நிம்மி, அசோக் குமார், நஸீம், நளினி ஜெய்வந்த், காமினி கௌஸல், ஆகிய ஐந்து நக்ஷத்திரங்கள் அத்தகைய நிகழ்ச்சிகளில் பங்கெடுத்துக் கொண்டுள்ளனர். கீதாபலி கடந்த மாதம் 27-ம் தேதி நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கெடுத்துக் கொண்டார். நக்ஷத்திர சிருஷ்டி கர்த்தா கர்தாரும் ஒரு வாரம் இந்த நிகழ்ச்சியில் பங்கெடுத்துக் கொண்டிருக்கிறார்.

இது ஒரு அதிசயமான ரஸிக்கத் தக்க நிகழ்ச்சி. பேட்டி காணும் பால்ராஜ் என்பவர் நக்ஷத்திரங்களிடம், அவர்கள் வாழ்க்கை, இந்திய சினிமாத் தொழில் பற்றி அவர்கள் அபிப்பிராயம் மற்றும் பல ருசிகரமான விஷயங்கள்—இவைகள் பற்றியெல்லாம் கேள்விகள் கேட்கிறார். நக்ஷத்திரங்கள் பதிலளிக்கிறார்கள்.

அசோக் குமார் தன் ஐரோப்பிய யாத்திரை குறித்து விளக்கினார். கர்தார் பயன் படக்கூடிய (படத் தொழில் பற்றிய) பல புள்ளி விபரங்களைக் கூறினார். நிம்மி சிரிக்கச் சிரிக்கப் பேசினார். காமினி கௌஸல் கபடமில்லாது, தமது மண வாழ்க்கை குறித்துக்கூடப் பேசினார். இந்த நிகழ்ச்சிக்கு ரஸிகர்களிடையே அமோகமான ஆதரவு ஏற்பட்டுக் கொண்டு வருகிறது.

இப்படிப்பட்ட ருசிகரமான ஒரு நிகழ்ச்சியை ரேடியோ ஸிலோன் மூலம் ஒலிபரப்பி வருகிறவர்கள் பிரபல லிப்டன் லிமிடெட் கம்பெனியார்தான். வருகிற மாதங்களில் இந்த நிகழ்ச்சிகளில் பங்கெடுத்துக் கொள்ள, சுரய்யா, மீனாகுமாரி, வீணா, சியாமா, சுமத்திரா தேவி, ஆகிய நக்ஷத்திரங்களையும் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இந்த நிகழ்ச்சிகள் பிரதிமாதமும் கடைசி ஞாயிற்றுக் கிழமையன்று மாலை 6-30 மணிக்கு ரேடியோ ஸிலோன் மூலம் 25·05, 41·72 மீட்டர்களில் ஒலிபரப்பப்படுகின்றன. மற்ற ஞாயிற்றுக் கிழமைகளில் லிப்டன் கம்பெனியார் அந்த நேரத்தில் சினிமா சங்கீதத்தை ஒலிபரப்புகின்றனர்.

காமினிகௌசல் பி.வி.ஆர். சந்திரனுக்கு பேட்டியளிக்கிறார்.

ஜுபிடர்
சங்கீதா
ஜமீன்தார்

எம். வி. ராஜம்மா, மாதுரி தேவி, எஸ். ஏ. நடராஜன், சிவசூரியன், முத்துலக்ஷ்மி நடிக்கும் "ஜமீன்தார்" தமிழ்ப் படம் சீக்கிரமே வெளிவரப் போகிறது. பீ. வி. கிருஷ்ணனுல் டைரக்ட் செய்யப்பட்ட படம் இது.

சினிமாப் பாட்டுகளுக்கு ரேடியோவில் கல்தா!

ஸ்ரீ. எஸ். எஸ். வாஸனது அபிப்பிராயம்

அகில இந்திய ரேடியோவில் சினிமாப் பாட்டுகள் ஒலிபரப்பப்படுவது அடுத்த ஆறு மாதங்களில் படிப்படியாகக் குறைக்கப்பட்டு, அதற்குப் பதில் வேறு எளிமையான சங்கீதம் ஒலிபரப்பப்படும் என்று தெரிகிறது. பின்கண்ட இரண்டு முக்கிய காரணங்களை முன்னிட்டு, இந்திய சர்க்கார் இவ்விதம் முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது: (1) சினிமா சங்கீத ரிகார்டுகளை ஒலிபரப்புவது வர்த்தகப் பிரசாரமாகிறது. (2) தற்போதைய சினிமாப் பாட்டுகளில் சில மிகவும் ஆபாசமாக இருப்பதாகவும், இவை கேட்பவர்களின் ஒழுக்கக் கேட்டுக்குக் காரணமாக இருக்கக் கூடுமென்றும் கருதப்படுகிறது.

'தற்சமயம் படங்களில் பாடப்படும் பாட்டுக்கள் மட்ட ரகமாக இருக்கின்றன. தவிர தியேட்டர்களில் ஓடிக்கொண்டிருக்கும் சினிமாப் படங்களின் பாட்டுக்களை ஒலி பரப்புவது, அப்படங்களைப் பற்றி ரேடியோ மூலம் பிரசாரம் செய்வது போலாகிறது. இவ்விதம் விளம்பரம் செய்வதற்கு ரிகார்டுகளை வாங்குவதன் மூலம், ரேடியோவே பணம் கொடுக்க வேண்டியிருக்கிறது" என்று இந்திய சர்க்கார் கருதுகிறார்கள்.

சர்க்காரின் இம் முடிவுபற்றி ஸ்டூடியோ முதலாளிகள் சங்கத் தலைவரான எஸ். எஸ். வாஸன் பின்கண்ட அபிப்பிராயத்தைத் தெரிவித்திருக்கிறார்:

சினிமாப் பாட்டுகளை ரேடியோ மூலம் ஒலிபரப்பி பிரபலப்படுத்தும்படி இந்திய சர்க்காரை, படமுதலாளிகள் தூண்டியது கிடையாது. இந்திய சர்க்கார் தான் சினிமாப் பாட்டுகளை பயன்படுத்தப் படமுதலாளிகளின் அனுமதியைக் கேட்டுப் பெறுகின்றனர். ஆபாசமான பாட்டுகளைப் பதிவு செய்து கிராமபோன் கம்பெனிக்காரர்கள் தங்களுடைய பெயரைக் கெடுத்துக் கொள்ள மாட்டார்கள். தவிர, சினிமா இசைத் தட்டுகளை பொது மக்களுக்கு விற்பனை செய்யப்படுவதற்கு முன்பாகவே அவற்றை சினிமாப் படத் தணிக்கை போர்டார் தணிக்கை செய்கின்றனர். கடைசியாக அகில இந்திய ரேடியோவிலுள்ள தேர்வுக் கமிட்டி, இசைத் தட்டுகளை ஆராய்ந்து உயர்ந்த ரக இசைத் தட்டுகளையே ஒலிபரப்ப அனுமதிக்கிறது. இம்மாதிரி மூன்று முறை வடிகட்டியும் கூட பொது மக்களின் உள்ளத்தைக் கெடுக்கக் கூடிய ஆபாசமான சினிமாப் பாட்டுகள் ஒலிபரப்பப் படுவதாக ரேடியோ மந்திரி சொன்னால், அது அவருடைய இலாகாவையே பழிப்பதாகும். சினிமாப் பாட்டுகளை அவர் குறை சொல்லவில்லை. ரேடியோ நிலைய தேர்வுக் கமிட்டியையும், சினிமாப் படத் தணிக்கை போர்டையும் குறை கூறுகிறார் என்றாகிறது. அகில இந்திய ரேடியோ நிகழ்ச்சிகளில் சினிமாப் பாட்டுகளையே பொது மக்கள் பெரிதும் விரும்புகின்றனர் என்பது எல்லோருக்கும் தெரிந்ததே. இந்திய சர்க்காரின் புதிய உத்தரவுக்கு மக்களே தீர்ப்பளிப்பார்கள்.

நறுமணத்தில் நிகரற்றது!

தலைமை ஆபீஸ்:
வெங்கடாசல முதலி தெரு,
பி. டி. சென்னை.
கிளை; 82 ரங்கப்பிள்ளையார் கோயில் தெரு,
ஜி. டி. சென்னை.
32 பாண்டி பஜார், தி. நகர், சென்னை—17.



"சரும அழகைப்பெற நான்
லக்ஸ் டாய்லட் சோப்பையே
நம்பியிருக்கிறேன்"
என்று சொல்கிருர்
மாதுரி தேவி
LUX
LUX TOILET SOAP
இனிய மணத்துடன் கூடிய இந்த
வெண்மையானதும் சுத்தமானதுமான
சோப் உங்கள் சருமத்தை வசீகரமாகச்செய்யும்!
சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்
LTS. 336-50 TM

குண்டூசியைக் கேளுங்கள்

கலை சம்பந்தமாக உங்களுக்கு என்ன சந்தேகம் இருந்தாலும் 'குண்டூசி' யிடம் கேளுங்கள். இலவசமாகவே பதில் பெறலாம் யாருடைய மனமும் புண்படாதபடி தமாஷாகவே பதிலளித்து, தமிழ் சினிமா, நாடக, சங்கீத உலகை சீர்திருத்துவதே இப் பகுதியின் நோக்கமாகும். — ஆசிரியர்.

"ஜூபிடர் பிரியன்" (மதுரை)

தற்சமயம் நம் நடிகைகளுள் நடிப்பில் சிறந்தவர் பானுமதி என்பது என் கருத்து. உங்கள் அபிப்பிராயம் என்ன?

காதலி, நாடோடிப் பெண் போன்ற சில வேஷங்கள் மூலம் பானுமதி ரஸிகர்களின் மனதைக் கவர்ந்திருக்கிறார். ஆனால், சோக நடிப்பால் கண்ணாம்பாவைப் போல அவரால் ரஸிகர்களின் மனதை உருக்க முடியாது என்பது நிச்சயம்.

எம். கே. ரங்கசாமி (மேடூர்)

நடிகை காஞ்சன மாலா நடித்த கடைசிப் படம் எது? அவர் ஏன் படங்களில் நடிக்காமல் நிறுத்தி விட்டார்.

சித்த ஸ்வாதீனம் இழக்கவே அவர் "பால நாகம்மா"விற்குப் பிறகு படங்களில் நடிக்கவே யில்லை. ஆனால் சினிமாவிலிருந்து விலகாமல் விடாப் பிடியாய் இருந்து வரும் சிலருக்குக் கூட இந்த ஸ்வாதீனம் இருப்பதாக நமக்குத் தோன்றவில்லை யல்லவா?

வி. ஸி. சதாசிவம் (பட்டன்சேரி)

வி. நாகய்யா தற்போது எந்தப் படத்தில் நடிக்கிறார்?

"பணக்காரி", அருணா பிக்சர்ஸ் இரண்டாவது படம், தம் சொந்தப்படமான "என் வீடு" தமிழ்-தெலுங்குப் படங்கள், மூனுஸின் பெயரிடப்படாத தமிழ்-தெலுங்குப் படங்கள், ஏவி எம்மின் 'பெண்' இவைகளில் அவர் தற்போது நடித்து வருகிறார்.

ஆர். டி. கமலா (ராமநாதபுரம்)

கொழும்பு "வீரகேசரி" பத்திரிகையில் வெளி வந்த ஒரு விளம்பரத்தில், "நான் மனிதர் முடியை (டோபா)

இம்மாதம் 7ம் தேதி வெளிவரும் "ஆன்" தமிழ்ப் படத்தில் மங்களாவாக நடிக்கிறார் இந்த நிம்மி.

"உபயோகிப்பதால் என் அழகு அதிகமாகிறது" என்று வைஜயந்திமாலா கூறுவதாக வெளியாகியிருக்கிறது. உண்மை என்ன? வைஜயந்திக்கு தலைமயிர் கிடையாதா?

நீர் இதற்குப் பதில், "இந்த விளம்பரம் உண்மையானது தானா?" என்று கேட்டிருக்கலாம்.

எஸ். ராமலிங்கம் (மணக்குடி)

பி. எஸ். சரோஜாவுக்கு விவாஹம் ஆகிவிட்டதா?

திரும்பவும் திரும்பவும் அவர் சங்கடங்களுக்கு உள்ளாவதை நீர் விரும்ப மாட்டீர் என்றே நினைக்கிறேன்.

"கலைக்காவலன்" (மதுரை)

கலைக்காகத் தோற்றுவிக்கப் படும் கழகங்கள் செய்ய வேண்டிய கடமை என்ன?

"தாங்கள், கலைக்காகப் பாடுபட்டு வருவதாக" சதா சொல்லிக் கொண்டிருக்க வேண்டும்!

மாடர்ன் தியேட்டர்ஸார் வெளியிட்டிருக்கும் "கல்யாணி" தமிழ்ப் படத்தில் எம். என். நம்பியாரின் ஒரு தோற்றம்.

இராதா ரேங்கையன் (அனந்தமங்கலம்)

விஜயா புரொடக்ஷன்ஸ் நாகிரெட்டியும், எம். எல். ஏ. ஆகியுள்ள நாகிரெட்டியும் ஒரே நபர் தானா?

இல்லை பெயர் ஒன்றுயிருக்கிறதெனினும், முந்தியவர் பெரிய படமுதலாளி; பிந்தியவரோ தீவிர கம்யூனிஸ்ட்.

ஸ்ரீராமன் (கோத்தகிரி)

நடிகர் ஸ்ரீராமுக்கு விவாஹம் ஆகிவிட்டதா? விலாஸம் தெரிவிக்கவும்.

'ராஜாபாதர் தெரு, தியாகராயநகர், சென்னை-17' என்று அவருடைய பெயருடன் சேர்த்துக் கொள்ளும். அவர் விவாஹம் செய்து கொண்டு தகப்பனாரும் ஆகியிருக்கிறார்.

டி. ஆர். சிவசிதம்பரம் (வலசக்காடு)

டி. ஆர். மஹாலிங்கம் எனக்கு ஒரு வகையில் சொந்தக்காரர். அவர் சினிமாவில் சேருவதற்கு முன் எங்கள் வீட்டிற்கு அடிக்கடி வருவதும், அன்பாய் இருப்பதும் வழக்கம். இப்பொழுதோ பல கடிதங்கள் எழுதியும், சரியான பதில் இல்லை. நேரில் பார்க்கலாம் என்று சென்னைக்குப் போனாலோ, "ஷூட்டிங்கிற்குப் போய் விட்டார்; இல்லை" என்ற பதிலே எப்பொழுதும் கிடைக்கிறது. சினிமாவில் புகழ்பெற்று விட்டால் உறவினர்களைக்கூட மறந்துவிடவேண்டுமா என்ன?

'பணம் பத்தும் செய்யும்' என்பார்கள். அந்தப் பத்தில் இதை ஒன்றாய் வைத்

கொசு வலைகள்



நன்கு தைத்து நீடிக்கும்படியான வெள்ளை வலையால் தயாரிக்கப்பட்டது.

பாக்கிங், போஸ்டேஜ் ரூ 1-8-0 3 வாங்கினால் இலவசம்.

நீள.	அக.	உய.		சாதா	உயர்.	ஸ்பெ.
6 ft.	3½ ft.	3½ ft.	Rs.	6-0	7-0	10.2
6 ft.	4 ft.	4 ft.	Rs.	7-8	8-12	11-4
6½ ft.	4½ ft.	4½ ft.	Rs.	8-8	9-14	12-4
7 ft.	5 ft.	5 ft	Rs.	10-0	11-8	14-0
7½ ft.	6 ft.	6 ft.	Rs.	11-8	13-0	17-4
9 ft.	6 ft.	6 ft.	Rs	12-12	14-0	20.0

Note :—Advance Rs. 5/- should accompany each Mosquito order.

நீண்ட மூங்கில் புல்லாங்குழல்

நெ 1. விலை ரூ. 2. நெ. 2. ரூ. 3. ஸ்பெஷல் ரகம் ரூ 4 உயர்ந்தது ரூ 5. நீண்ட பிக்ளு புல்லாங்குழல் இங்கிலீஷ் டியூன் நெ 8. விலை ரூ 5 நெ 9 ரூ 7. ஸ்பெஷல் ரூ 10 உயர்ந்தது ரூ. 12. பாக்கிங் & தபால் செலவு ரூ 1-8



நெ. 76 ஸ்விஸ் மேக் 15 வருஷ உத்தரவாதம. க்ரோமியம் கேஸ், ரவுண்டு ஷேப் 6 ஜு. ரூ. 15. சென்டர் செக ரூ. 16. லேடி ஸைஸ் ரூ 18. ரோ கோ. ரூ. 20. 15 ஜு. தட்டை ஷேப ரூ. 26. பாக்கெட் கடிகாரம் ரூ 10. டைமபீஸ் ரூ. 16. ரிபீட்டர் ரூ 18

நெ. 77. நீண்ட சதுரம் க்ரோ. 8 ஜு. ரூ. 22. ரோ. கோ. ரூ. 24 17 ஜுவல் க்ரோ. ரூ. 30. ரோ. கோ. ரூ. 35.

நெ. 78. நீண்ட சதுரம் டன்னோ வளைவு க்ரோ. கேஸ் 9 ஜு. ரூ. 26 ரோ. கோ ரூ. 28 சிறந்தது ரூ. 30. 17 ஜு. க்ரோ ரூ. 36. 17 ஜு. ரோ. கோ. ரூ. 40. பாக்கிங், தபால் செலவு ரூ. 1-4-0

French Commercial Store (C.G)
P. B. No. 12216, CALCUTTA-5.

துக் கொள்ளும்! திடீரென்று அவருக்கு ஏற்பட்ட புகழும், பணமும் அவருக்கு 'பார்வை மங்கலை'யும், 'ஞாபக மறதி'யையும் ஏற்படுத்தியிருப்பதாக, நீர் மட்டுமல்ல— இன்னும் எவ்வளவோ பேர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன்.

ஜே. அப்துல் ரஹிமான் (பூந்தாழங்குடி)

இப்பொழுது மாதத்திற்கு இரண்டு மூன்று படங்கள் வெளிவருகின்றனவே. நான்கைந்து வருஷங்களாகியும் ஏன் "ஒளவையார்" படம் வெளி வரவில்லை?

பல பெருமைகளையும் பெற்றுள்ள ஜெமினி, "அதிக வருஷங்கள் தயாரான படத்தின் அதிபதிகள்" என்ற பெருமையையும் இப்படத்தின் மூலம் பெற விரும்புகிறார்கள் போலும்! இந்தப் "பாட்டி" எப்பொழுது வெளிக் கிளம்புவாள் என்று (ஜெமினியின் இரட்டைப்) பேரப் பிள்ளைகளுக்கே தெரியாது. "சகோதரர்கள்" "சம்சாரம்", "பிள்ளைகள்' இவர்களையெல்லாம் வெளியில் அனுப்பி விட்டதால் இனி 'பாட்டி" விஷயத்தை அவர்கள் கவனிக்கக் கூடும்.

எம். ஏ. பத்ருதீன் (அடியக்கருங்கலம்)

அழகுப் போட்டியில் டி. ஆர். சூர்யகுமாரியைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்களே? அவரை விடச் சிறந்த அழகுகள் நம் பட உலகில் எத்தனை பேர்கள் இல்லை?

அவர்கள் இந்த முட்டாள்தனமான போட்டியில் கலந்து கொள்ளாததற்காக சந்தோஷம் அடைகிறேன். அது போகட்டும்; சூர்யகுமாரியே சிறந்த அழகியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள போது, போட்டியில் கலந்து கொண்ட மற்ற அழகிகளைப் பற்றி நீங்களே கற்பனை செய்து பார்க்கலாம்.

எம். நாகசுந்தரம் (ராமநாதபுரம்)

மதுரை சித்ரகலா மூவிடோன் புத்துயிர் பெறப் போவதாகவும், அதில் "இன்றைய உலகம்" என்ற படம் தயாராகப் போவதாகவும் அறிகிறேன். இது உண்மையான செய்தி தானா?

ஸ்ரீ கிருஷ்ணா பிக்சர்ஸார் தயாரித்துக் கொண்டிருக்கும் "மாமகள்" தமிழ்ப் படத்தில் என். டி. ராமராவும், பத்மினியும் ஜோராக சைக்கிள் சவாரி செய்யும் காட்சி இது.

இந்த ஸ்டுடியோவுக்கு உயிரளிப்பதற்கான முயற்சிகள் நடை பெறுவதாக மட்டுமே நான் கேள்விப் படுகிறேன். படம் சம்பந்தப்பட்ட செய்தி திட்டமாகத் தெரியவில்லை.

எம். சக்கரவர்த்தி (மஞ்சக்குப்பம்)

எம். ஜி. ராமச்சந்திரனுக்கு விவாஹம் ஆகிவிட்டதா? குழந்தைகள் உண்டா?

எம். ஜி ஆர். விவாஹம் ஆனவர்தான். ஆனால், குழந்தைகள் கிடையாது அவருக்கு!

எம். எஸ். பழனி (கல்லிடைக்குறிச்சி)

"சம்சாரம்" தமிழ்ப் படத்தில் செல்வந்தரின் மகள்—அதிலும் படித்தவள், பட்டிக்காட்டு வேணுவைக் காதலிக்கிறாள். இது தற்காலத்தில் நடக்குமா?

ஏன் நடக்காது? காதலுக்குக் கண் இருந்ததென்றோ, இருக்கிறதென்றோ, அல்லது இருக்கும் என்றோ தான் சொல்லுவதற்கில்லையே. எட்டாம் எட்வர்டு ஒரு சாதாரண மங்கையை மணந்து கொண்டு அதற்காக ராஜ்பத்தைக் கூடத் துறந்தது உலகப் பிரசித்தமானதாயிற்றே?

"முத்தமிழ்ப் பித்தன்" (மதுரை)

ஜெமினியின் "அபூர்வ சகோதரர்கள்", ஜுபிடரின் "ராணி" இவ்விரண்டு படங்களில் எதில் பானுமதியின் நடிப்பு அதி சிறப்பாய் உள்ளது?

"ராணி" படத்தில் தான் என்று கருதுகிறேன்.

கே. ராமாநுஜம் (குடந்தை)

தமிழ்ப் படங்களை விட ஹிந்திப் படங்களே எங்களுக்கு அதிகமாய் பிடித்துள்ளன. ஏன்?

"தூரத்துப் பச்சைக் கண்ணிற்குக் குளுமை" என்பது பழமொழி. பக்கத்தி

சாந்தாராமின் படங்களிலே ஒரு தனி நிறுவனம் இருக்கும் என்பதற்கு மேலேயுள்ள காட்சியே ஒரு அத்தாட்சி. சீக்கிரமே தென்னாட்டில் வெளிவர விருக்கும் "பர்ச்சாயின்" ஹிந்திப் படத்தில் சந்தியா நடிக்கும் இக் காட்சியைப் பார்க்கலாம்.

லுள்ள பச்சையும் குளிர்ச்சியாகத் தோன்றக்கூடியபடி நீங்கள் பச்சைக் கண்ணாடி போட்டுக் கொள்ள வேண்டும்.

"கலா ராஜன்" (மதுரை)

சினிமா சம்பந்தமான ஆங்கிலப் பதங்களுக் கெல்லாம் சரியான தமிழ் பதங்கள் உபயோகிக்கப் பட்டு வருகின்றன. டைரெக்டர், மேக்கப் மேன் ஆகிய பதங்களுக்கு மட்டும் ஏன் அப்படிச் செய்யவில்லை? இவைகளுக்கு என்ன தமிழ்ப் பதங்கள் பொருத்தமாயிருக்குமென்று நினைக்கிறீர்?

டைரெக்டரை சூத்ரதாரி என்றழைக்கலாம். மேக்கப் மேனை 'அழகுச் சிற்பி' என்றோ, 'அழகு நிபுணர்' என்றோ அழைக்கலாம். ஆனால், என்னைக் கேட்டால், தற்போதுள்ள பதங்களையே மேலும் உபயோகிப்பதன் மூலம் நமக்கு நம் பாஷைப் பற்று குறைந்து விடாது என்றே கூறுவேன்.

எஸ். மந்தக்காளை (கோட்டானந்தம்பட்டி)

பானுமதி படங்களில் பாடும் பாட்டுகளெல்லாம் சொந்தக் குரலிலா அல்லது இரவல் குரலிலா?

சொந்தக் குரலில் தான் பானுமதி பாடி வருகிறார். சொல்லப் போனால், அவருடைய இனிய குரலே அவரை ஒரு சினிமா நடிகையாக்கி வைத்தது.

டி. பாஸ்கரன் (சின்னப்பன்பட்டி)

சினிமாவில் சேருவதற்கு என்னென்ன தெரிந்திருக்க வேண்டும்?

அதிகம் ஒன்றும் தெரிந்திருக்க வேண்டியதில்லை. படாதிபதியின் மனதைக் கவருவதற்கான ரகசியம் ஒன்று மட்டும் தெரிந்திருந்தாலே போதும்.

ஏ. அங்கமுத்து (உளுந்தூர்ப் பேட்டை)

இவ்வாண்டு வெளியான தமிழ்ப் படங்களில் பெரும் பகுதி சமூகப் படங்களாய் இருக்கின்றன. ஆனால்,

அவைகளின் கதைகளோ ஒன்றை யொன்று காப்பியடித்த மாதிரியும் புதுக் கருத்தின்றியும் இருப்பதன் காரணம் என்ன ?

எல்லோரும் ஒரே இடத்தில் (ஆங்கிலக் கதை) திருடச் செல்லுவதின் விளைவுதான் இது !

ஏ. மேரியானந்தம் (மதுரை).

கே. பி. சுந்தராம்பாள் தற்போது என்ன செய்து கொண்டிருக்கிறார்? அவருடைய விலாஸம் தேவையாயிருக்கிறது.

தற்போது கே.பி.எஸ். "ஔவையார்" படத்தில் நடித்துக் கொண்டிருக்கிறார். விலாஸம் :—மர்ரேஸ் கேட் ரோடு, ஆழ்வார்பேட்டை, சென்னை-18.

கே. ராமையன் (கீரமங்கலம்)

டி. ஆர். ராஜகுமாரி நாடகம், சங்கீதக் கச்சேரி இவைகளுக்கு வருவாரா ?

இந்தத் தகராறுகளிலெல்லாம் அவர் ஈடுபட்டதுமில்லை; இனி ஈடுபடவும் மாட்டார் என்றே தோன்றுகிறது.

கே. நடராஜன் (கமுதி)

பி. எஸ். சிவபாக்கியம், பி. ஆர். மங்களம் இவர்கள் பிறந்த ஊரையும், வயதையும் தெரிவிக்கவும்.

பரமக்குடியைச் சேர்ந்த சிவபாக்கியமும், பாண்டிச்சேரியைச் சேர்ந்த பி. ஆர். மங்களமும் நாற்பது வயது நிறைந்த நாரீமணிகள்.

எம். ஈ. தங்கள் மைதீன் (இருவேல்பட்டு)

எம். வி. ராஜம்மா, அஞ்சலிதேவி, பானுமதி இம்மூவரில் சோக நடிப்பில் யாருக்கு முதல் ஸ்தானம் அளிக்கலாம் ?

ராஜம்மா நடிக்காமலே சோகமாகத் தோன்றுபவர். அஞ்சலியோ நடித்த பின் சோகமாகத் தோற்றமளிக்கக் கூடியவர். பானுமதியின் சோக நடிப்புக் கூட சாகஸம் போலவே இருக்கும்.

இம் மாதம் 7ந் தேதி முதல்
சென்னையிலும, தமிழ் நாட்டி
லும வெளிவர விருக்கும
"ஆன்" தமிழ்ப் படம் டைரெ
க்டர் மெஹ்பூப்பின ஒரு பெரு
முயறசியாகும். ஏராளமான
பொருட செலவில இப் படம்
மேனாடு சென்று டெகனிகலர்
படமாகத் தயாரித்து வரப்பட்
டுள்ளது குறிப்பிடததகககது.

மெஹ்பூப்
ப்ரொடக்ஷன்ஸ் லிமிடெட்
ஆன்
தமிழ்
டைரெக்ஷன்:
மெஹ்பூப்
ஆல் இந்தியா பிலிம் கார்ப்பரேஷன் ரிலீஸ்

இது செய்தி

மேதாஜ் யுனைடெட் ஆர்டிஸ்ட் கார்ப்பரேஷன் தயாரித்து வெளி வந்து, ஒரு புரட்சியை ஏற்படுத்திய "தியாக பூமி" தமிழ்ப் படம் ஹிந்தியாக்கப்படவிருக்கிறது. படத்தின் ஹிந்தி வேலைகள் சீக்கிரமே பம்பாயில் ஆரம்பமாகுமாம்.

சூரியகுமாரியும் - சரோஜாவும்

மிஸ் மதராஸான, ஆந்திர நடிகை டி. சூரியகுமாரி ஹிந்திப் படம் ஒன்றில் நடிக்க ஒரு வட இந்தியப் பட முதலாளியால் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். ஹிந்தி "தியாகபூமி"க்குக் குரல் கொடுக்க பம்பாய்க்குப் போகப்போகும் (மாஜி பேபி) சரோஜாவும் அவரது சகோதரிகளும், பம்பாயில் தயாராகப் போகும் ஒரு வர்ணப் படத்தில் நடிக்கக் கூடுமென்று தெரிகிறது.

பஷீர் படாதிபதியாகிறார்

பல படங்களில் நடித்துள்ள ஜி. எம். பஷீர் சொந்தத்தில் படம் ஒன்றைத் தயாரிக்கப் போகிறாராம். பஷீர் புரொடக்ஷன்ஸ் என்ற தமது படக் கம்பெனியின் ஆரம்ப பூஜையை அவர் சமீபத்தில் ஆடம்பரமின்றி நடத்தினாராம்.

இனம் டிக்கெட்

சர்க்கார் காரியாலயங்களில் வேலை பார்ப்போர், சினிமாவுக்கோ நாடகத்துக்கோ இனம் பாஸ்கள் பெறக்கூடாது என்று பம்பாய் மாகாண சர்க்கார் ஒரு உத்தரவு பிறப்பித்துள்ளனர்.

சுப்பராமனுக்கு சிலை

ஜூன் மாதம் இறுதியில் காலஞ் சென்ற சங்கீத டைரக்டர் ஸி. ஆர். சுப்பராமனின் சிலை ஒன்று, விநோதா பிக்சர்ஸின் காரியாலயத்தில் திறந்து வைக்கப் பட்டது. சிலையை நடிகர் என். எஸ். கிருஷ்ணன் திறந்து வைத்தார். பி. என். ரெட்டி, தியாகராஜ பாகவதர், அஞ்சலி தேவி, வரலக்ஷ்மி, புஷ்பவல்லி, நாகய்யா போன்ற அநேக பிரபலஸ்தர்கள் விழாவில் கலந்து கொண்டார்கள். அநேகர் அன்று ஸி. ஆர். சுப்பராமனின் திறமை குறித்துப் பேசினார்கள். கடந்த ஆறு வருஷங்களுக்குள் சுமார் 50 படங்களுக்கு அவர் வேலை செய்திருப்பதே அவரது திறமையைக் குறிக்குமெனக் குறிப்பிட்டார்கள் இறுதியில் சுப்பராமனின் சிஷ்யைகளும் பின்னணிப் பாடகிகளும் அவர் அமைத்த சில டியூன்களைப் பாடினார்கள்.

ராஜாஜியின் வேண்டுகோள்

சென்ற மாதம் 13ம் தேதி, முதல் மந்திரி ராஜகோபாலச்சாரியார் ஒரு இடத்தில் பேசுகையில் "சினிமாவுக்குப் போகும் காசைக் குறைத்துக் கொண்டு காங்கிரஸில் சேரலாம். வருஷத்துக்கு ஒரு நாள் சினிமா போகாமலிருந்தால் 4 அணா மிச்சம். அதைக் கொடுத்து காங்கிரஸில் மெம்பராகுங்கள். சினிமாப் போவது அபாயமான படிப்பு. அங்கே போவதால் புத்திக் கோளாறு ஏற்படுகிறது. சினிமா போய்விட்டு வருகிறவர்கள் ரோடில் அந்தப் பக்கம் இந்தப் பக்கம் பார்க்கிறார்கள் இதெல்லாம் எப்படித் தெரியுமென்றால், மந்திரியாக இருப்பதால். வேறு என்ன வேலை? சினிமாப் பார்ப்பதால் சினிமாக்காரர்களுக்கும், சர்க்காருக்கும், ஸ்தல ஸ்தாபனங்களுக்கும் வருமானம் கிடைக்கிறது. ஆனால் சினிமாப் பார்த்துப் பார்த்து உள்ளம் கெட்டு விடுகிறது உள்ளத்தின் சத்து கெட்டு விடுகிறது. அதைப் பார்ப்பதால் பணம் எப்படி சம்பாதிக்கலாமெனத் தோன்றுகிறது. திருடு, கெடுதல் எல்லாவற்றிற்கும் இதுவே காரணம்" என்று குறிப்பிட்டார்.

சுவாமி விவேகானந்தா

ஏற்கெனவே, 1919-ம் வருஷம் "சுவாமிஜி" என்ற பெயரில் வெளி வந்துள்ள சுவாமி விவேகானந்தரின் வாழ்க்கையை மீண்டும் ஹிந்தி, தமிழ் பாஷை

களில் தயாரித்து வெளியிடும் முயற்சி கள் நடைபெற்று வருகின்றன. கல்கத்தாவில் இப் படத்தின் வேலைகள் நவம்பர் மாதத்தில் ஆரம்பமாகுமாம்.

தந்தையும் மகனும்

கே. கே. புரொடக்‌ஷன்ஸார் "தந்தையும் மகனும்" என்ற கதையை தமிழ்-மலையாளம்-தெலுங்கு மூன்று பாஷைகளில் படங்களாக்கப் போகிறார்களாம். இப் படங்களுக்கான சில பாடல்கள் சென்னை ரேவதி ஸ்டூடியோவில் பதிவாகியுள்ளன. பி. லீலா, ஜிக்கி இவர்கள் பாடியுள்ளனர். படங்களில் பி. எஸ். சரோஜா பிரதம பாகத்தில் நடிப்பாரென்று தெரிகிறது.

புயலும்—சாந்தியும்

சென்ற மாதம் 25ம் தேதி முதல் பெலிகன் பிக்சர்ஸாரது "புயல்", ஸிடாடலின் 'ஆத்மசாந்தி" ஆகிய இரு படங்களும் தமிழ் நாட்டின் பல நகரங்களில் திரையிடப்பட்டுள்ளன. "புயலி"ல் எம். வி ராஜம்மா, ஜி. எம். பஷீர், கே. ஆர். ராம்சிங் ஆகியவர்கள் பிரதம பாகங்களில் நடித்துள்ளனர். பல புதிய முகங்களும் இப் படத்தில் தோன்றுகிறார்களாம். ஜி. விஸ்வநாதன் டைரெக்‌ஷனில் கோவை செண்ட்ரல் ஸ்டுடியோவில் தயாரான படம் இது. இம் மாதம் முதல் தேதி முதல் சென்னை நகரிலும் பாரகன் ஸபானி ஆகிய இரு தியேட்டர்களில் நடைபெற்று வருகிறது.

மனித வேட்டை

சேலத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள திஸ்டார் கம்பைன்ஸ் அகாடமி என்ற பட ஸ்தாபனத்தார், சென்ற மாதம் 11ம் தேதி தங்களது முதல் படத்தின் ஆரம்ப விழாவை நடத்தினார்கள். "மனித வேட்டை" என்பது அவர்களது முதல் படம். இப் படத்தின் ஆரம்ப விழா, ரத்னா ஸ்டுடியோவில் நடைபெற்றது. விழாவுக்கு, பக்ஷிராஜா ஸ்டுடியோ முதலாளியும் டைரெக்டருமான எஸ்.

ஸ்ரீ கிருஷ்ணா பிக்சர்ஸார் தயாரித்துக் கொண்டிருக்கும "மருமகள்" தமிழ்ப் படத்தில பழம் பெரும நடிகைகளான எஸ். டி. சுபபுலக்ஷ்மியும, வி. டி ராஜகாந்தமும (பேபி சரஸ்வதியுடன்) காட்சி அளிக்கின்றனர்.

எம். ஸ்ரீராமுலு நாயுடு தலைமை வகித்தார். இப் படத்தை வேல்சாமிக் கவி டைரெக்ட் செய்யக் கூடுமெனத் தெரிகிறது.

ஆகஸ்ட் வெளியீடுகள்

இம் மாதம் முதல் வாரத்தில், விஜயா புரொடக்ஷன்ஸின் "கல்யாணம் பண்ணிப் பார்" தமிழ்ப் படம் தமிழ் நாட்டில் திரையிடப்படுமென்று தெரிகிறது. முழுக்க முழுக்க ஒரு ஹாஸ்யப் படம் இது. ஜி. வரலக்ஷ்மி, என். டி. ராமராவ் பிரதம பாகங்களில் தோன்றிப் பிரமாதமாக நடித்திருக்கிறார்களாம். டைரெக்டர் பிரஸாத் படத்தை விறுவிறுப்பான முறையில் டைரெக்ட் செய்திருக்கிறாராம். நாகிரெட்டி-சக்ரபாணி இருவரின் மேற்பார்வையில் தயாரான படம் இது.

அநேகமாக சுதந்திர தினத்தன்று (15ம் தேதி) எம். எஸ். பிக்சர்ஸின் வெளியீடான "சின்னதுரை" வெளிக்கிளம்பி விடுமாம். இப் படத்தை நடிகர் மஹாலிங்கமே டைரெக்ட் செய்திருக்கிறார். வடுவூராரின் ' இரு மன யோகினிகள்" என்ற நாவலைத் தழுவித் தயாரிக்கப்பட்டுள்ள படம் இது. டி ஆர். மஹாலிங்கம், எஸ். வரலக்ஷ்மி, பி. ஆர். பந்துலு, வி. கே. ராமசாமி, சந்திர பாபு, எஸ். ஆர். லக்ஷ்மி இப்படியாகப் பலர் நடித்திருக்கின்றனர்.

ஜூபிடர்-சங்கீதாவின் கூட்டுத் தயாரிப்பான "ஜமீன்தார்" இம் மாதம் திரைக்கு வருவது நிச்சயமாம். இதில் டி. பாலசுப்ரமண்யம் ஜமீன்தாராக வந்து படாத பாடு படுத்துகிறாராம். அவரிடம் அவஸ்தைப் படும் பாத்திரமாக எம். வி ராஜம்மா சோகரஸக் கட்டங்களில் பிரமாதமாய் நடித்திருக்கிறாராம். மாதுரி தேவி நல்லதொரு பாத்திரமாகத் தோன்றி, கவர்ச்சி மிக்க ஜிப்ஸி நடனம் ஒன்றை ஆடியிருக்கிறாராம். மற்றும், எஸ். ஏ. நடராஜன், ஏழுமலை, முத்துகிருஷ்ணன், முத்துலக்ஷ்மி, ராதா பாய், சிவ சூரியன் ஆகியோர் நடித்துள்ள இப் படத்தின் கதை தற்கால பிரச்னைகள் பலவற்றை அடிப்படையாகக் கொண்டதாக இருக்குமாம். சங்கீத டைரெக்டர் ஜி. ராமனாதன் இப் படத்தில் சில அருமையான ட்யூன்களைப் புகுத்தி யிருக்கிறாராம். படத்தை பி. வி. கிருஷ்ணன் டைரெக்ட் செய்துள்ளார்.

"ஆன்" வெளியீட்டிற்கு
பிரமாதமான ஏற்பாடுகள்

ஒரே தியேட்டரை ஒரு படத்திற்காக ஒரு வருஷத்திற்கு குத்தகை எடுத்திருக்கிறார்கள் என்றால் திகைப்பாகத்தான் இருக்கும். ஆனால். அது உண்மை. பம்பாய், 'லிபர்ட்டி ஸினிமா' என்ற தியேட்டர் "ஆன்" படத்திற்காக ஒரு வருஷ காலத்திற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறது.

"ஆன்"—டைரெக்டர் மெஹ்பூப்பின் மாபெரும் முயற்சி என்பதில் சந்தேகம்

பி. எஸ். கந்தசாமி சா சன்ஸ்

ஸ்தாபிதம் 1904

(டெலிபோன்: 86135)

சேலைகள், வேஷ்டிகள் முதலிய எல்லா விதமான ஜவுளிகளும் நூதன தினுசுகளில், நயமான விலைக்கு எம்மிடம் கிடைக்கும்.

கரூர் விலை! மெத்தைக் கடை!

13, அய்யா முதலி தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை—2.

தலைமை ஆபீஸ்: செக்குப் பேட்டை, காஞ்சிவரம்.



அவர் கையிலிருக்கும் அந்தக் குழந்தை "கல்யாணம் பண்ணிப் பார்" த்ததின் விளைவு என்று தெரிகிறதல்லவா! இப் படம் இம்மாதம் தமிழ்நாட்டில் பல இடங்களில் வெளிவரவிருக்கிறது.

இல்லை. இந்தியாவில் முதன் முதல் தயாரிக்கப்படும் முழு இயற்கை வர்ணப் படமாகும் இது. 1949ம் வருஷம் அக்டோபர் மாதம் மேற்படி படத்திற்கான வேலையை அவர் ஆரம்பித்தார். கடந்த மூன்று வருஷ காலத்தில் பல லக்ஷம் ரூபாய்களைச் செலவிட்டு, இப்படத்தை அவர் தயாரித்திருக்கிறார். படம் தயாராகி முடிவடைந்ததும், இங்கிருந்து பல டெக்னீஷியன்கள் உட்பட டைரெக்டர் மெஹ்பூப் இங்கிலாந்து சென்று, வர்ணப் பிரதிகளைத் தயாரித்துக் கொண்டு இந்தியா திரும்பி வந்தார்.

"ஆன்" கதை வெகு சுவாரஸ்யமாக உள்ளது. முடியரசின் வெற்றியே கதையின் முக்கிய சாராம்சம். பல திடுக்கிடும் சம்பவங்களைக் கொண்டுள்ளது. மயிர் கூச்செரியும் கத்திச் சண்டைகளும், பிரம்மாண்டமான காட்சிகள் பலவும் கொண்டதாக இருக்குமாம்.

சென்ற மாதம் 19ம் தேதி, இப் படம் லண்டனில் வெளியிடப் பட்டது. படத்தின் பிரதம நடிகையான "நிம்மி" லண்டன் சென்று, அந்த ஆரம்ப விழாவில் கலந்து கொண்டு திரும்பி வந்தார். இப்படத்தின் ஹிந்திப் பிரதி இம்மாதம் முதல் தேதி வட நாட்டில் பல நகரங்களில் திரையிடப் பட்டது. தமிழ்ப் பதிப்பு, சென்னை நகரில் இரு தியேட்டர்களிலும், தமிழ் நாட்டிலும் 7-ந் தேதி வெளி வருகிறது. தமிழ் வசனங்களையும், பாட்டுகளையும் முறையே பி. எஸ். ராமய்யாவும், 'கம்பதாஸ'னும் எழுதியுள்ளனர். திலீப் குமார், நிம்மி, பிரேம் நாத், நதிரா, இப்படியாப் பல நக்ஷத்திரங்கள் நடித்திருக்கும் படம் இது.

ஸ்ரீ நடராஜா கல்விக் கழகம்

திருவல்லிக்கேணி, ஸ்ரீ நடராஜா கல்விக் கழகத்தினர், தங்கள் கழகத்தின் ஏழாவது ஆண்டு விழாவை சிறப்பாகக் கொண்டாடினார்கள். சென்ற மாதம் 13ம் தேதி இந்த ஆண்டு விழா, மது விலக்கு மந்திரி கனம் வி. வி. பழனிசாமி கவுண்டர் தலைமையில் நடைபெற்றது.

ரூ. 1000 ரொக்க இனாம்!

நீங்கள் நாடியதெல்லாம் கைகூடும்

எல்லாவிதமான பிரயத்தனம் புரிந்து நீங்கள் மனம் சோர்ந்திருந்தாலும் சரி, இந்த மாய ஜால மோதிரத்தை வாங்கி அணிந்து கொள்ளுங்கள். இதை அணிந்தவுடனே நீங்கள் விரும்பிய நபர் ஆணாயிருந்தாலும், பெண்ணாயிருந்தாலும் தக்ஷணமே வசியமாகி விடுவார். அன்னவர் எவ்வளவு கல்லைப் போன்ற மனம் உடையவராய் இருந்தாலும், ஏழு சமுத்திரங்களுக்கு அப்பால் இருந்தாலும், எல்லாத் தடைகளையும் கடந்து வந்து உங்கள் பேச்சைக் கேட்டு நடப்பார். இஷ்டப்பட்டவரை நீங்கள் மணப்பீர்கள். இதனால் மலட்டு ஸ்திரீக்கும் புத்திர சந்தானம் உண்டாகும். இறந்தவர்களின் ஆத்மாவோடு பேசலாம். பூமியில் இருக்கும் புதையல் உங்கள் கனவில் தோன்றும், லாட்டரி, ஆட்டப்பந்தயம், சூதாட்டம், வழக்கு இவற்றில் ஜெயம் உண்டாகி வெற்றி பெறுவீர்கள், பரீக்ஷையில் தேறுவீர்கள். வியாபாரத்தில் லாபம் உண்டாகும்.

துஷ்ட கிரகம் சாந்தம் அடையும். தரித்திரம் விலகும். நல்லதிர்ஷ்டம் உண்டாகும். ஜீவிய காலம் சுகமாகவும் சந்தோஷமாகவும் கழியும்.

மாந்திரீக மோதிரம் விலை ரூ. 1-15-0. ஸ்பெஷல் மோதிரம் ரூ. 3-0-0. ஸ்பெஷல் சக்தி மிகுந்தது ரூ. 3-15-0. மின்சார சக்தியைப்போல் உடனே இது பலன் தரும். இந்த மாய மோதிரம் கிரஹணம் போன்ற சமயங்களில் தயார் செய்யப்படுகிறது. சூரியன் தவறுதலாய் மேற்கில் உதித்தாலும், இம் மோதிரத்தின் சக்தி தவறமாட்டாது. அப்படிப் பலன் இல்லையென்றால் இரட்டிப்பு சார்ஜ் வாபஸுக்கு காரண்டி. பலனில்லை என்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 1000 இனாம்! ஒருமுறை பரீக்ஷித்துப் பாருங்கள்.

விவரங்களுக்கு எழுதவும்:

Principal,

The Bengal Mesmerism House (G.M.)

JULLUNDUR CITY.

டைரெக்டர்மீது வழக்கு

பிரின்ஸ் ஆர்ட் புரொடக்ஷன்ஸ் என்ற படக் கம்பெனியைச் சேர்ந்த குதூஸ் என்பவர், பட டைரெக்டர் டி எஸ். கோட்னிஸ் என்பவர் மீது, சென்னை மாகாண மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் ஒரு வழக்குத் தொடர்ந்திருக்கிறார். குதூஸ், தமது புகாரில், 'தாம் தயாரிப்பதாக இருந்த "தூபான்" (புயல்) என்ற தெலுங்குப் படத்தில் நடிக்க பிரபல நக்ஷத்திரங்களை ஒப்பந்தம் செய்வதாகக் கூறி பதினைன்காயிரம் ரூபாய்களை வாங்கிக் கொண்டு, அப்படிச் செய்யாது ஏமாற்றிவிட்டதாக' குறிப்பிட்டிருக்கிறார்.

பத்திரிகைக் காட்சிகள்

சென்ற மாதம் 8-ம் தேதி, சென்னை காஸினோ தியேட்டரில், நாராயணன் கம்பெனியார் தங்கள் வெளியீடான "தர்ம தேவதா"வைப் பத்திரிகைக்காரர்களுக்குத் திரையிட்டுக் காட்டினார்கள்.

10-ம் தேதி, ஜெமினியின் "மூன்று பிள்ளைகள்" பத்திரிகைக் காட்சி, சென்னை வெல்லிங்டனில் நடைபெற்றது. இப் படம் சென்ற மாதம் 11-ல் முதல் சென்னையில் இரு தியேட்டர்களிலும், தமிழ் நாட்டின் பல நகரங்களிலும் திரையிடப்பட்டு நல்ல ஆதரவைப் பெற்று வருகிறது.

21-ம் தேதி, மினர்வாவில், ஸிடாடல் பிலிம்ஸின் "ஆத்ம சாந்தி" தமிழ்ப் படத்தின் பத்திரிகைக் காட்சி நடந்தது. இப் படம் சென்ற மாதம் 25ம் தேதி முதல் தமிழ் நாடெங்கும் காட்டப்பட்டு வருகிறது.

புது முயற்சிகள்

ஆதித்தியா ஆர்ட் புரொடக்ஷன்ஸ் என்ற புதிய படத் தயாரிப்புக் கம்பெனி ஒன்று சென்னையில் ஆரம்பமாகியுள்ளது. இக்கம்பெனியின் ஆரம்பவிழா சென்ற மாதம் 13-ம் தேதி, அதிக ஆடம்பரமின்றி ரகஸியமாகவே, நாடகக் கழக காரியாலயத்தில், நடைபெற்றது இவர்கள் ஒரு சமூகப் படத்தைத் தயாரிப்பார்களாம். ரஞ்சன், ஜி வரலக்ஷ்மி, கே சாரங்கபாணி ஆகியோர் பிரதம பாகங்களில் நடிப்பார்களென்றும், இப் படத்தை கே. சுப்பிரமண்யம் டைரெக்ட் செய்வாரென்றும் தெரிகிறது. படத்திற்குப் பெயர் "அப்பா" என்று வைக்கப்படுமாம்.

கோவையில் தோன்றியுள்ள காம்ரேட் பிலிட்ஸார் ஒரு சமூகப் படத்தைத் தயாரிக்கப் போவதாகத் தெரிவித்திருக்கிறார்கள். திருச்சி ரேடியோ நிலையத்தைச் சேர்ந்த எ. ஆர். ஏ. ஹக்கீம் எழுதிய கதையாக இருக்குமாம். படத்தில் ஒன்றிரண்டு நக்ஷத்திரங்களும், நிறையப் புது முகங்களும் நடிப்பார்களாம்.

புரட்சியை உண்டு பண்ணி வரும் "ரத்தக் கண்ணீர்" நாடகம் படமாக்கப்படுமெனத் தெரிகிறது. எம். ஆர் ராதா கோஷ்டியார் நடித்துப் பிரபலமான நாடகம் இது. படத்தை கிருஷ்ணன்-பஞ்சு டைரெக்ட் செய்வார்கள் என்று தெரிகிறது.

ஸபா நிகழ்ச்சிகள்

சென்ற மாதம் 13ம் தேதி, திருவல்லிக்கேணி, ஸ்ரீ பார்த்தசாரதி ஸ்வாமி ஸபாவின் ஆதரவில் மதுரை டி. வெங்கடேசனின் இன்னிசைக் கச்சேரி நடந்தது அன்றையக் கச்சேரி களைகட்டி சிறப்பாக இருந்தது. அரியக்குடியின் பாணியில் மிகவும் அனுபவித்துப் பாடினார் இந்த இளம் பாடகர்.

சென்ற மாதம் 19-ம் தேதி திருவல்லிக்கேணி, ஸ்ரீ பார்த்தசாரதி ஸ்வாமி ஸபாவின் ஆதரவில் டி. ஆர் மஹாலிங்கத்தின் புல்லாங்குழல் கச்சேரி நடந்தது.

மயிலை ரஸிக ரஞ்சனி ஸபா ஆதரவில் 20-ம் தேதி எம். எஸ், சுப்புலக்ஷ்மியின் இன்னிசைக் கச்சேரி, தக்க பக்க வாத்தியங்களுடன் நடைபெற்றது.

சென்ற மாதம் 20ம் தேதி தாம்பரம் சங்கீத ஸபா ஆதரவில் டி. ஆர். மஹாலிங்கத்தின் புல்லாங்குழல் கச்சேரி நடைபெற்றது.

வாழ்த்துகிறோம்

லாவண்யா பிக்சர்ஸின் மானேஜிங் டைரெக்டர் எஸ். கே. சுந்தரராமய்யர் தமது மகன் சிரஞ்சீவி மோஹன்லாலின் திருமணத்தை வெகு சிறப்பாக நடத்தினார். மணமகள் சௌ. விமலா. இத்திருமணம் மதுரையில் சென்ற மாதம் 6-ம் தேதி யன்று சிறப்பாக நடைபெற்றது.

சென்னை மேடையில் சென்ற மாதம்

மெட்ராஸ் சித்விலாஸ சபையினர், சென்ற மாதம் 6ம் தேதி, மயிலை ரஸிக ரஞ்சனி ஸபா ஹாலில் "சுபத்திரையின் சகோதரன்" என்ற சமூக நாடகத்தை நடித்தார்கள். "கல்கி" எழுதிய இக் கதையை நாடகமாக்கி, வசனங்களையும் பாட்டுகளையும் பி. கே. மூர்த்தி எழுதியிருந்தார். அன்று நடைபெற்ற அந்த நாடகத்தை "கல்கி" மட்டும் பார்க்க நேர்ந்திருந்தால் ரொம்ப ரொம்ப வருத்தப் பட்டிருப்பார் என்பது நிச்சயம். வசனங்களைப் பற்றி நினைக்கையிலேயே விசனம்தான் ஏற்படுகிறது. மொத்தத்தில், "சமீப காலத்தில் இவ்வளவு மோசமான நாடகம் ஒன்று நடந்ததே இல்லை" என்ற 'புகழை'த்தான் அன்று நாடகம் அடைந்தது. தெருக் கூத்து கூட எவ்வளவோ மேல் என்று எண்ணும்படி இருந்தது அன்றைய நாடகம் மயிலை ஸ்ரீ தியாகராஜ சங்கீத வித்வத் சமாஜ நிதிக்காக நடைபெற்றது.

சென்ற மாதம் 12ம் தேதி சென்னை ஒற்றைவாடையில், "குகைக் கள்ளன்" என்ற சமூக நாடகம் நடிக்கப் பட்டது. நாடகத்தை, பெரம்பூர் நவஜோதி நாடக சபையினர் நடித்தார்கள். சபையினர் நடித்த முதல் நாடகம் இது என்ற அளவில் நாடகம் வெற்றி என்றுதான் கூற வேண்டும். நடித்த அனைவருமே கூடிய வரை நன்றாக நடித்தார்கள். வசனங்கள் தான் சில இடங்களில் திசை மாறி விரஸமாகவும், அநாவசியமாகவும் இருந்தன.

சேர்ந்தாற் போல் இரு நாட்கள் (12, 13ந் தேதிகள்) மயிலை ரஸிக ரஞ்சனி ஸபாவில் ஆதரவில் டி. கே. கோவிந்தன் எழுதிய "மனோரதம்" நடிக்கப்பட்டது. ஏற்கெனவே இந்த நாடகத்தை சிறப்பாக நடித்துப் புகழ் பெற்ற அதே நடிகர்கள் தான் (தியாகராஜன் தவிர) இரு தினங்களிலும் இன்னும் நன்றாக நடித்தார்கள். சென்ற முறை காணப்பட்ட சிற்சில குறைகள் கூட இம்முறை இல்லாமலிருந்தது குறிப்பிடத் தக்கது. தியாகராஜனாக நடித்த வெங்கடேஸ்வரன் கூட நன்றாகவே நடித்து, நாடகத்தைச் சோபிக்கச் செய்தார். ஆசிரியரது ஹாஸ்ய மிக்க சம்பாஷணைகள் வெகுவாக ரஸிக்கும்படி இருந்தன.

சென்ற மாதம் 20ம் தேதி, பரங்கிமலை மதி தியேட்டரில் "கலிங்கத்து ராணி" என்ற நாடகம் நடைபெற்றது. இந்த நாடகம், ஆரம்பாக்கம் இலவச ஆஸ்பத்திரி நிதிக்காக நடைபெற்றது. நாடகத்திற்கு ஹாஸ்ய நடிகர் கே. சாரங்கபாணி தலைமை வகித்தார். அவர் நடிகர்களை வெகுவாகப் பாராட்டிப் பேசினர். நாடகத்தில் ஹாஸ்ய நடிகராகத் தோன்றி நடித்த டி. எஸ். ஜெயராமனின் நடிப்பு நன்றாக இருந்தது.

தாம்பரம், பைன் ஆர்ட்ஸ் கிளப் அங்கத்தினர்கள் சென்ற மாதம் 19ம் தேதி "மிஸ்டர் சாரியதரிசி" என்ற நாடகத்தை நடித்தார்கள். கர்ப்பக விநாயகர் கோயில் நிதிக்காக நடைபெற்றது இந்த நாடகம்.

சென்ற மாதம் 27-ம் தேதி, தியாகராயநகர், வாணி மஹாலில் "அர்சிமண்டி தேசிகன்" என்ற ஹாஸ்ய நாடகம் நடைபெற்றது. எஸ். வி. சௌந்தராஜன் என்பவர் எழுதிய நாடகம் இது. தியாகப்ரம்ம கான சபை அங்கத்தினர்கள் நடித்தார்கள். நாடகம் சோபிக்கவில்லை; காரணம் போதிய ஒத்திகை இல்லாமைதான்.

வாழ்த்துகிறோம்

நமது பத்திரிகை அச்சாகும், கமர்ஷியல் பிரின்டிங் பிரஸ் ஊழியர் சிரஞ்சீவி பி. ஏ. துளசிங்கம் சௌ. பத்மாவதியைத் தம் வாழ்க்கைத் துணைவியாக அடைந்தார். இந்த விவாகம் சென்ற மாதம் 3-ம் தேதி சென்னை வண்ணாரப் பேட்டையில் நடைபெற்றது.

நீதிபதி

மேலூரில் முகாமிட்டு நாடகங்கள் நடத்திவரும் ஸ்ரீ தேவி நாடக சபையினர், சென்ற மாதம் 3-ம் தேதி "நீதிபதி" நாடகத்தை அரங்கேற்றினர்கள்.

தீபமயமான, இந்தக் காட்சியைப்' பிரபல அகில இந்திய டைரெக்டர் தேவகி போஸ் வெளியிடப் போகும் "ரத்னதீபம்" தமிழ்ப் படத்தில் காணலாம்.



ஆர். ஆர். பிக்சர்ஸின் ''வாழப் பிறந்தவளி''ல்
பி. எஸ். சரோஜாவின் கழுத்தில் அங்கமுத்து
சாட்சியாக, தாலி கட்டுகிறார் ஸ்ரீராம்.

மதருஸ் ஆர்ட் புரொடக்ஷன்ஸின்
"ரோஹிணி" தமிழ்ப் படத்தில் சஹஸ்ரநா
மம், ஜி. வரலக்ஷ்மி தோன்றும் ஒரு கட்டம்.

"அலங்காரத்தைப் பார்த்தே சொக்கிவிடுவார்; கவலைப்படாதே, அப்பா" என்று "மருமகள்"ல் நடிக்கும் உஷாவிடம் நாம் கூறலாம் போலிருக்கிறது அல்லவா?

பொதுஜனம் பேசுகிறார்

*குழப்பம் கூடாது

நம் 'படாதிபதி'கள் வெகுகாலமாக ஒரு தவறு செய்து கொண்டு வருகின்றனர். இதனால் திரைப்பட நேயர்களிடையே ஒருவித மனக்குழப்பமும் ஏற்பட்டு வருகிறது. அதாவது இன்னின்ன நடிகர்-நடிகைகளுக்கு இன்னின்ன பாடகர்-பாடகிகள் இரவல் குரல் கொடுத்திருக்கின்றனர் என்பது சரிவரத் தெரியாததே ஆகும். இம் மனக் குழப்பத்திற்கு படாதிபதிகள் இதனை ஒழுங்கான முறையில் தம் படங்கள் மூலம் நேயர்களுக்கு அறிவிக்காமையே காரணம். படாதிபதிகள் செய்யும் இத் தவறால், இதுபற்றி நண்பர்களிடையே அபிப்பிராய பேதங்கள் உண்டாகி எதிர்பாராத சச்சரவுகளும் வளர்கின்றன. இசைத் தட்டுகளைப் பார்க்கும் வாய்ப்புப் பெற்ற வெகு சிலரே இதனை ஒழுங்காகத் தெரிந்துகொள்ள முடியும். சில சமயங்களில் இசைத் தட்டுகளிலும் தவறான பெயர்கள் காணப்படுகின்றன. பெயர் அபிப்பிராய பேதம் குறித்து சினிமாப் பத்திரிகை 'கேள்வி—பதில்' பகுதிக்கு வரும் கேள்விகளின் தொகையைப் பார்த்தால், இதைத் தெரிந்துகொள்வதில் நேயர்கள் எவ்வளவு ஆர்வமுடையவர்களாக இருக்கின்றனர் என்பது புலனாகும். இனிமேலாவது படாதிபதிகள் தாம் எடுக்கும் படங்களில் நடிக்கும் நடிகர்-நடிகைகளின் பெயர்களையும், அப்பெயர்களுக்கு எதிராக அவர்களுக்குக் குரல் இரவல் கொடுப்பவர்களின் பெயர்களையும் காட்ட ஏற்பாடு செய்தால், அது நேயர்களால் வரவேற்கப்படும் என்பதோடு அவர்கள் அபிப்பிராய வேற்றுமைகளைத் தவிர்க்க உதவியாகும்.

"இளவல்", கொழும்பு-9.

★ பெண்மைக்கு அவமானம்

நாட்டு மக்களிடையே புத்துணர்ச்சி பரப்பி, புதுமை எண்ணங்கள் மலரப் பணியாற்றும் அறிஞர்கள், கவிஞர்கள், கலைஞர்கள், இலட்சிய எழுத்தாளர்கள், நாட்டின் நலனில் நல்லெண்ணங்கொண்டு ஆயுளை அர்ப்பணித்த அரசியல் மேதைகள், தியாகிகள், சுதந்திர வீரர்கள் ஆகப் பலரைப் பெற்றெடுத்துள்ள பெருமை நம் தமிழ் நாட்டு பெண் சமுதாயத்திற்கு உரியது. தமிழனின் தனிப் பெருங்காவியமான 'சிலப்பதிகாரம்' எழுவதற்குக் காரணமாக இருந்த, கற்பின் பெருமையை உலகுக்கு உணர்த்திய கண்ணகியின் வழிவந்த நம்நாட்டுப் பெண்டிர் அச்சம் மடம், நாணம் பயிர்ப்பு இவற்றின் உறைவிடமாகத் திகழ்கின்ற பண்புடையவர்கள். இத்தகைய மாதர்களை மாசுடையவர்களாக, பெண் இனத்துக்கு அவமானம் ஏற்படும் முறையில் திரைப் படங்களில் சித்தரிப்பது வெறுக்கத்தக்க வெட்கப்பட வேண்டிய விஷயம். தற்போதைய தமிழ்ப் படங்களில் கற்பிழந்த கன்னியர்களின் கதைகளை விவரித்து, கல்லூரியில் கல்வி கற்கும் கன்னியர் இல்லறம் ஏகியதும் கணவனுக்கு அடங்கி நடப்பதில்லை—பெற்றோர், பெரியோர் சொல்லுக்கு மதிப்பு வைப்பதில்லை—மாதர் சங்கத்தில் சேர்ந்து குடும்பத்தைக் கவனிக்காமல் ஊதாரித்தனமாக வாழ்ந்து, ஒழுக்கக் கேடுடையவளாக மாறிவிடுகிறாள் என்ற தவறான எண்ணத்தைப் படம் பார்க்கும் பாமர ரஸிகர்களிடையே ஏற்படுத்திவிடுகிறார்கள், இன்றையக் கதாசிரியர்கள். கதாசிரியர்களின் கற்பனையிலே நடமாடும் நங்கையர் இப்படிப்பட்ட தன்மையுடையவர்களாகத் தானா இருக்க வேண்டுமா? கல்வி கற்ற

● பரிசு பெற்ற கடிதம்: எம். எம். எஸ். ஹமீது, 124 டேமடகோடா ரோடு, கொழும்பு



சென்ற மாதம் வெளிவந்து ஓடிக்கொண்டிருக்கும் மாடர்ன் தியேட்டர்ஸாரின் "கல்யாணி" தமிழ்ப் படத்தில் இந்த டென்னிஸ் ஆட்டக்காரர்களை நீங்கள் சந்தித்திருப்பீர்கள்.

காரிகையர் கணவனுக்கு உதவியாக இருந்து, இல்லற வாழ்வில் ஏற்படும் இன்ப துன்பங்களில் பங்கு கொண்டு, அடுக்கடுக்காக இன்னல்கள் எதிர்ப்பட்டாலும் எதிர் நின்று சமாளித்து வறுமையிலும் வாழ்வில் வளம் காணும் இலட்சிய மனைவிகளாக ஏன் இருக்கக் கூடாது! தமிழ்ப் பட கதாசிரியர்கள் இதை உணரவேண்டும்.

"புரட்சிப்பித்தன்",
மதுரை.

எதைக் கவனிக்க?

சினிமாப் படங்களில், ஆரம்பத்தில், கதையின் பெயரும், நடிகர் நடிகைகளின் பெயர்களும் மற்றும் படத்தயாரிப்பில் பங்குகொண்ட அத்தனை பேர்களின் பெயர்களும் காட்டப்படும்போது, அத்துடன் ஒரு நல்ல பாட்டையும் சேர்த்து ரசிகர்களைத் திணர அடிப்பது ஒரு வழக்கமாக இருந்து வருகிறது. சமீபத்தில் வெளிவந்த "வேலைக்காரன்" படத்தில் மேற்படி பெயர்கள் காட்டப்படும் சமயத்தில் சிதம்பரம் ஜெயராமன் பாடிய இனிமைமிக்க, கருத்தோடு கூடிய பாட்டு ஒன்றைச் சேர்த்திருக்கின்றனர். ஒரே சமயத்தில் பாட்டை ரசிப்பதா? பெயர்கள் ஜாபிதாவைக் கவனிப்பதா? என்று ரசிகர்களை ஏன் திண்டாடச் செய்ய வேண்டும்? அந்தப் பாட்டை வேறோர் இடத்தில் சேர்த்திருக்கக் கூடாதா? இனியாவது ரசிகர்களை இம் முறையில் திணற அடிக்க வேண்டாமென படத் தயாரிப்பாளர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

எம். ராஜவடிவேல்,
தச்சநல்லூர்.

அழுகையேமயம்!

நம் சினிமாத் தொழில் நாளுக்கு நாள் முன்னேறிக் கொண்டு வருகிறது. ஆனால், படங்களில் கதைப் பகுதி விஷயத்தில் மட்டும் கவனம் செலுத்தப்படுவதேயில்லை. ஹிந்திப் படங்களின் கதைகளைப்பற்றி ஆராயுங்கால் முன்னேற்றம் சிறிது அளவுகூடக் காண முடியவில்லை. இதுவரை நூற்றுக் கணக்கான ஹிந்திப் படங்கள் வெளிவந்துள்ளன; ஆயினும்

"அவற்றில்" நூற்றுக்குத் தொண்ணூற்று ஒன்பது படங்களின் கதைப்போக்கு ஒரே மாதிரித்தான் உள்ளது. கதாநாயகன்-கதாநாயகியைக் காதலிக்க வேண்டியது. காதலி பெற்றோரின் இணக்கப்படி வேறொருவனை மணக்க வேண்டியது; வாழ்வு முழுதும் அழுது முடிப்பது; கடைசியாக காதலனுடன் சேர்ந்து உயிர் விடுவது. "ரத்தன்", "அன்மோல் கடி", "ஜுகுனு" முதலாக, சிறிது காலத்துக்கு முன் வெளிவந்த 'பாபுல்", 'காலி கடா" போன்ற படங்கள் முடிய, ஒரே மாதிரிக் கதை; ஒரே அழுகைதான். ஹிந்திப்பட முதலாளிகள் ஏன்தான் இப்படி துன்பியல் கதைகளின் (ட்ராஜடி) மேல் இவ்வளவு 'அன்பு' வைத்திருக்கிறார்களோ தெரியவில்லை! கதாநாயகன்-கதாநாயகி சந்திப்புக் கதைகளுக்கும், 'அழுகை'க்கும் என்றுதான் விடிவு காலம் வருமோ தெரியவில்லை. படங்களில் சோகம் இருக்கக் கூடாது என்று கூற நான் முன்வரவில்லை. வாழ்க்கையைச் சித்தரிக்கும் படங்களில் வாழ்க்கையின் மலை, மடுக்களையும், இன்ப துன்பங்களையும் காண்பிப்பதே ஏற்றது. என் கருத்து என்ன வெனில், பத்தாயிரம் அடி நீளமுள்ள படத்தில் ஒன்பதனாயிரத்து ஐநூறு அடி அழுகை மயமாக இருக்கக்கூடாது என்பதுதான்.

எஸ். நாகேஸ்வர ராவ்,
சென்னை-4.

பாரபட்சம்

சமீபத்தில், "பெரிய சோதனை" என்ற தலைப்புடன் வெளிவந்த டாக்குமெண்டரி படத்தைப் பார்த்தேன். அது, அண்மையில் நம் நாட்டில் நடந்த தேர்தலைப் பற்றியதாகும். அதில், தேர்தலில் கலந்து கொண்ட பல்வேறு கட்சிகளின் சின்னங்களும், பல கட்சிகளின் தலைவர்கள் செய்யும் தேர்தல் பிரசாரங்களும், பொதுமக்கள் தங்களது வாக்குச் சீட்டை எப்படி ஒழுங்காக வழங்குகிறார்கள் என்பதும் காணப்பட்டன. தலைவர்கள் செய்யும் தேர்தல் பிரசாரத்தில், வடக்கில் தலைவர்கள் செய்யும் பிரசாரக் கூட்டங்கள்தாம் காட்டப்பட்டன. பொதுமக்கள் தங்கள் வாக்குச் சீட்டுகளை வழங்குவதைக் காண்பிக்கும் போதும் வட இந்தியாவில் நடைபெற்ற இடங்கள்தாம் காட்டப்பட்டன. தென்னிந்தியாவில் பல்வேறு கட்சிகளின் தலைவர்கள் செய்த

தேர்தல் பிரசாரக் கூட்டங்களை ஏன் காண்பித்திருக்கக் கூடாது! தென்னிந்தியாவில் ஒரு இடத்தில் பொதுமக்கள் தங்கள் வாக்குகளை ஒழுங்காக வழங்கியதை படம் பிடித்து ஏன் காட்டி இருக்கக்கூடாது! ஏன் பெரும்பாலும் வட இந்தியாவில் நிகழும் நிகழ்ச்சிகளையே ஏராளமான செய்திக் கதிர்கள்—டாக்குமெண்டரிகள் தாங்கி வரவேண்டும்! வட இந்தியாவில் நடைபெறும் நிகழ்ச்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதுபோல் தென்னிந்தியாவுக்கும் ஏன் கொடுக்கக் கூடாது! ஏன் இந்தப் பாரபட்சம்!

“ஜுபிடர் பிரியன்”
மதுரை.

பரிதாபமிக்க நிலை!

பம்பாயில் பிரதி ஞாயிறு தோறும் தமிழ்ப் படங்கள் காட்டப்பட்டு வருகின்றன. இங்கு தமிழ்ப் படங்கள் ஓடும் அழகே ஒரு தனி ரகத்தைச் சார்ந்தது. “அமரகவி”, கடந்த மே மாதம் 4ம் தேதியன்று பம்பாயில் திரையிடப்பட்டது. முதல் வாரத்தன்று ‘உயிர்களெல்லாம் இன்பமயம்’, ‘யானை தந்தம்போல’, ‘கொஞ்சிப் பேசும் கிளியே’ என்ற பாடல்களைக் காணோம். அடுத்த வாரம் இந்தப் பாட்டுகளும் இருந்தன. இது தவிர, முதல் வாரத்தில் படம் முடியும் பொழுது, ராஜகுமாரி, பாகவதர் மடியில் வெட்டுண்ட மரம்போல் விழுவதோடு நின்று விட்டது. மறுவாரம் முடிவு சரியாகக் காண்பிக்கப்பட்டது. படகுக் காட்சி பிறகு சேர்க்கப்பட்டிருந்தது. இம்மாதிரியான ஏமாற்று வேலைகள் நீடிக்குமாயின் பம்பாய் தமிழ் சினிமா ரஸிகர்கள் அனைவருக்கும் தமிழ்ப் படத்தைப் பார்க்க வேண்டுமென்ற ஆவல் நாளடைவில் குறைந்து கொண்டேபோக ஏதுவாகும். இம்மாதிரியான அநுவருக்கத் தக்க செயல்களை நம் பட முதலாளிகள் கண்டிக்கவேண்டும். தவிர, புதிய படங்கள் திரையிடப்படும் பொழுது, படத்தோடு பொறுப்புமிக்க ஒரு நபரைக் கண்டிப்பாக அனுப்பி வைத்தால் அது நல்ல பலனை அளிக்கும் என்று நம்புகிறேன். பட முதலாளிகள் இதைத் தயவு செய்து சிந்திப்பார்களா!

கே. எஸ். சங்கரசுப்ரமணியன்,
பம்பாய்

பாராட்டுக்கு உரியவர்

ஏப்ரல் மாத “குண்டூசி” இதழில் ‘வெட்டுக்கிளி’யார் எழுதி இருந்த கட்டுரையை மிகப் பாராட்டுகிறேன். அர்த்தமற்ற வார்த்தைகளை—விஷயங்களை—கையாளுவோர் மத்தியில் ‘வெட்டுக்கிளி’யார் ஒருவராவது பாரதி பாடலின் நிலையை எழுதியது மெச்சத் தகுந்த விஷயம் தான். பாரதியார் பாட்டின் புகழ் தற்போது மங்கி வருவதை இசைத் தட்டுகளும், சினிமாக்களும்தான் தடுத்து ஓரளவு பெருமையான ஸ்தானத்தில் வைத்துள்ளன. அதற்கும் அணை போடுவது போல் இருக்கிறது சென்னை சர்க்காரின் அறிக்கை. உண்மையிலேயே பாரதிப் பாடல் பொது சொத்து என்று அவர்கள் கருதினால் இச்சட்டத்தை—அறிக்கையை வாபஸ் பெற வேண்டும். வக்காலத்து வாங்கியே வயிறு வளர்க்கும் ‘காங்காயிஸ்’க் கட்சியினரின் கூச்சலைப் பொருட்படுத்தாது, ‘வெட்டுக்கிளி’யார் இதுபோல் மேன்மேலும் சிறந்த கட்டுரைகளை வரைவார் என நான் எதிர்பார்க்கிறேன்.

ஆர். தங்கவேலன்,
திருச்சி.

உத்திரவாதமுள்ள
பவுன், வெள்ளி நகைகளுக்கு
ஜேயின் ஜுவல்லரி கம்பெனி
1, நாகேஸ்வர ராவ் ரோடு, தியாகராய நகர், சென்னை-17.


ஆகஸ்டு 7-ந்தேதி முதல் ஸ்ரீ கிருஷ்ணா & சித்ரா
இரு தியேட்டர்களிலும், மற்றும் தென்னடெங்கும்
ஓர் உயர்ந்த வர்ண
காவியச் சித்திரம்
நட்சத்திரங்கள்
திலீப் குமார்
நிம்மி · ப்ரேம்நாத்
புதுமுகம்
நாதிரா
மெஹ்பூப்
ப்ரொடக்ஷன்ஸ்
லிமிடெட்
ஆன்
தமிழ்
MG/58
டைரக்ஷன் மெஹ்பூப்
சங்கீதம் நௌஷாத் காமிரா பெர்தூன் ஏ. இரானி
பாட்டு : கம்பதாஸன்
வசனம் : பி. எஸ். ராமையா
ப்ரிண்ட் பை டெக்னிகலர்
ஆல்-இந்தியா பிலிம் கார்பொரேஷன் ரிலீஸ்

புஸ்தகப் பொழுது

வாழ்க்கைப் புயல்

[ஆசிரியர்: "சுகி"; விலை: ரூ. 1-0-0; கிடைக்குமிடம்: புதுமைப் பிரசுரம், பெண்ணடம், தெ. ஆற்காடு ஜில்லா.]

சந்தனக் கோனன் தன் நண்பன், கிருஷ்ணனைத் தன் வீட்டுக்கு அழைத்து வருகிறான். நண்பன் வீட்டிற்குப் போன கிருஷ்ணன், நண்பன் மனைவி, கண்ணம்மா தான் ஏற்கனவே காதல் கொண்டு ஏமாற்ற மடையக் காரணமாக இருந்தவள் என்பதை அறிகிறான். கண்ணம்மாவின் உள்ளத்தில் புயல்; கிருஷ்ணன் உள்ளத்தில் பழி வாங்க வேண்டுமென்ற வெறி. இப்படிப் பட்ட ஒரு சூழ்நிலையைக் கொண்ட நாவலைக் கொஞ்சமும் விரஸம் இல்லாத முறையில் எழுதியிருக்கிறார் ஆசிரியர். தமது வர்ணனைகள் மூலம் கிராமாந்திரக் காட்சிகளைத் தத்ரூபம் வாசகர்கள் கண் முன் கொண்டு வந்து நிறுத்தி விடுகிறார்.

உரிமைப் பெண்

[ஆசிரியர்: பெ. தூரன்; விலை: ரூ. 2; கிடைக்கும் இடம்: அமுத நிலயம், லிமிடெட், சென்னை-18.]

ஆசிரியரின், "உரிமைப் பெண்" முதலிய பன்னிரண்டு சிறு கதைகளின் தொகுப்பே இந்தப் புத்தகம். கதைகளில் "உரிமைப் பெண்" "மழையும் இடியும்" ஆகிய இரண்டும் சிறப்பாக இருக்கின்றன. மற்றவைகள் ரஸிக்கும்படி இருக்கின்றன. கதைகள் யாவும் மிகவும் எளிய - தெளிய நடையில் எழுதப்பட்டுள்ளன. பெரும்பாலான கதைகள் கிராமாந்திர சூழ்நிலையைக் கொண்டவைகள்.

இனிக்கும் இசைகள்

[ஆசிரியர்: கவிஞர் மதிதாசன்; விலை: 5 அணா; கிடைக்குமிடம்: அறிவு மலர்ப் பதிப்பகம், கோவிந்தாகுடி.]

ஆசிரியர் இயற்றியுள்ள பல பாட்டுகளைச் சேர்த்து ஒரு புத்தகமாக வெளியிட்டிருக்கிறார்கள். இசைப்பிரியர்களுக்கு இந்தப் புஸ்தகம் ஒரு விருந்தாக இருக்கும்.

மந்திரி

[ஆசிரியர்: பிஎல். எல். பழநியப்பன்; விலை: 2 அணா; கிடைக்குமிடம்: கணக்கர் தெரு, சேலம் டவுன்.]

புதிதாக வெளிவருவது இந்த வாரப் பத்திரிகை. இதில் அரசியல் விஷயங்கள் சிறு கதை, சினிமாச் செய்திகள், போட்டிப் பந்தயம் எல்லாம் இருக்கின்றன.

கனவுக் கிளி

[ஆசிரியர்: பி. வி. ஆர்; விலை: 8 அணா: கிடைக்குமிடம்; அமுத நிலயம் லிட், சென்னை-18.]

அமுத நிலயத்தார் வெளியிட்டு வரும் குட்டி நாவல் வரிசையில் இதுவும் ஒன்று. அட்டைப் படமே, உள்ளே உள்ள கதையைப் படிக்கும் ஆவலைத் தூண்டுவதாக இருக்கிறது. கதையும் சுவாரஸ்யமாக இருக்கிறது.

ரேடியோ & ஸ்கிரீன்

[ஆசிரியர்: தி. தணிகாசலம்; விலை: தனிப் பிரதி 6 அணா; கிடைக்குமிடம்: தபால் பெட்டி நெ. 369, சென்னை-2.]

புதிதாக வெளி வந்திருக்கும் மாதம் இரு முறைப் பத்திரிகை இது. பெயருக்கு ஏற்றபடி ரேடியோச் செய்திகளும், திரைப் படச் செய்திகளும் இதில் உள்ளன. ஆங்கிலம் - தமிழ் இரு மொழிகளிலும் வெளிவருகிறது இப் பத்திரிகை.

மச்சு வீடு

[ஆசிரியர்: கி. வா. ஜகந்நாதன்; விலை: ரூ. 1-8-0; கிடைக்குமிடம்: அமுத நிலயம் லிட்., சென்னை-18.]

நாடோடிப் பாடல்களை சேகரித்து அவைகளின் அருமை பெருமைகளை மக்கள் உணரும்படி செய்து வருகிறார், கி. வா. ஜகந்நாதன். அப்படி அவர் சேகரித்த பல நாடோடிப்

பாடல்களே "மச்சு வீடு" என்ற இப் புத்தகம். விரும்பிப் படிக்கும் முறையில் மிக எளிய நடையில் ஹாஸ்ய பாணியில் எழுதியிருக்கிறார் ஆசிரியர்.

பஜகோவிந்தம்

[பிரசுரகர்த்தர்: ஆக்கூர் கே. எஸ். ஸ்ரீனிவாஸன்; கிடைக்குமிடம்: சுகுண பப்ளிஷிங் ஹவுஸ், 60, ஈஸ்வரன் கோயில் தெரு, சென்னை-17]

நமது ஒப்பற்ற தலைவர் சிபாரிசு செய்த 'பஜகோவிந்தம்' எவ்வளவு சிறப்பானது, ஒப்பற்றது என்பதை ஒவ்வொருவரும் அறிந்து கொள்ள உதவும் வகையில் இருக்கிறது இப்புத்தகம். பஜகோவிந்தத்தை எதிர்ப்பவர்களும் கூட இந்தப் புத்தகத்தை ஒரு முறை படிக்க நேர்ந்தால் தங்கள் தவறுதலை உணர்ந்து பஜகோவிந்த பக்தர்களாகி விடுவார்கள் என்பது நிச்சயம். ஸ்லோகங்களையும், அதன் கருத்துகளை எளிய நடையிலும் தொகுத்திருக்கிறார். சரியான சமயத்தில் இப்படி நல்லதொரு புஸ்தகத்தை வெளிக் கொண்டு வந்த பிரசுரகர்த்தர் பாராட்டுதலுக்கு உரியவர்.

சினிமா ரசிக மணிகள்

[இணைத்தது: "சிவம்"; விலை: 3 அணா; கிடைக்குமிடம்: ராம் பதிப்பகம், தென்காசி.]

"இது என்ன புத்தகம்! இதை ஏன் வெளியிட்டார்கள்!" இப்படிப் பல வாறு எண்ணத்தான் தோன்றுகிறதே தவிர, வேறு ஒன்றும் எழுதுவதற்கில்லை.

ஜெய் ஹிந்த்

[ஆசிரியர்: ஆர். பார்த்தசாரதி. விலை: அணா 1. கிடைக்குமிடம்: 2, ஏகப்பன் தெரு, சென்னை-2.]

'ஜெய் ஹிந்த் கிராஸ் வேர்ட்ஸ்' என்ற போட்டிப் பந்தயத்தை நடத்தும் ஸ்தாபனத்தினர் வெளிக் கொண்டு வந்திருக்கும் வார இதழ் இது.

மதிப்புரைக்குப் புத்தகம் அனுப்புவோர் இரண்டு பிரதிகள் அனுப்புதல் வேண்டும்
— ஆசிரியர்.

தவணையில் சைகிள்கள்

ரூ. 186000/- மதிப்புள்ள சைகிள்கள்-பட்டுவாடா ஆகிவிட்டன. கடைசி சான்ஸ், நழுவ விடாதீர்கள்.

இந்த அரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். 25% முதலிலும் பாக்கியை 5 மாதாந்திர தவணைகளிலும் செலுத்தலாம்.

ஹிண்ட் சைகிள் ரூ 138/- இங்கிலீஷ் சைகிள் ரூ. 180/- பிலிப்ஸ் ரூ. 210/- ஹெர்குலஸ் ரூ. 220/- பி. எஸ். ஏ. ரூ. 246/- ராலே கிரீன் ரூ. 340/- டைனமோ ஸெட் ரூ. 28/-

ஷரத்துக்களின்படி டிலிவரி எடுத்துக்கொள்ளலாம். உடனே உங்கள் முழு விலாசத்தையும் அருகாமையிலுள்ள ரயில்வே ஸ்டேஷனையும் எழுதவும். புதிய சரக்குகள், புதியதும் அசல் பாகங்களும் கொண்டது. டன்லப் டயர்கள் மற்றும் ட்யூப்கள், ஸீட் இவற்றிற்கு உத்தரவாதம். உடனே நீங்கள் ஆர்டர் செய்யுங்கள்.

JUPITER TRADING COMPANY
Prop: M. T. CO. LTD.
Post Bag 16602, CALCUTTA-4

38 Persons are awarded prizes in our Puzzle No. 13. 1st Prize 1. I. Nanjan, Nilgiris. 2. N. Ramaiya Chettiar, Mannargudi. 3. G. Channa Veeragoud, Bellary. 4. V. Sreeramulu L. Kanchipuram. 5. S. Ranganna, Bombay. 6. Lakshmidhar Das, Orissa. 7. H. C. Nurul Hasan, Ajmer. 8. Sankaran Nair. Coimbatore. 9. Tirlochan Singh. Grewal. Fatehgarh and 3rd prize 20. 4th prize 1. 5th prize 8 persons.

Full particulars are published in the "Rainbow" dated 25—7—52.

ரிஜிஸ்டர் நெ. 277 **ரூ. 25,000 பரிசு** போட்டி நெ. 15.

M/S. Premier Bank of India Ltd-ல் சீல் செய்துவைக்கப்பட்டுள்ள சரியான விடை அவர்கள் அங்கீகாரத்தின் பேரில் பிரசுரிக்கப்படும். முற்றிலும் சரியான விடை அனுப்புபவர்களுக்கு முதல் பரிசு ரூ. 12,000. முதல் இரண்டு வரிசை சரியான விடைக்கு இரண்டாம் பரிசு ரூ. 7000. முதல் ஒரு வரிசை சரியான விடைக்கு மூன்றாம் பரிசு ரூ. 3000. முதல் மூன்று நம்பர் சரியான விடைக்கு நான்காம் பரிசு ரூ. 2000/. முதல் இரண்டு நம்பர்கள் சரியான விடைக்கு 5-ம் பரிசு ரூ 1,000-ம் அளிக்கப்படும். எங்கள் சீல் வைத்த விடைகள்படி எல்லாம் சரியாக இருக்க வேண்டும். எங்கள் போட்டி நிபந்தனைக்கிணங்க, பரிசுத் தொகைகள் வசூலுக்குத் தக்கபடி பகிர்ந்து அளிக்கப்படும்.

AMBAL'S PUZZLES

KEY S. NO. 13 *40 TO 55=190

45	42	54	49
48	55	43	44
51	52	40	47
46	41	53	50

We hereby certify that the above is the solution in original deposited with us by *Ambal's Puzzles* No. 13 on 17/6/52 in a sealed cover which was opened in our presence to-day and that a copy of the above solution has been lodged with the Bank.

For The Premier Bank of India Ltd.

V. Ramanathan
14.7.52
Agent, Madras.

முடிவு தேதி 13—8—52. விடை 27—8—52.

பிரவேசக் கட்டணம்: கூபன் 1-க்கு ரூ. 1—0—0. 6 கூபன் கொண்ட செட் 1-க்கு ரூ. 5—0—0

198

விடைகள் கண்டுபிடிக்கும் விதம்:—42 முதல் 57 வரையுள்ள எண்களை கொடுக்கப்பட்டிருக்கும் கட்டங்களில், மேலிருந்து கீழும், இடமிருந்து வலமும், குறுக்காகவும் எப்படிக் கூட்டினாலும் 198 வரும்படியாக அமைக்க வேண்டும். ஒரு எண்ணை ஒரே தடவைதான் உபயோகிக்க வேண்டும். **விதிகள்;**-தனி வெள்ளைக்காகிதத்தில் தேவையான கட்டணத்துடன் எத்தனை கூபன்களை வேண்டுமானாலும் எழுதி அனுப்பலாம். ஒவ்வொரு கூப்பனிலும் பெயர், விலாசம், எண்கள் எல்லாம் ஆங்கிலத்தில் விளக்கமாக எழுதப்பட வேண்டும். பிரவேசக் கட்டணத்தை கிராஸ் செய்த போஸ்டல் ஆர்டர் மூலமாவா அல்லது மணியார்டர் மூலமாகவோ அனுப்பலாம். மணியார்டர் செய்த ரசீதை கூபன்களுடன் சேர்த்து அனுப்ப வேண்டும். வசூலுக்குத் தகுந்தபடி, பரிசு பகிர்ந்து அளிக்கப்படும். போட்டி சம்பந்தமாக மானேஜர் தீர்ப்பே முடிவானதும்; சட்டபூர்வமாய்க் கட்டுப்படுத்துவதுமாகும். போட்டி முடிவு RAINBOW மாதமிருமுறை பத்திரிகையில் பிரசுரிக்கப்படும், அல்லது 4 அணா ஸ்டாம்பு அனுப்பினால் விடை அனுப்பப்படும்.

கூபன்கள் அனுப்ப வேண்டிய விலாசம்:—

AMBAL PUZZLE No. 15

28, (21) Thandavaraya Gramani Street, Madras—21.

ரிஜிஸ்டர் நெ. 277. **ரூபாய் 25,000 பரிசு** போட்டி நெ. 16.

சரியான விடை Premier Bank of India Ltd., Madras-ல் சீல் செய்து வைக்கப்பட்டுள்ளது. (மற்றவை மேலே கூறப்பட்டுள்ளது போல). முடிவு தேதி 27-8-52. விடை: 12-9-52

பிரவேசக் கட்டணம் கூபன் 1-க்கு ரூ. 1/- 6 கூபன் கொண்ட செட் 1-க்கு ரூ. 5/-

202

விடைகள் கண்டுபிடிக்கும் விதம்:— 43 முதல் 58 வரையுள்ள எண்களை கொடுக்கப்பட்டுள்ள கட்டங்களில் எப்படிக் கூட்டினாலும் 202 வரும்படி அமைக்கவேண்டும். ஒரு எண்ணை ஒரே தடவைதான உபயோகிக்க வேண்டும். மற்ற விபரங்கள் மேற்கூறியதுபோல்.

AMBAL PUZZLE No. 16

28, (21) Thandavaraya Gramani St., Madras—21.

ராமராஜுவின் கனவு

வெ. ர. நாகராஜன்

சிறு கதை

அன்று சனிக்கிழமை. ரேஷன் கடையில் கூட்டம் அதிகமாக இருந்தது. மெள்ள மெள்ள ஒவ்வொருவரையும் அனுப்புவதற்குள் ராமராஜுவுக்குப் 'போதும் போதும்' என்றாகிவிட்டது. இரவு ஏழரை மணிக்குப் பூட்ட வேண்டிய கடையை ஒன்பது மணிக்குப் பூட்டிக்கொண்டு கிளம்பினான் "ஹூம்! இந்தச் சனியன் பிடித்த வேலையிலிருந்து என்றைக்கு விடுதலை கிடைக்குமோ!" என்ற சொற்கள் அவன் வாயினின்றும் வெளிவந்தன.

அதிக வேலையால் களைத்துப் போனதால்தான் அவன் இந்த மாதிரிச் சலித்துக்கொண்டான் என்று நினைத்துவிடாதீர்கள். செய்து வந்த வேலையே அவனுக்குப் பிடிக்கவில்லை என்பதுதான் அவன் மனக்குறைக்கு முக்கிய காரணம். ஆம்; 'ரேஷன் கடை குமாஸ்தா வேலைக்கு ஒரு முழுக்குப் போட்டுவிட்டு எப்படியாவது ஒரு சினிமா நடிகனாகிவிட மாட்டோமா?' என்று அவன் ஆசைப்பட்டுக்கொண்டிருந்தான். விழித்திருக்கும் போதெல்லாம் இதே நினைவு; தூக்கத்திலோ இதைப் பற்றியே கனவு. சினிமாவில் யாராவது நன்றாக நடிப்பதைப் பார்க்கும்போதே அவனுக்கு இருப்புக் கொள்ளாது. திரையிலுள்ள அந்த நடிகனுடன் சபையிலுள்ள அவனும் சேர்ந்து நடித்துக்கொண்டிருப்பான்!

நாளாக ஆக ராமராஜுவின் இந்த ஆசை முற்றத் தொடங்கியது. நண்பர்களிடம் பேசும்போதுகூட தன்னை மறந்து நடிக்க ஆரம்பித்துவிடுவான். சினிமாவில் கேட்ட வசனங்களையெல்லாம் அப்படி அப்படியே ஒப்புவிக்கத் தொடங்கிவிடுவான்.

நண்பர்களில் சிலர் அவனுக்கு 'அரைப் பைத்தியம்' என்று பட்டம் கட்டினார்கள். ஆனால், அவன் அதைப்பற்றியெல்லாம் கவலைப்படவில்லை. "பெரிய பெரிய கலைஞர்களெல்லாம் கொஞ்சம் 'ஒரு மாதிரி'யாகத்தான் இருப்பார்கள்" என்று அவன் எங்கேயோ படித்திருக்கிறான். 'இன்று அரைப் பைத்தியமாக இருக்கும் நாம் நாளைக்கே தமிழ் நாட்டின் தலைசிறந்த நடிப்புக் கலைஞனாக மாறிவிடப் போகிறோம்' என்று முடிவு கட்டியிருந்தான் அவன். 'ஆம்! கேவலம் ரேஷன் கடை குமாஸ்தாவாக இருப்பதற்காக ஆண்டவன் நம்மைப் படைக்கவில்லை; நடிப்புக் கலையை உத்தாரணம் செய்வதற்காகவே இறைவன் நம்மைச் சிருஷ்டித்திருக்கிறான்' என்று அவன் உள்ளுணர்வு சொல்லிக்கொண்டிருந்தது. தன் எண்ணம் நிறைவேற, அவன் எத்தனையோ முயற்சிகள் செய்தான்.

ஆனால், எல்லாம் வீணாயின. படத் தயாரிப்பாளர்கள் பிரபல டைரெக்டர்கள், உயர்ந்த நடிகர்கள் இவர்களில் பலரும் எட்டாக் கனிகளாக இருந்தார்கள். இவர்களில் ஒன்றிரண்டு பேர் வீட்டில் அவன் அடைந்த அனுபவங்கள் மறக்க முடியாதவையாயிருந்தன. ஒரு ப்ரொட்யூசர் வீட்டின் முன் இருந்த கூர்க்கா சிப்பாய் ராமராஜுவை விழித்துப் பார்த்த உடனேயே அவனுக்கு சப்த நாடியும் ஒடுங்கி விட்டது. ஒரு நடிகரின் பங்களா வாசலில் இருந்த சேவகன் "போய்யா, வேறே வேலை இல்லை!" என்று முகத்தில் அடித்தாற் போல் சொல்லிவிட்டான். ஒரு டைரெக்டரின் மாளிகை வாசலில் யாரும் இல்லாதது கண்டு சந்தோஷத்துடன் நுழைந்த ராமராஜுவை

ஒரு வேட்டை நாய் பாய்ந்து வரவேற்றது. வாசற்படி வரை அது வழியனுப்ப ராமராஜு திரும்பிப் பார்க்காமல் ஓட்டம் பிடித்தான்!

இத்தகைய அனுபவங்களினால் அவன் மனதில் பெரிய நிராசை குடிகொண்டிருந்தது. ஆயினும், அரசாங்கத்தின் அடக்குமுறை பெருகப் பெருக வளர்ந்து வரும் எதிர்ப்பைப் போல, தோல்வி அடைய அடைய அவன் மன உறுதி வலுப்பட்டு வந்தது. 'எப்படியும் ஒரு நடிகனாகியே தீருவது' என்று அவன் கங்கணம் கட்டிக் கொண்டான்,

• • •

அன்றொரு நாள் மாலை; மணி ஐந்திருக்கும். மௌன்ட்ரோடுவழியாகப்போய்க் கொண்டிருந்தான் ராமராஜு. ஒரு பெரிய ஹோட்டலை அவன் அணுகிக் கொண்டிருந்த சமயம் ஒரு முக்கியமான காட்சியைக் காண நேர்ந்தது. அழகான பச்சை வர்ணக் கார் ஒன்று அந்த ஹோட்டலின் முன் வந்து நின்றது. அதிலிருந்து பெரிய மனிதர் ஒருவர் இறங்கி ஹோட்டலுக்குள் போனார்.

ஹோட்டலுக்குள் நுழைந்த மனிதரையே பார்த்துக் கொண்டிருந்த ராமராஜுவுக்கு சினிமாப் பத்திரிகைகளில் தான் அடிக்கடி பார்த்திருந்த டைரெக்டர் கிருஷ்ணகுமாரின் படம் நினைவுக்கு வந்தது. 'ஆம், இவர் அவரேதான், சந்தேகமில்லை!'

தன் கண்கள் செய்த பாக்கியத்தை வியந்தவாறே நின்றுவிட்டான் ராமராஜு. சில நிமிஷங்களுக்குப் பின் சுய உணர்வு வந்ததும் 'நாமும் காப்பி சாப்பிடுவோம்' என்று அந்த ஹோட்டலுக்குள் நுழைந்தான்.

டைரெக்டரைக் கீழே எங்கும் காணாமல் 'மாடியறைக்குப் போயிருப்பார்' என்று ஊகித்துக் கொண்டு ராமுவும் மாடிக்குச் சென்றான்.

ராமராஜுவின் அதிர்ஷ்டவசமாக டைரெக்டர் உட்கார்ந்திருந்த நாற்காலிக்கு அருகில் மற்ற நாற்காலிகள் காலியாக இருந்தன. கிருஷ்ணகுமாருக்கு எதிர்த்தாற்போல் உட்கார்ந்தான் ராமராஜு. டைரெக்டர் மசாலா தோசை சாப்பிட்டுக் கொண்டிருந்தார். ஒரு சாதா தோசைக்கு 'ஆர்டர்' கொடுத்துவிட்டு டைரெக்டரையே பார்த்து ரஸித்துக் கொண்டிருந்தான் அவன்!

பார்க்கப் பார்க்க அவரது உருவம் அவனை வசீகரிக்கத் தொடங்கியது. அடடா! அவர் முகத்தில் தான் எத்தனை கம்பீரம்! அகன்ற பரந்த நெற்றியும், நீண்ட மூக்கும், கூரிய கண்களும் 'அவர் ஒரு பெரிய அறிவாளி' என்று பறை சாற்றுகின்றனவே! ஆம்! சந்தேகமில்லை. "இன்பப் பொங்கல்", "சக்திச் சிங்கம்", "கொலைகாரன்", "கொள்ளைக்காரி" முதலிய ஒப்பற்ற படங்களை டைரெக்ட் செய்த அவர் சாமானிய மனிதராகவே இருக்கமுடியும்!

ராமராஜு இவ்விதமாக சிந்தனையிலாழ்ந்திருக்கும் போது டைரெக்டர் தம் சிற்றுண்டியை முடித்துக் கொண்டு புறப்பட்டு விட்டார். அவர் போன திக்கையே பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான் ராமு...

"என்ன, ஸார்! வேறே என்ன வேணும்?" என்ற சொற்கள் திடீரெனத் தன் காதில் பட்டதும் தான் திடுக்கிட்டு விழித்தான் ராமு. அவன் எதிரே நின்று கொண்டிருந்த ஸர்வரோ, ராமுவின் மயக்கம் முழுவதும் தெளியவில்லை என்று கருதியோ என்னவோ அவனைத் தட்டி "என்ன, ஸார்! 'வேறே என்ன வேணும்?' என்று கேட்டுக் கொண்டிருக்கிறேன்! நீங்களானால் எங்கேயோ பார்த்துக் கொண்டிருக்கிறீர்களே!" என்று சற்று உரத்த குரலில் மறுமுறை கேட்டான்.

சிந்தனைகளினின்றும் முழுவதும் விடுபட்ட ராமுவின் முகத்தில் அசடு வழிந்தது. "ஹி...ஹி...ஹி...அவர் வந்து... இங்கே...எங்கே வந்தார் என்று பார்த்தேன்!......" என்று குழறினான்.

இதைக் கேட்ட ஸர்வர் சிரித்துக் கொண்டே, "ஹும்!......அவருக்

மூன்றே ரூபாய்க்கு
கைக்கடிகாரம்

மூன்றே ரூபாய்க்கு நீங்கள் ஒரு கைக்கடிகாரத்தைப் பெறலாம். அழகுக்கும், உறுதிக்கும் பத்து வருஷ உத்திரவாதம் உண்டு.

தபால் சார்ஜ் தனி.

JOHNSON WATCH IMPORT Co., (G.M.)
JULLUNDUR CITY.

5 ரூபாயைக் கொண்டு ரூ.19,532 சம்பாதியுங்கள்

உங்களுக்கு உத்தியோகமில்லாமலிருந்தாலும், அல்லது நீங்கள் ஒரு மாணவராக இருந்தாலும், நீங்கள் ஆபீஸரானுலும், வியாபாரியானுலும், ஆணுனுலும், பெண்ணுனுலும், மேலே குறிப்பிட்ட தொகையை ஐந்தே ரூபாய் மூலம் பெறலாம்.

முழு விவரங்களுக்கு
ஆங்கிலத்தில் எழுதுங்கள்:

NATIONAL MONEY CIRCULATION SOCIETY
(G.M.) Charanjitpura,
JULLUNDUR CITY.

கென்ன... அவர் — தினமும்தான் வருகிருரே!...சாயங்காலம் ஐந்து ஐந்தரையானுல் இங்கே தவருமல் விஜயம் செய்து விடுவார்—என் கழுத்தை அறுக்க!'' என்று கூறினுன்.

"அவர் தினமும்தான் வருகிருரே!''— இந்தச் சொற்கள் ராமுவின் மனதில் பலமாகப் பதிந்து விட்டன. 'என்ன!... அவர் தினமும் இங்கே வருகிருரா? அடடா!...இந்த ஹோட்டல்தான் எவ்வளவு பாக்கியம் செய்தது! அவர் உட்கார்ந்திருந்த இந்த நாற்காலி பூர்வ ஜன்மத்தில் என்ன புண்ணியம் செய்ததோ! அவர் கைபட்ட அந்த டவராவும் டம்ளரும்தான் எவ்வளவு யோகசாலிகள்!...'

எண்ணக் கீற்றுக்களில் மூழ்கிப் போயிருந்த ராமுவின் மனதில் திடீரென ஒரு யோசனை பளிச்சிட்டது 'நாமும் இந்த ஹோட்டலில் ஒரு சர்வரானுல் என்ன? அவர் தினமும் மாலை இங்கே காப்பி சாப்பிட வருவார். மெல்ல மெல்ல அவரைப் பழக்கம் செய்து கொண்டு நம் காரியத்தைச் சாதித்துக் கொள்ளலாமே!...'

'பிரபல நடிகர்களில் ஒருவர் தம் வாழ்க்கையை ஆரம்பத்தில் ஹோட்டலில் சர்வராக இருந்திருக்கிருர்' என்று சினிமாப் பத்திரிகைகளில் படித்ததெல்லாம் அவன் நினைவுக்கு வந்தது. நடிகர் சந்திரசேகரன் என்ன, சங்கரலிங்கம் என்ன, சோணய்யா தான் என்ன எல்லோரும் ஹோட்டல் சர்வர்களாக இருந்திருக்கிருர்கள், அல்லவா? நாமும் அதே பாதையைப் பின்பற்றும்படி சந்தர்ப்பம் நேர்ந்திருக்கிறது! இந்த வேலைக்குத் தாற்காலிகமாக வருவதில் தவருென்றுமே யில்லை. ரேஷன் கடையிலிருந்து சாப்பாட்டுக் கடைக்கு வருகிருேம். அவ்வளவுதானே!—

இத்தகைய ஆலோசனைகளிலாழ்ந்த ராமு, தானும் அந்த ஹோட்டலில் ஒரு சர்வராகச் சேர்ந்துவிடுவது என்று முடிவு.

இரண்டு தினங்களுக்குப் பின்பு அந்த ஹோட்டல் முதலாளியைச் சந்தித்து, தனக்கு அங்கே சர்வர் வேலை கொடுக்கும்படி ராமராஜு கேட்டான். 'புதிதாக ஆள் வைப்பதற்கில்லை' என்று சொன்னுர் அந்த முதலாளி! ராமுவோ அவரை விடுகிற வழியாயில்லை. அவர்

ஸ்ரீ கிருஷ்ண பிக்சர்ஸார் தயாரித்து
வரும் "மருமகள்" தமிழ்ப் படத்தில்
பத்மினி முக்கிய பாகத்தில் நடிக்கிறார்.

வி. சாந்தாராமின் டைரெக்ஷனில், அவரது தயாரிப்பான "பர்ச்சயின்" ஹிந்திப் படத்தில் ஜெயஸ்ரீ பிரமாதமாக நடித்திருக்கிறாராம்.

காலில் விழுந்து கெஞ்சினான். 'எல்லோருக்கும் கொடுக்கும் சம்பளத்தை விடத் தனக்குக் கொஞ்சம் குறைவாகத் தந்தால்கூடப் போதும்' என்று கேட்டுக் கொண்டான். கடைசியில் முதலாளியின் மனம் இரங்கிற்று. ராமுவுக்கு 'ஸர்வர்' வேலை கிடைத்தது! ராஜபதவி கிடைத்திருந்தால்கூட அவன் அத்தனை சந்தோஷப் பட்டிருக்க மாட்டான்!

ஆனாலும், 'ஸர்வர்' வேலை கிடைத்தால் மட்டும் போதுமா? மாடி அறைகளுக்கு ஸர்வர் ஆக வேண்டுமே, அதற்கென்ன செய்வது? என்று யோசிக்க ஆரம்பித்தான். வழியும் தெரிந்தது. "மாடிப்படி ஏறி இறங்கிக் காலெல்லாம் வலிக்கத் தொடங்கி விட்டது" என்று முணுமுணுத்துக் கொண்டிருந்த சகபாடி ஒருவனுக்குத் தன் மனமார்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துவிட்டு "கொஞ்ச நாள் நீங்கள் சிரமப் படாமல் இருங்கள்! மாடி அறைகளை நான் கவனித்துக் கொள்ளுகிறேன்!" என்று ஆதரவாக யோசனை சொன்னான்; பழம் நழுவிப் பாலில் விழுந்தது!

இனி, அது தன் வாயில் விழும்படி செய்ய வேண்டியது தன் வேலை என்று உணர்ந்து கொண்டான் ராமு அதன் படியே நடக்கவும் தொடங்கினான். டைரெக்டர்வரும்போதெல்லாம் அவரை 'ஸ்பெஷலா'கக் கவனிக்கத் தொடங்கினான். கிருஷ்ணகுமாருக்கு ராமு கொடுக்கும் காப்பியைப் போல் அந்த ஹோட்டல் முதலாளியே சாப்பிட்டிருக்க மாட்டார்! கிருஷ்ண குமாருக்காகப் போடப்படும் சாதா தோசை கூட நெய்த் தோசையாக இருக்கும்!

டைரெக்டர் வரும்போதே ராமராஜு "வாருங்கள் ஸார், வாருங்கள்!" என்று அன்பழைப்பு விடுப்பான். "ஏதப்பா, வீட்டைப்போல் ஹோட்டலிலும் வரவேற்பு பலமாக இருக்கிறதே!' என்று கிருஷ்ண குமார் சிரித்துக் கொண்டே சொல்வார். "அதில் தவறென்ன ஸார்! ஹோட்டலானாலும் வீடானாலும் வந்தவரை அன்போடு உபசரிக்க வேண்டியது நம்முடைய கடமை அல்லவா?" என்பான் ராமராஜு. "என்னப்பா என்னிடம் பேசிக் கொண்டே நிற்கிறாயே! மற்றவர்கள் வந்திருப்பது உன் கண்ணுக்குப் படவில்லையா?" என்று டைரெக்டரே நினைவூட்டிய பின்தான் மற்றவர்களையும் தான் கவனிக்க வேண்டும் என்பது அவன் நினைவுக்கு வரும்!

நாளாக ஆக ராமராஜு—கிருஷ்ண குமார் இவர்களின் உறவு பலப்பட்டு வந்தது. கிருஷ்ண குமாரிடம் தனக்குள்ள மதிப்பை தான் போடும் 'பில்' மூலமாகவும் காட்டத் தொடங்கினான் ராமு. டைரெக்டர் எவ்வளவு சாப்பிட்டாலும் 'பில்' தொகை என்னமோ ஓரளவுக்கு உட்பட்டே தான் இருக்கும்!

நாட்கள் உருண்டோடின...ராமராஜுவுக்கும் டைரெக்டருக்கு மிடையே ஏற்பட்ட நட்பு மேலும் வளர்ந்து கொண்டே வந்தது. டைரெக்டர் 'எள்' என்பதற்கு முன் எண்ணெயாக மாறி விடுவான் ராமு அவனுடைய இந்தப் போக்கைக் கண்டு சிலர் சிரிக்கக்கூட ஆரம்பித்தார்கள். 'டேபிள்' துடைக்கும் பாலகிருஷ்ணன் நாயர்கூட "எந்தா ஸாமி! அத்தேகம் வரும்பளைக்கு நிங்ஙள் எந்தா இத்ர ஸல்கசரம் செய்யுன்னது" ("என்னய்யா! அவர் வருவதற்குள் நீங்கள் ஏன் இவ்வளவு உபசாரம் செய்கிறீர்கள்!") என்று கேட்க ஆரம்பித்து விட்டான்!

ஆனால், ராமுவோ இதொன்றையும் கவனிக்காமல் தன் காரியத்திலேயே கண்ணாயிருந்தான்!

கடைசியில் அவன் பொறுமைக்கும் முடிவேற்பட்டது. "இனி டைரெக்டரிடம் கேட்டுவிட வேண்டியதுதான்!" என்று ஒருநாள் முடிவு செய்தான்.

அன்று கிருஷ்ண குமார் வந்தவுடன் வழக்கத்தைவிடச் சற்று அதிகமாகவே உபசாரம் செய்தான். அவர் சிற்றுண்டியை முடித்துக் கொண்டு கீழே இறங்கினார்.

அவர் காரில் ஏறப்போகும் சமயம், பாணம்போல் பாய்ந்து வந்தான் ராமராஜு.

"ஸார்...ஸார்! ஒரே ஒரு விஷயம்!" கிருஷ்ணகுமார் திரும்பிப் பார்த்தார்.

"என்னடப்பா ராமு! என்ன வேணும்?"

"ஹி...ஹி...ஹி இல்லை...உங்களிடம் ஒன்று கேட்க வேண்டும் என்று ரொம்ப நாட்களாகவே நினைத்துக் கொண்டிருக்கிறேன்..."

"அதற்கென்ன! தாராளமாகக் கேளேன்!..."

"எனக்கு...எனக்கு...சினிமாவில் சேரவேண்டும் என்று ரொம்ப ஆசையாக இருக்கிறது!"

"அதற்கென்ன! தாராளமாகச் சேர்ந்து கொள்...!"

"இல்லை...ஹி...ஹீ...அதற்கு உங்கள் உதவி வேண்டும்!"

"என் உதவியா?...நான் என்னப்பா செய்யமுடியும்?"

"ஹி...ஹீ...உங்களைப்போல் பிரசித்தி பெற்ற டைரெக்டரால் முடியாது என்ருல், வேறு யாரால்தான் முடியும்?"

"என்ன! என்ன! என்னைப்போல் பிரசித்தி பெற்ற டைரெக்டரா?...என்னப்பா, நீ சொல்வது ஒன்றுமே புரியவில்லையே!"

"என்ன ஸார், விளையாடுகிறீர்கள்! கிருஷ்ண குமாரைப் போல் பிரசித்தி பெற்ற டைரெக்டர் வேறு யார் தான் இருக்கிருர்கள்? அவரால்..."

'இடி, இடி' யென்று சிரித்தார் ராமுவின் எதிரில் நின்று கொண்டிருந்த ஒருவர்.

"நல்ல ஆளப்பா நீ! என்னைப் போய் கிருஷ்ணகுமாராக்கி விட்டாயே! நான் யார் தெரியுமா? இதோ காட்டுகிறேன், பார்!" என்று சொல்லிக் கொண்டே தம் 'கோட் பாக்கெட்'டிலிருந்து ஒரு 'விஸிட்டிங் கார்டை' எடுத்துக் காண்பித்தார். அதில் "என். எஸ். அங்குசாமி அகௌன்டென்ட், இந்திரா கெமிக்கல்ஸ் சென்னை" என்று அச்சடிக்கப்பட்டிருந்தது!

ராமுவின் தலை சுழன்றது. எதிரேயிருந்த கட்டடங்களெல்லாம் தவிடு பொடியாகித் தன் தலை மீது விழுவது போன்ற ஒரு பிரமை அவனுக்கு ஏற்பட்டது. திடீரென்று உலகமெல்லாம் அஸ்தமித்தது போன்ற ஓர் உணர்ச்சி...!

சில வினாடிகளுக்குப் பின் அவனுக்குச் சுய உணர்வு வந்தது. அங்குசாமியைத் திரும்பிக் கூடப் பார்க்காமல் ஹோட்டலை நோக்கி நடந்தான்,

---

அருணாவின் அடுத்தது

அருணா பிலிம்ஸின் பலபாஷைப் படமான, அவர்களது இரண்டாவது தயாரிப்பின் படப்பிடிப்பு ஆரம்பமாகி விட்டது. இனி படப்பிடிப்பு அவர்களது சொந்த ஸ்டுடியோவான 'பிலிம் சென்டரில்' தொடர்ந்து நடைபெறுமாம். படத்தை ஆர். எம். கிருஷ்ணசாமி டைரெக்ட் செய்து வருகிருர் நாகய்யா, மனோஹர், நரசிம்ம பாரதி ராமசாமி, சிவதாணு, பண்டரிபாய், ஜெயம்மா பிரதம பாகங்களில் நடிக்கின்றனர். இப்படத்தின் வசனங்களை ஏ. டி. கிருஷ்ணஸ்வாமி எழுதியிருக்கிருர்.

மாதவிடாய் நின்றுபோனதா?

நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ்) Regd. by the Central Drugs Laboratory of Govt. of India. Under No. CDL / 688

[illegible] எத்தனை மாதமானாலும் நின்றுபோன மாதவிடாய் [illegible] வெளியாகும். அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம் [illegible]. போலி மருந்துகளை வாங்கி ஏமாறாதீர்கள். விலை ரூ. 8-8-0 சாதாரண கேஸ்களுக்கு (Ordinary) ரூ. 10-8-0 [illegible] கேஸ்களுக்கு (Special) (தபால் செலவு தனி)

கர்ப்பத்தடை

நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்)

Government Registered No. 206.

12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருஷத்திற்கு [illegible] கருவைத்தடுக்கும். மாதவிடாய் தவறாது. அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம். போலி மருந்துகளை வாங்கி ஏமாறாதீர்கள். (ஸ்பெக் ஜெல்லி) [illegible] கருவை தடுக்கும். பில்ஸ் விலை ரூ. 12-0-0 ஜெல்லி விலை ரூ. 6-8-0 (த. செ. தனி)

[illegible]: SEENU & CO., Post Box, 1638, (R) MADRAS-1.

பிரான்ச்: 134 SERANGOON ROAD. சிங்கப்பூர்.

சிலோன் ஏஜண்ட் NEW COLOMBO MEDICAL STORES, 62. MAIN ST., கொழும்பு-11

பிரம்ம லோகம்

கிருஷ்ணா பிக்சர்ஸாரின் படம் என்றாலே நக்ஷத்திர மயமாக இருக்கும் என்று எதிர்பார்க்கலாம். அதே மாதிரித்தான் அவர்களது "மருமகளு"ம் இருக்கும். சென்னையில் இப்படம் ஒன்றுக்கு மேற்பட்ட ஸ்டுடியோக்களில் தயாராகி வருவதிலிருந்து, இப்படம் சீக்கிரமே திரைக்கு வந்துவிடுமென தெரிகிறது. லலிதா, பத்மினி எஸ். டி. சுப்புலக்ஷ்மி ஸி. டி. ராஜகாந்தம். என். டி. ராம ராவ், எஸ். வி. ஸஹஸ்ர நாமம் இப்படியாகப் பலர் நடித்துவரும் படம் இது. இதே படம் தெலுங்கிலும் உடனுக்குடன் 'அம்மாலக்கலு" வாகத் தயாராகிறது.

பசியின் கொடுமை

கே அண்டு கே புரொடக்ஷன்ஸின் "பசியின் கொடுமை" தமிழ்–மலையாளம்-தெலுங்கு மூன்று பாஷைகளில் ஆலப்புழை உதயா ஸ்டுடியோவில் படங்களாகி வருகின்றன. பி. எஸ். சரோஜா, எம். எஸ். திரௌபதி, தங்கம். தீக்குறிச்சி, ப்ரேம் நஸீர் இப்படிப் பலர் நடித்து வருகின்றனர். தமிழ்ப் படம் ஸெப்டம்பரில் திரையிடப்படலாமெனத் தெரிகிறது இப்படத்தில் ரமணி (கோபால்) தேவமாதாக வந்து நடனமாடுகிறாராம்.

மனோஹரா

மனோஹரா பிக்சர்ஸாரது (தமிழ்-தெலுங்கு-ஹிந்தி) மூன்று பாஷைப் படமான "மனோஹரா" துரிதமாகப் படமாகி வருகிறது. நாடகக் கதையிலிருந்து படக் கதையில் ரஸிக்கத் தக்க சில மாறுதல்கள் செய்யப் பட்டுள்ளனவாம். இப்படத்தில் வசந்தசேனையாக டி. ஆர். ராஜகுமாரி நடிக்கிறார். படங்களை பிரஸாத் டைரெக்ட் செய்து வருகிறார்.

ஆத்ம ஸகி

திருவனந்தபுரம், மெரிலண்ட் ஸ்டுடியோவில், நீலா புரொடக்ஷன்ஸாரது "ஆத்ம ஸகி" படப்பிடிப்பு முடிவடைந்து நகாசு வேலைகள் நடைபெற்று வருகிறதாம். தமிழ்-மலையாளம் இரு மொழிகளில் படமாகி வருகிறது "ஆத்ம ஸகி" இதன் வசனம் பாடல்களை "கம்பதாஸன்" எழுதியுள்ளார். ஜி. ஆர். ராவ் டைரெக்ஷனில் முற்றுப் பெற்று வரும் இப்படங்களில். பி. எஸ். சரோஜா, எம். என். நம்பியார், குமாரி, கே. ராமசாமி, டி. கே. கல்யாணம் ஆகப் பலர் நடித்து வருகின்றனர்.

இன்ஸ்பெக்டர்

ஜூபிடரின் "இன்ஸ்பெக்டர்" தீபாவளி வெளியீடு என்பது நிச்சயமாகி விட்டதாம். அதன் படப் பிடிப்போ இப்பொழுது மும்முரமாக சென்னை நெப்டியூனில் நடைபெற்று வருகிறது. படத்தை ஆர். எஸ். மணி. டைரெக்ட் செய்து வருகிறார். டி. கே. ஷண்முகம், டி. கே. பகவதி, எஸ். ஏ. நடராஜன், எஸ். பாலசந்திரன், அஞ்சலி தேவி பி. கே. சரஸ்வதி ஆகியோர் இதில் நடித்து வருகின்றனர்.

ஏழை உழவன்

ஜெமினியில் அதி ஜருராகத் தயாராகிறது ராஜராஜேஸ்வரியின் 'ஏழை உழவன்". நாகபூஷணத்தின் டைரெக்ஷனில் தமிழ்-தெலுங்கு இரு மொழிகளில் தயாராகி வரும் படம் இது. கண்ணாம்பா, அஞ்சலி தேவி, ராமமூர்த்தி, ஆகியோர் பிரதம பாகங்களில் நடித்து வருகின்றனர். சமீபத்தில் ஒரு ஜமீன்தார் சம்பந்தப்பட்ட காட்சி படமாகியது. ஜமீன்தாராக ஸி. வி. வி. பந்துலு நடிக்கிறார்.

ரோஹிணி

மகரூஸ் ஆர்ட் புரொடக்ஷன்ஸின் "ரோஹிணி" (தமிழ்-தெலுங்கு) படப்பிடிப்பு பாதிக்கு மேல் முடிவடைந்து விட்டதாம். பிரபல ஒளிப் பதிவாளர் கமால் கோஷ் படத்தை டைரெக்ட் செய்து வருகிறார். தமிழ்ப் படத்தின் வசனங்களை எஸ். டி. சுந்தரமும், தெலுங்கில் பலிஜபள்ளியும் எழுதியுள்ளனர். ஜி. ராமநாதனும், கே வி. மஹாதேவனும் சங்கீத டைரெக்ஷனை கவனித்து வருகின்றனர். எஸ். வி. ஸஹஸ்ரநாமம், எஸ். ஏ. நடராஜன், ரங்க ராவ், சே. ராமஸ்வாமி, லங்கா சத்யம். மாதுரிதேவி, ஜி. வரலக்ஷ்மி, முத்துலக்ஷ்மி, எம். எம். ராதாபாய் ஆகியோர் பிரதம பாகங்களில் நடித்து வருகின்றனர்.

நாகேந்திர ராவ்

(18-ம் பக்கத் தொடர்ச்சி)

எவனோ திருடன் அடித்துக் கொண்டு போய்விட்டதுதான்.

பிறகு, ராவ் பங்களூரில் படித்துவந்த போது, அடிக்கடி பள்ளி நாடகங்களில் நடித்து வந்தார். ஒரு சமயம், வெங்கோபராவின் "ஸிரஹட்டி டிரமாட்டிக் ட்ரூப்" என்ற நாடகக் கம்பெனி பம்பாயிலிருந்து பங்களூருக்கு வந்து தங்கியிருந்தது. அக்கம்பெனியின் நிர்வாகி ஒருவர் நாகேந்திர ராவ் நடித்த ஒரு (பள்ளி) நாடகத்தைப் பார்த்தார். ராவிடம் அபாரமான நடிப்புத் திறமைஇருப்பது கண்ட அந்த நிர்வாகி, அவரைத் தம் கம்பெனியில் சேரும்படியும், 15 ரூபாய் சம்பளம் தருவதாகவும் தூண்டினார். உடனே ராவ் படிப்பிலிருந்த அக்கரையை ஒழித்துவிட்டு பெற்றோர்களை நச்சரித்த அனுமதிபெற்று, அந்தக் கம்பெனியில் தம 14ம் வயதில் சேர்ந்தார்.

அந்தக் கம்பெனியில் ராவ் ஆறுமாத காலம் நடித்து வந்தார். ஆனால் ஒப்பந்தப்படி ஒரு பைசாக்கூட அவருக்குச் சம்பளம் கிடைக்கவில்லை. இந்த நிலைமையில் அவர் தம் தகப்பனாரின் சிரார்த்தத்திற்காக பங்களூருக்கு வந்து சேர்ந்தார். உண்மையை உணர்ந்த அவரது தாயார் அவரை மீண்டும் அந்த நாடகக் கம்பெனிக்கு அனுப்பாமல் நிறுத்திவிட்டார். ராவ் மீண்டும் பள்ளியில் சேர்க்கப் பட்டார். ஆனால், அவருடைய எண்ணமெல்லாம் நாடகத்திலேயே இருந்தது. உள்ளூரிலேயிருந்த லக்ஷ்மி விலாஸ நாடகக் கம்பெனி என்ற அமெச்சூர் சபாவில் சேர்ந்து நடிக்கலானார்.

இந்த சமயத்தில், காலஞ்சென்ற பிரபல கன்னட நடிகர் ஏ. வி. வரதாச்சாரியார் தம் கோஷ்டியுடன் பங்களூருக்கு வந்து நாடகங்களை நடத்தத் தொடங்கினார். வரதாச்சாரியார் பையன் நாகேந்திரனின் நடிப்புத் திறமையைக் கேள்விப்பட்டு, அவனை வரவழைத்துத் தம் கம்பெனியில் சேரும்படி கூறினார், ராவ் இதை ஒரு பெரும் பாக்கியமாய் கருதிச் சம்மதித்தான்.

ஆனால், அவன் நடித்துவந்த அமெச்சூர் கம்பெனியார் அவனை விட மறுத்தனர். அதோடு அவனை பயமுறுத்தவும் செய்தனர். முடிவில், 'வரதாச்சாரியின் கம்பெனியில்தான் சேரவேண்டும்' என்று தாயாரும் கூறிவிடவே, ராவ் அந்த அமெச்சூர் கம்பெனியிலிருந்து தந்திரமாய் வெளியேறி, வரதாச்சாரியின் கம்பெனியில் 12-12-(19)12ந் தேதியன்று சேர்ந்தார்.

அவர் சேர்ந்த மறுநாள் மைசூரில் அரச குடும்பத்தினரின் முன்னிலையில் வரதாச்சாரியார் பிரஹலாதா நாடகத்தை நடத்தினார். அந்த நாடகத்தில் ராவ் பூமாதேவியாகத் தோன்றி அழகாக நடனம் ஆடினார். இதை ரஸிகர்கள் பெரிதும் விரும்பியதால் அன்று

EMBROIDERY MACHINE

துணியில் பூ வேலை செய்ய லகுவானது. நங்கைகளுக்கு மிகவும் பிரயோசன முள்ளது. நான்கு விதமான வேலைகளுக்கு ஏற்ற நான்கு விதமான ஊசிகளுடனும், இலவச விவர புஸ்தகத்துடனும் ரூ. 5—0—0. தபால் செலவு ரூ. 1—0—0.

எம்பிராய்டரி டிஸைன் புஸ்தகம்

(திருத்திப் பதிப்பிக்கப்பட்ட பெரிய புஸ்தகம்)

விலை ரூ. 4—0—0. தபால் செலவு அணா 10.

இரண்டும் ரூ. 7—0—0. தபால் செலவு ரூ. 1—8—0.

கடிதத்தை ஆங்கிலத்தில் எழுதவும்.

KUMAR-BROS, ALIGARH-2 (U.P.)

ராவ் இதே நடனத்தை மூன்று முறை ஆடிக்காட்ட வேண்டியதாயிற்றும்.

வரதாச்சாரி கம்பெனியில் நாகேந்திர ராவ் சுமார் 14 வருஷ காலம் நடித்து வந்தார். கன்னடப் பிரதேசங்கள் தவிர கோவை, மதுரை, திருச்சி, கும்பகோணம் போன்ற தமிழ் நகரங்களிலும் இந்தக் கம்பெனி நாடகங்களை நடத்தி அமோகமான புகழைப் பெற்றது. திருச்சியில் நடித்து வந்தபோது நாகேந்திரராவின் நடிப்பைப் பாராட்டி அனிபெஸன்ட் அம்மையார் அவருக்கு ஒரு தங்கச் சங்கிலியைப் பரிசளித்தது குறிப்பிடத் தக்கது!

1938-ம் வருஷத்தில் நாகேந்திர ராவ் மீசைக்குப் பதில் தலைப்பாகையுடன் காட்சி அளித்து வந்தார்.

வரதாச்சாரியின் கம்பெனியில் ராவ் பெற்ற அநுபவம் அளவிடத் தக்கதே அல்ல. வரதாச்சாரியை மிகுந்த பக்தி விசுவாஸத்துடன் குருவாய் மதித்து, அவரைப் போலவே நன்கு நடிக்கப் பழகிவந்தார் ராவ். இன்று தாம் ஒரு சிறந்த நடிகராக விளங்குவது இந்த அநுபவத்தின் விளைவாகத்தான் என்று ராவ் கூறுகிறார்.

மேற்படி கம்பெனியில் இருந்தபோது ராவ் தம் நடிப்புத் திறமையை மட்டுமன்றி, சங்கீதத் திறமையையும் கல்வி ஞானத்தையும் கூட வெகுவாக விருத்தி செய்து கொண்டார். மைசூர் பி. எஸ். ராஜா ஐயங்காரின் குருவாய் இருந்த சாமராவ் அவர்களிடம் முதன் முதலில் அவர் சங்கீத சிக்ஷை பெற்றார். அதன் பிறகு மைசூர் ஆஸ்தான வித்வான் சிக்கராம ராவிடம் சில காலமும் பிறகு, மைசூர் ஆஸ்தான வித்வான் கே. வாஸுதேவாச்சாரியாரிடம் சில காலமும் விசேஷப் பயிற்சிகளைப் பெற்றிருக்கிறார். நாடகங்களில் அவர் அடிக்கடி நாரதர் வேஷத்தில் தோன்றி, தம் நடிப்போடுகூட, கானமழை பொழிந்து, ரஸிகர்களை ஆனந்த வெள்ளத்தில் மூழ்கச் செய்து வந்தார்.

1921ம் வருஷத்தில் சென்னையில் மைசூரிலிருந்து வந்திருந்த "சாமராஜேந்திர கர்னாடக நாடக சபா" என்ற கம்பெனியார் நாடகங்களை நடத்தி வந்தனர். அக் கம்பெனியில், காலஞ் சென்ற மைசூர் பி எஸ். ராஜப்பாவும், சுப்பண்ணுவும் பிரதம நடிகர்களாக விளங்கி வந்தனர். அக் கம்பெனிக்கு உதவும் எண்ணத்துடன் வரதாச்சாரியார் நாகேந்திரராவை சென்னைக்கு அனுப்பி வைத்தார். சிறிது காலம் ராவ் நடித்து விட்டு மீண்டும் வரதாச்சாரி கம்பெனிக்கே திரும்பி வந்தார்.

இதன் பிறகு வரதாச்சாரியின் கம்பெனியும் 1924ல் சென்னைக்கு வந்தது. அவர்களது "விஷ்ணு லீலா" நாடகம் பிரமாதமான ஆதரவைப் பெற்றது. அந்த நாடகத்தைப் பின்பற்றித் தான் பிரபல கன்னையா தம் "தசாவதார"த்தைத் தயாரித்தார் என்று தெரிகிறது.

வரதாச்சாரியார் 1925ம் வருஷம் காலமானார். ஆச்சாரியாரின் பெயர் நிலைத்து நிற்க வேண்டும் என்பதற்காக ராவ் கம்பெனியின் நிர்வாகத்தை ஏற்று இரண்டு வருஷ காலம் நடத்தினார். பிறகு 1927ம் ஆண்டில் ராஜப்பாவும், சுப்பண்ணுவும் நடத்தி விட்டு மூடியிருந்த சாமுண்டீஸ்வரி நாடகக் கம்பெனிக்கு ராவ் புத்துயிரளித்து நிர்வாகத்தை ஏற்றுக் கொண்டார். சில நாடகங்களை அவரே தயாரித்து நடத்தி, நல்ல வெற்றி கண்டார். இக் கம்பெனியாரின் "ராஜசூய யாகம்" நாடகம் சென்னையில் சிறந்த ஆதரவைப் பெற்றது. அதில் ராவ் ஆடிய நடனத்தை ரஸிகர்கள் மிகமிகப் பாராட்டினார்கள்.

இக்கம்பெனி உச்ச நிலையை அடைந்த சமயத்தில் ராஜப்பாவும் சுப்பண்ணாவும் அடுத்தடுத்த வருஷங்களில் காலமானார்கள். அதே சமயத்தில் (1930ல்), அவருக்கும் கம்பெனி டைரெக்டர்களுக்கும் மனஸ்தாபம் ஏற்படவே கம்பெனியிலிருந்து ராவ் விலகி விட்டார்.

மேற்படி கம்பெனிக்கு முழுக்குப் போட்ட போதே ராவ் பெண் வேஷத்திற்கும் முழுக்குப் போட்டு விட்டார். அதற்கென்று அவர் அருமையாய் வளர்த்து வந்த குடுமிக்கும் சீட்டுக் கிழிந்தது. அந்த சமயத்தில் தான் இந்தியாவில் பேசும் படங்களை முதன் முதலாகத் தயாரிக்கத் தொடங்கி யிருந்தனர். "பேசும் படங்கள் வந்தால் நாடகங்கள் படுத்து விடும்" என்ற எண்ணம் ராவின் மனதில் திடீரென உதயமாயிற்று. "நாம் ஏன் சினிமாவில் நடிக்கக் கூடாது!" என்ற கேள்வியும் கூடவே எழுந்தது. மறு நாளே அவர் பம்பாய்க்குப் பிரயாணம் ஆகிவிட்டார்.

அங்கு மௌனப் பட நடிகராகவும், டைரெக்டராகவும் விளங்கி வந்த ராஜா சாண்டோவை நாகேந்திர ராவ் சந்தித்தார். ராஜா அப்பொழுது இம்பீரியலின் "பாரிஜாத புஷ்பஹாரணம்" தமிழ்ப் படத்தை டைரெக்ட் செய்து கொண்டிருந்தார். அவர் அப்படத்தில் நாரதர் வேஷத்தை ராவுக்கு அளித்து நடிக்கச் செய்தார். சுமார் இருபதினாயிரம் செலவில் தயாரிக்கப்பட்ட இப்படம் அதன் விநியோகஸ்தர்களுக்கு சுமார் 3 லக்ஷம் ரூபாய் லாபத்தை அளித்தது.

அடுத்த படியாக, ராஜா சாண்டோ "கோவலன்" படத்தை டைரெக்ட் செய்தார். அதில் ராவ்தான் கோவலனாக நடித்திருக்கிறார். மூன்றாவதாக, ராஜா தயாரித்த படம் தெலுங்கு "ராமதாஸ்" ஆகும். அதில் ராஜா நவாப்பாகவும், ராவ் ராமதாஸாகவும் நடித்துள்ளனர்.

மளமளவென்று ராவுக்கு மூன்று படங்களில் நடிக்கும் பாக்கியம் கிடைத்ததென்றாலும், அப்படங்கள் நல்ல வெற்றி பெற்றன வென்றாலும், அவருக்கு ஊதியம் மட்டும் சொற்பமே கிடைத்தது. அதனால் அதிருப்தியுடன் படங்களில் நடிப்பதை நிறுத்திவிட்டு அவர் பங்களூருக்குத் திரும்பினார்.

அந்த சமயத்தில்தான் குப்பி கம்பெனியிலிருந்து விலகிய சுப்பய்யா நாயுடு "எஸ். எஸ், எஸ். நாடக மண்டலி" என்ற கம்பெனியை ஆரம்பித்திருந்தார். நாயுடுவின் அழைப்பிற்கிணங்க ராவ் இக் கம்பெனியின் நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டார். 1938ம் வருஷத்தில் இந்தக் கம்பெனி சென்னையை அடைந்தது. அவர்கள் நடித்த 'பூ கைலாஸ்' தமிழ் நாடகம் சென்னை ரஸிகர்களின் மனதை மிகக் கவர்ந்துவிட்டது. இந்த நாடகமும், அதன் வசனங்களும், மின்சார ஒளிவீச்சு ஏற்பாடுகளும் ராவின் வேலைகளாகும். இந்த நாடகத்தில் நாரதராகத் தோன்றிய அவர் ஒரு திறமை மிக்க நடிகர் என்பதை சென்னை வாசிகள் நன்குணர்ந்து பாராட்டினர்.

சென்னைக்கு வந்த முதல் வருஷத்தில் இக் கம்பெனிக்கு அதிகமான நஷ்டம் ஏற்பட்டது. இதை ஈடு செய்வதற்காக சுப்பய்யா நாயுடுவும், நகேந்திர ராவும் நாடகம் நடத்தியபடியே முதல் கன்னடப் படமான "சதி சுலோசனா"வில் நடித்தனர் ராவ் அப்படத்தில் ராவணனாக நடித்திருக்கிறார்.

இந்த சமயத்தில் நவாப் ராஜமாணிக்கம் கம்பெனி சென்னையில் நாடகங்களை நடத்தி வந்ததால், "பூ கைலாஸ்" நாடகத்திற்கு வசூல் குறையத் தொடங்கியது. அதனால் ராவ் "ராஷ்டிர வீரன்" என்ற நாடகத்தை எழுதித் தயாரித்து அரங்கேற்றினார். இந்த நாடகத்திற்கு பொதுஜன ஆதரவு ஏற்படத் தொடங்கியதைக் கண்ட வேல் பிக்சர்ஸ் மானேஜிங் டைரெக்டராயிருந்த காலஞ்சென்ற எம். டி. ராஜன் இந்த நாடகத்தை படமாகத் தயாரிக்க முன் வந்தார். ஆனால் ஒப்பந்தமெல்லாம் ஆன பிறகு, இக்கதையிலுள்ள ஹிந்து–முஸ்லிம் தகராறுகள் படத்தில் காட்ட அனுமதிக்கப்பட மாட்டாதோ என்ற பயத்தில் இக்கதை கைவிடப் பட்டது. இதற்குப் பதில் "அம்பரீஷ்" கதை படமாகத் தயாரிக்கப்பட்டது.

இவர்களது "பூ கைலாஸ்" நாடகம் மிகப் போற்றத்தக்க முறையில் இருந்ததால், அதைத் தெலுங்குப் படமாகத் தயாரிக்க ஸரஸ்வதி ஸினி லெபரட்டரியினர் முன்வந்தனர். ராவ் நாரதராக நடித்திருக்கும் இந்தப் படம் ஏராளமான வசூலைப் பெற்றது. பிறகு இந்த நாடக கோஷ்டியினர் பிரகதியின் கூட்

ரவுடன் "வஸந்தசேனு" கன்னடப் படத்தை தயாரித்தனர். அதில் ராவ் கொடிய அசுரனுகத்தோன்றியிருக்கிருர்,

"வஸந்தசேனு"விற்குப் பிறகு இக் கோஷ்டியினர், பிரகதி கூட்டுறவில் "ஹரிச்சந்திரா" கன்னடப் படத்தைத் தயாரித்தனர். அப்படத்தின் டைரெக்ஷன் பெருமை உண்மையில் நாகேந்திர ராவைச் சேரவேண்டியதாம். நன்கு அமைந்துபோன இப்படம் நல்ல வசூலைப் பெறவே, அதில் தமிழ் வசனங்களை ஒட்டி தமிழ்ப் படமாகவும் வெளியிட்டனர். இப்படமும் நிறையக் காசை வாரிக் கொடுத்தது. தமிழில் 'டப்' செய்யப்பட்ட முதல் படம் இதுதான் என்பது குறிப்பிடத் தக்கது. இப்படத்தில் விஸ்வாமித்திரராய் நடித்துள்ள நாகேந்திர ராவின் நடிப்பை நாம் மறக்கவே முடியாது.

"ஹரிச்சந்திரா"வின் வெற்றியானது நாகேந்திர ராவுக்கு "சபீர்" கன்னடப் படத்தைத் தன்னந் தனியாய் டைரக்ட் செய்யும் பாக்கியத்தை அளித்தது.

"சபீர்" வெளியான பின் ராவ் சுப்பய்யா நாயடு கோஷ்டியிலிருந்துபிரிந்து, சொந்தத்தில் ஒரு கன்னடப் படத்தைத் தயாரிப்பதற்காக 'ஜெமினி' வாஸனின் உதவியை நாடினுர். சென்ற இடத்தில் அவரை வாஸன் "நிஷான்" "அபூர்வ சகோதரர்கள்", "விசித்ர சோதரலு" ஆகிய மூன்று (பாஷைப்) படங்களில் நடிக்கச் செய்து, அவரது நடிப்பை அகில இந்தியப் புகழ் பெறுமாறு செய்துவிட்டார். அந்த பார்த்தாண்டன் வேஷத்திற் கெனவே பிறந்தவர் போல் ராவ் தம் பாகத்தை அபாரமாய் நடித்து, ஒரு சிறந்த குணசித்ர நடிகராய் விளங்குகிருர்.

சமீபத்தில் வெளியிடப்பட்டிருக்கும் "மூன்று பிள்ளைகள்"—டைரெக்ஷன், நடிப்பு ஆகிய இரண்டிலும் நாகேந்திர ரர்வுக்கு ஒரு மகத்தான வெற்றி என்று கூறவேண்டும்.

தற்போது 56 வயது நிரம்பப் பெற்ற நாகேந்திர ராவ் ஒரு வாலிபரிடம் காணப்படும் சுறுசுறுப்புடன் காணப்படுகிருர். சுமார் ஆறடி உயரமும், கனத்த சரீரமும், கம்பீரமான தோற்றமும், சிவந்த மேனியும் உடையவரான ராவ் நண்பர்களிடம் மிக மிக அன்புடன் பழகும் குணம் உடையவர்.

ராவ் தம் தமக்கை கிருஷ்ணுபாயின் புத்திரியையே மணந்து கொண்டு, தற்போது நான்கு புத்திரர்களுக்கு தந்தையாக விளங்குகிருர். ராவின் மூத்த புதல்வர் 30 வயதான குருராஜ பிரஸாத் பர்மா ஷெல் கம்பெனியில் வேலையிலிருக்கிருர். 23 வயதுடைய இரண்டாவது புத்திரர் கிருஷ்ண பிரஸாத் ஸினிமோட்டாகிராபியை டயின்று வருகிருர். இருபது வயதான ஜெயப்ரகாஷ் ஒலிப்பதிவு விஷயங்களைப் பயின்று வருகிருர். இம் மூவரும் பி. எஸ்ஸி. தேறியவர்கள். கடைசிப் பிள்ளைக்கு வயது பதினைந்து; இப்பொழுது எஸ். எஸ். எல். ஸி. வகுப்பில் படித்து வருகிருன்.

நல்ல கதையை தாமே எழுதி, நடித்து, டைரெக்ட் செய்து, சிறந்த படங்களாக வெளியிட வேண்டும் என்பதே ராவின் நோக்கமாம். முக்கியமாக, கன்னட பாஷையில் சில நல்ல படங்களை சீக்கிரமே தயாரித்து வெளியிட வேண்டும் என்பது அவரது அவாவாம். சலியாத முயற்சியும், பிடிவாத குணமும் உடைய அவரது அவா சீக்கிரமே பூர்த்தியாகி விடும் என்று நாம் எதிர்பார்க்கலாம்.

ரூ.3-க்கு ஒரு கைக்கடிகாரம்!

ரூ. 3-க்கு ஒரு கைக்கடிகாரம் அடையலாம். அழகிற்கும், உழைப்பிற்கும் 10 வருஷம் உத்திரவாதம். தபால் செலவு தனி.

SWISS WATCH TRADING CO., (G.M.)
JULLUNDUR CITY E.P.

ஏஜண்டுகள் தேவை

மாதம் ரூ. 300 முதல் 500 வரை சம்பளத்திலோ அல்லது கமிஷன் பெற்றுக் கொண்டோ எங்கள் புது மாடல் பேனக்கள் விற்பனைக்கு ஏஜெண்டுகள் தேவை. சாம்பிளுக்கும் விபரத்திற்கும் விண்ணபிக்கவும்.

LONDON CORPORATION (G.M)
JULLUNDUR CITY. E.P.

நடனம் ஆடினர்

சென்ற மாதம் 13ம் தேதி சிறுமி ஆர். ஸ்நேகலதாவின் பரத நாட்டிய அரங்கேற்றம் நடைபெற்றது. சென்னை, செயின்ட் மேரிஸ் ஹாலில் நடைபெற்ற இந்த அரங்கேற்றத்திற்கு நீதிபதி கனம் கே. சுப்பராவ் தலைமை வகித்து ஆசி கூறினர். அன்று அநேக பத்திரிகாசிரியர்களும், வைசிய குலத்துப் பிரபல பிரமுகர்கள் பலரும் வந்திருந்தார்கள். பிரபல வர்த்தகரும், மாஜி உதவி மேயருமான ஸி. சுப்ரமண்யம் செட்டியாரது பேத்தியும், ஜெனரல் ஆஸ்பத்திரி ஸர்ஜன் டாக்டர் ரங்கனுதனது புத்திரியுமான இந்த ஸ்நேகலதா பி. ஜி. செல்லப்ப நட்டுவனுரின் சிஷ்யை ஆவர். அன்று முற்பகுதியில் பரத நாட்டிய உருப்படிகளையும், பிற்பகுதியில் ஓரியண்டல் நடனங்களையும் ஆடினுர். அன்றைய அவருடைய ஆட்டத்தில் சிறுமிக்கு தைரியமும், ஊக்கமும், திறமையும் இருப்பது நன்ருகி வெளிப்பட்டன. தாளம் அதிகமாகப் பிசகாமல், உடம்பு

ஸ்நேகலதா

வளைந்து நன்ருக ஆடினுர். முகத்திலே நல்ல பாவம் இருக்கிறது. 'வெண்ணிலவு' நடனம் நூதனமாகவும், நன்ருகவும் இருந்தது. பின்னணியில் பாடிய லக்ஷ்மி ராணியின் பாட்டுகள் விசேஷமாக இருந்தன. ஆசிரியருக்கும், பக்க வாத்தியக்காரர்களுக்கும் விசேஷ பரிசுகள் அளிக்கப் பட்டன.

ரஸிக ரஞ்சனி சபா ஹாலில் ஜுலை மாதம் 6ம் தேதியன்று குமாரி கமலாவின் நடனக் கச்சேரி நடை.யெற்றது: "அலாரிப்பு", "வர்ணம்" "ஜதிஸ்வரம்" முதலிய அம்சங்கள் வழக்கம் போலவே நன்ருக அமைந்திருந்தன. "சக்தி ஆனந்த நடனம் ஆடினுர்" என்ற பாட்டும் அன்றைய நிகழ்ச்சியில் இடம் பெற்றிருந்தது. வழக்கமாக, நடனக் கச்சேரிகளில் ஆடப் பெறும் "நடனம் ஆடினுர்" என்ற பாட்டிற்குப் பதில் இதை எடுத்துக் கொண்டது குறிப்பிடத் தக்கது.

சென்ற மாதம் 6ம் தேதி, கோயில் பட்டி, ஸ்ரீ கனகலக்ஷ்மி டாக்கீஸில் குமாரி ஆர் இந்திராவின் பரத நாட்டியக் கச்சேரி நடைபெற்றது. சென்னை ராஜ்ய ராயலஸீமா பஞ்ச நிவாரண நிதிக்காக நடைபெற்றது. அன்றையக் கச்சேரி அன்றையக் கச்சேரியில் ஆடப்பட்ட எல்லா அயிட்டங்களுமே சிறப்பாக இருந்தனவாம்.

சிறுமி கிருஷ்ணகுமாரி சமீபத்தில் சென்னை மேலகையில் அரங்கேறி அழகாக ஆடினுள்.

'மூன்று பிள்ளைகளி'ல் திருட்டுப் பிரசாரம்!

நாகேந்திர ராவின் சிறந்த டைரெக்ஷன்; கண்ணாம்பாவின் உருக்கமான நடிப்பு

கடலை எண்ணெயில் தயாரித்த பக்ஷணம் பார்ப்பதற்கும், (சூடாய் இருக்கும்போது) சாப்பிடுவதற்கும் நன்றாய்த் தானிருக்கும். ஆனால், சாப்பிட்டு ஒரு மணி நேரம் ஆனபின் தான் அது மெதுவாகத் தன் வேலையைத் தொடங்கும்!

ஜெமினியின் "மூன்று பிள்ளைகள்" இந்தக் கடலை எண்ணெய் பக்ஷணம் மாதிரித் தான் இருக்கிறது. படத்தைப் பார்க்கும் போது பல இடங்களில் கண்ணீர் விடாத பெண்களே—ஏன் ஆண்கள் கூட!—இருக்க முடியாது. படித்தவர்கள் கூட பரவசமடையக் கூடிய ஹாஸ்யம், காதல், கதை சுவாரஸ்யம், இனிய கர்நாடக சங்கீதம், அருமையான பரத நாட்டியம், நல்ல டெக்னிக், டைரெக்ஷன், மற்றும் ஒரு நல்ல படத்திற்கான சகல அம்சங்களும் "மூன்று பிள்ளைகளி'ல் பொருந்தியிருக்கின்றன. ஆனால், இவ்வளவு சிறந்த அம்சங்களும்

மூன்று பிள்ளைகள்

தயாரிப்பு ... ஜெமினி

டைரெக்ஷன்	... நாகேந்திர ராவ்
கதை, வசனம்	.. ஜெமினி கதை இலாகா
பாட்டுகள்	... சுப்பு, வீ. சீதாராமன்
சங்கீதம்	... பி. எஸ். அனந்தராமன்
ஒளிப்பதிவு	... எம். நடராஜன்
ஒலிப்பதிவு	... சியாம் சுந்தர்

நடிகர்கள் :

நாகேந்திர ராவ், கண்ணாம்பா, எம். கே. ராதா, கணேசன், ஸ்ரீராம், வனஜா, சுந்தரிபாய், சூரியபிரபா, நாராயண ராவ், சம்பத் குமார், சேது, சந்திர பாபு, விகடம் கிருஷ்ணமூர்த்தி, பட்டு ஐயர், சீதாராமன் முதலியோர்.

வெளியான தேதி: 11—7—1952

கூடிய இந்த நல்ல படம் வெறுக்கத் தக்க—பிரசாரம் செய்வதற்கு லாயக்கற்ற—கேவலமான ஒரு கருத்தை அஸ்திவாரமாய்க் கொண்டிருக்கிறது.

சோம சேகர் என்பவன் ஒரு பெரிய வியாபாரியிடம் மானேஜராய் நல்ல நிலைமையில் இருந்து வருகிறான். முதலாளியின் இஷ்டத்திற்கிணங்க அவன் பொய்க் கணக்கு எழுத விரும்பாததால் வேலையை ராஜிநாமாச் செய்கிறான். அதன் பின் அவனுக்கு எங்கும் வேலை கிடைக்கவேயில்லை. குடும்பம் தரித்திர நிலையை அடைந்து தவிக்கிறது. வீடும் ஏலத்திற்கு வந்து விடுகிறது. இந்த நிலைமையை சமாளிப்பதற்காக சோம சேகர் ஒரு திருடனாக மாறுகிறான்!

குடும்பம் அபாயம் நீங்கி செழித்தோங்குகிறது—சோம சேகரின் திருட்டுத் தொழில் மூலம் தான்! ஒரு முறை அவருடைய மூத்த பையனுக்குப் பண உதவி செய்வதற்காக சோம சேகர் டாங்கர் ராமதாஸின் வீட்டில் திருடுகிறான். அங்கு அவனுடைய மூன்றாவது பிள்ளை கண்ணனாலேயே பிடிபடுகிறான். தகப்பனைக் காட்டிக் கொடுக்காமல் கண்ணன் தானே திருடன் என்று ஒப்புக் கொண்டு ஜெயிலுக்குப் போகிறான். கண்ணன் ஜெயிலுக்குப் போன பிறகு சோம சேகருக்கு மனமாற்றம் ஏற்படுகிறது. 'தானே திருடன்' என்பதை அதிகாரிகளுக்கு எழுதிப் போட்டுவிட்டு, தற்கொலை செய்து கொள்ளுகிறான்.

விடுதலையடைந்த கண்ணன் சென்னை சென்று ஒரு சினிமா நடிகனாகிறான். அவன் தாயாருக்காக அனுப்பும் பணத்தையெல்லாம் "ஏப்பம்" விட்டுவிட்டு தாயாரைத் தனியாகத் தவிக்க வைக்கிறான் மூத்த பிள்ளை முத்து. கஷ்டம் சகியாத தாயார் பம்பாயிலுள்ள தன் இரண்டாவது பிள்ளையையும் பெண்ணையும் தேடிச் செல்கிறாள். அங்கும் அவள் அவமானம் அடையவே அவள் ஊர் திரும்பி, ஒரு கோயிலில் பணிவிடை செய்து வாழ்ந்து வருகிறாள்.

காதலி கமலா மூலம் உண்மை யுணர்ந்த கண்ணன் ஊர் திரும்புகிருன். பிறகு மூத்த சகோதரர்களும் அவர்களது மனைவியரும் தம் தம் துர்க்குணங்களை விட்டு தாயாருடன் ஒற்றுமையாய் வாழ்கின்றனர். கண்ணன் கமலாவை மணக்கிருன்.

எவ்வளவோ கஷ்டங்கள் ஏற்பட்ட போதிலும் சத்திய நெறி தவருமல் நடந்து மேன்மையுற்ற ஹரிச்சந்திரனின் கதை சிரஞ்சீவித்துவம் பெற்றுள்ள நம் நாட்டில் இது போன்ற "திருட்டு மஹான்களி"ன் கதைகள் தோன்ற ஆரம்பித்திருப்பது மஹா துரதிருஷ்டந்தான். முதலாவதாக, படிப்பறிவுள்ள ஒருவன்—நல்ல நிலையிலிருந்த ஒருவன் திடீரென திருடனுக மாறக் கூடும் என்பதே நம்பக் கூடியதாயில்லை. பிறகு அவன் அத்தொழில் மூலமே வாழ்ந்து வந்தான் என்பது அதைவிட நம்ப முடியாமலிருக்கிறது. நம்ப முடியாத இந்த துரதிருஷ்ட சம்பவம் நிஜமாகவே நடந்திருந்தால் கூட, அதைப் படங்கள் மூலமாகப் பிரசாரம் செய்வது பெருந்தவறு.

"தாங்க முடியாத கஷ்டத்திற்குள்ளாகும் ஒருவன் திருட்டுத் தொழில் மூலம் விமோசனம் அடையலாம். போலீஸாரிடம் அகப்பட்டுக் கொள்ளாமலே கூட காலம் தள்ளிவிட முடியும்' என்ற நீதி'யையே விளக்குவதாக இருக்கிறது படத்தின் கருத்து. 'கடைசியில் சோம சேகரை தண்டனை தேடி வரும் போது, தற்கொலை செய்து கொள்ளுகிருனே?' என்று கேட்கப் படலாம். ஆனல் அது மகன் காரணமாக, அவன் தானுகவே ஏற்படுத்திக் கொண்டது தானே! இது போன்ற அபாயகரமான உபதேசங்களை படங்கள் மூலம் பிரசாரம் செய்வது திருட்டுத் தொழில் வளர்ச்சிக்கே மிக உதவியாயிருக்கும்.

இந்தக் கதையை ஜெமினி, "இரண்டு" பிள்ளைகளா"கவே தயாரித்திருக்கலாம். மூன்ருவது பிள்ளை, பெண் இவர்களின் பாகங்கள் படத்தில் சரியானபடி சித்தரிக்கப் படவில்லை. இவர்களின் பாகங்கள் படத்தினின்றும் வெட்டப் பட்டு விட்டால் கூட கதை பூரணமாகவே இருக்கும்.

இப்படத்தை நடிகர் நாகேந்திரராவ் நன்கு டைரெக்ட் செய்திருக்கிருர். நுட்பமான விஷயங்களில் கூட கவனம் செலுத்தியிருக்கிருர். உதாரணமாக திருடனுக வாழும் சோம சேகருக்கு போலீஸ் பெயரைக் கேட்ட மாத்திரத்திலேயே நடுக்கம் என்பதை விளக்குவதற்காக இரும் கேட்கும் போலீஸ்காரர்களைக் காட்டியிருக்கிருர். உபாத்தியாயரின் அல்ப ஆசைகளைக் காட்டுவதற்கு அவர் கல்யாண வீட்டில் அசடு வழியும் முகத்துடன் 'விம்டோ" கேட்பதாகக் காட்டியிருக்கிருர்.

ஆனல் சிற்சில இடங்களில் தொடர்ச்சியைப் பாதிக்கக் கூடியதான தவறுகள் சிலவற்றை அவர் விட்டு வைத்திருக்கிருர். பப்பாய்க்குப் பணமில்லாமல் பசலிலும் தாயார் எப்படித் திரும்பி வருகிருள்! அவளுக்கு டிக்கெட் வாங்க பணம் ஏது! அவள் வரப் போகிருள் என்று யார் அவளது வீட்டைத் திறந்து வைத்தது? இது மாதிரி சில தவறுகள் படத்தில் அங்குமிங்கும் ஒளிந்து கொண்டிருக்கின்றன. இருந்த போதிலும் பொதுவாகச் சொல்வதானல், டைரெக்ஷன் விஷயத்தில் நாகேந்திர ராவுக்கு இப்படம் சிறந்த வெற்றி என்றே கூறவேண்டும்.

படத்தின் வேகம் துரித நடையிலிருக்கிறது. பாட்டுகள் பொருத்தமான இடங்களில் புகுத்தப் பட்டிருக்கின்றன.

நடிப்பில் கண்ணாம்பாவுக்கே முதல் ஸ்தானம் அளிக்க வேண்டும். 'தம் பாகத்தை உணர்ந்து நடித்திருக்கிருர்' என்று சொல்லுவதைவிட 'கதா பாத்திரமாகவே மாறியிருக்கிருர்' என்று சொல்லுவதே பொருத்தமாகும். அவர் தம் கண்ணில் நீரை வரவழைத்துக் கொள்ளும் போதெல்லாம் நாமும் கண்ணைத் துடைத்துக் கொள்ள வேண்டியதாய் இருக்கிறது.

அடுத்த படியாக, நாகேந்திர ராவின் நடிப்பு பிரமாதமாய் இருக்கிறது. இவர் 'அவலை நினைத்துக் கொண்டு உரலை இடிப்பது போல' குழந்தைகளைக் கண்டிக்கும் போதும், தனக்குப் பதில் தன் பிள்ளை ஜெயிலுக்குப் போயுள்ளதற்காக வருந்தும் போதும் அவரது நடிப்பு உச்ச நிலையை அடைகிறது.

மூன்று பிள்ளைகளுள் ஸ்ரீராமின் நடிப்பே நன்ருயிருக்கிறது. எம். கே. ராதாவின் நடிப்பு சுமார்தான். கணேசன் ஏற்றுக் கொண்டுள்ள பாத்திரம் சரிவர

சித்தரிக்கப் படாததோடு, அவரது நடிப்பும் நன்றாயில்லை. ஏராளமான பணச் சம்பாத்தியத்துடன் வாழும் சேகரை ஒரு பட்லர் மாதிரி காட்டியிருப்பது அசம்பாவிதமாகும்.

மூன்று மனைவிகளுள் சுந்தரிபாயின் நடிப்பு தான் பரவாயில்லை ஆனால் நடிப்பில் புதுமையைக் காண முடியவில்லை. சூர்ய பிரபாவின் நடிப்பு சுகமில்லை. முகத்திலோ பாவம் பூஜ்யமாய் இருக்கிறது. வனஜாவும் சர்வ சாதாரணமாகவே நடித்திருக்கிறார். சுசீலாவாக நடிக்கும் சரஸ்வதியும், சுரேஷாக நடிக்கும் சம்பத் குமாரும் நடிப்பதற்கு முயன்றிருக்கின்றனர். பட்டு ஐயரின் நடிப்பு பொருத்தமாயிருக்கிறது.

பள்ளிக்கூடக் காட்சியில் சேது, சுதாகர், சுசீந்திரா, பிரேம் குமாரி ஆகியவர்களின் நடிப்பு நன்கு அமைந்திருக்கிறது. வாத்தியாராக வரும் 'பிரண்ட்' ராமசாமியின் நடிப்பு பிரமாதம்.

பட முதலாளியாக வரும் எல். நாராயண ராவும், உதவியாளன் சீதாராமன், பம்பாய் சங்கீத டைரெக்டர் சந்திரபாபு, பட வியாபாரி விகடம் கிருஷ்ணமூர்த்தி, இரும்பு வியாபாரி வேலாயுதம் இவர்கள் ஹாஸ்ய பாகத்தை பூர்த்தி செய்கின்றனர். நாராயண ராவின் நடிப்பு சிறந்த ஹாஸ்ய விருந்தாயிருக்கிறது

படத்தில் ஹாஸ்யம் கதைப் போக்கிலேயே அமைந்திருப்பது ஒரு விசேஷமாகும். இது படித்தவர்களும் பாமரர்களும் சேர்ந்து ரஸிக்கத்தக்க முறையில் அமைந்திருக்கிறது. முத்துவின் மோட்டார் பழைய இரும்புச் சாமான் வாங்குபவனிடம் போடுவதற்கே லாயக்கானது என்று குறிப்புகள் மூலம் முதலில் காட்டும் போது 'குபீர்' என்று சிரித்து விடுகிறோம். ஆனால், அடுத்தாற் போல் இரும்பு வியாபாரி மோட்டாரை ஆட்டிப் பார்ப்பதாக (இந்த ஹாஸ்யத்தை) மறுபடியும் காட்டுவது செத்த பாம்பை அடிப்பது போல இருக்கிறது.

நடிகர் தேர்தல் ஹாஸ்யம் அபத்தமாகக் கருதப்படும் அளவுக்கு வளர்க்கப் பட்டிருக்கிறது. மட்டக் கோலை எடுத்துக் கொண்டு திண்ணையில் படுத்திருப்பவர்களையும், தெருவில் போவோரையும் அளந்து பார்ப்பது பதினைந்து வருஷத்திற்கு முந்திய தமிழ்ப்பட காமிக்கை ஞாபகமூட்டுகிறது.

ஒளிப் பதிவு, ஒலிப் பதிவு, எடிட்டிங் போன்ற படத் தயாரிப்பு வேலைகளெல்லாம் ஜெமினிக்குரிய சிறந்த முறையில் செய்யப் பட்டுள்ளன. படத்தில் ஆபாஸமான காட்சிகள் சேர்க்கப் படாமல் இருப்பதும், சங்கீதத்தை கர்னாடக மெட்டுகளில் அமைத்திருப்பதும், பரத நாட்டியத்திற்கு முக்கியத்துவம் அளித்திருப்பதும் மிகத் திருப்தியை அளிக்கிறது. ஆரம்பத்தில் கூறியபடி, கதையின் கருத்து மட்டும் ஆட்சேபகரமானதாய் இல்லாதிருந்தால் "மூன்று பிள்ளைகள்" ஒரு உன்னத சமூகப் படம் என்று கூறியிருக்க முடியும்.

—பி. ஆர். எஸ்.

அலாரம் பிஸ்டல்

உண்மைத் தோற்றமும், பலனும் உள்ளது. சுடும்போது, நெருப்பும் புகையும் வரும். ஆபத்துக்குதவி. திருடர்கள், கொடிய விலங்குகளை பயமுறுத்தக் கூடியது. நாடகம், சினிமாவுக்கு லாயக்கானது. லைசென்ஸ் தேவை இல்லை. விலை ரூ. 8—0—0. தபால் சார்ஜ் ரூ. 1—8—0. தோல் கேஸ் ரூ. 5—0—0. தபால் சார்ஜ் ரூ. 1—0—0. இரண்டும் சேர்த்து வாங்குவோருக்கு தபால் சார்ஜ் இனாம்.

கடிதத்தை ஆங்கிலத்தில் எழுதவும்.

KUMAR-BROS., ALIGARH-2 (U.P.)

குண்டூசி டைரி

ஜூன், 1952

1. சென்னையில் "கலாபிமானிகள் சழகம்" என்ற ஒரு கழகம் ஆரம்பமாயிற்று.

   பி. எம். பி. நாடக சபாவினர் "கைதியின் காதல்" நாடகத்தை நடித்தனர்.

6. வள்ளி புரொடக்ஷன்ஸ் "வேலைக்காரன்" தமிழ் நாட்டில் திரையிடப்பட்டது.

10. சிறந்த சினிமாப் படத்திற்கு சர்க்கார் அளித்து வந்த பரிசு திட்டத்தை சென்னை சர்க்கார் ரத்து செய்யத் தீர்மானித்தனர்.

11. பக்ஷி ராஜாவின் "காஞ்சனா" தெலுங்குப் படத்தின் பத்திரிகைக் காட்சி நடைபெற்றது.

14. பரணியின் "காதல்" தமிழ்ப் படத்தின் பத்திரிகைக் காட்சி நடைபெற்றது; அன்றே தமிழ் நாட்டிலும், சென்னை நகரிலும் படம் திரையிடப்பட்டது.

    வள்ளி புரொடக்ஷன்ஸின் 'வேலைக்காரன்" சென்னை நகரில் திரையிடப்பட்டது.

15. பட முதலாளிகள், விநியோகஸ்தர்கள் மகாநாடு சென்னையில் நடைபெற்றது.

16. "விபீஷணன்" நாடகத்திற்கு சென்னை சர்க்காரால் தடை விதிக்கப் பட்டது.

21. மாடர்ன் தியேட்டர்ஸாரின் "கல்யாணி' தமிழ் நாட்டில் திரையிடப்பட்டது.

    முத்தியாலுப்பேட்டை, அமெச்சூர் டிரமாட்டிக் குரூப்பினர் "ஒரே தவறு' என்ற நாடகத்தை நடித்தார்கள்.

22. டைரெக்டர் தேவகி போஸ், சென்னைப் பத்திரிகைக்காரர்களை சந்தித்துப் பேசினர்.

26. சென்னை நகரில், பழைய 'சாகர்' தியேட்டர், 'ஒடியன்' என்ற பெயரில் மீண்டும் ஆரம்பமாயிற்று.

27. சங்கீத டைரெக்டர் எஸ். ஆர். சுப்பராமன் காலமானார்.

28. நாராயணன் கம்பெனியின் வெளியீடான "தர்ம தேவதா" தமிழ் நாட்டில் திரையிடப்பட்டது.

ஜூலை, 1952

3. ஸ்ரீ சக்தி நாடக சபையினர் "நீதிபதி" என்ற நாடகத்தை அரங்கேற்றினார்கள்.

4. "தர்ம தேவதா" சென்னை நகரில் திரையிடப்பட்டது.

5. சித்விலாஸ் சபையினர் "சுபத்திரையின் சகோதரன்" நாடகத்தை நடித்தனர்.

8. "தர்ம தேவதா"வைப் பார்க்க பத்திரிகைக்காரர்கள் அழைக்கப் பட்டனர்.

10. ஜெமினியின் "மூன்று பிள்ளைகள்" பத்திரிகைக் காட்சி சென்னை வெல்லிங்டனில் நடைபெற்றது.

11. "மூன்று பிள்ளைகள்" சென்னை நகரிலும், வெளியூர்களிலும் திரையிடப்பட்டது.

    தி ஸ்டார் கம்பைன்ஸ் அகேடமியினரின் "மனித வேட்டை" என்ற படத்தின் ஆரம்ப விழா சேலம் ரத்னா ஸ்டுடியோவில் நடைபெற்றது.

18. நவஜோதி நாடக சபையினர் "குகைக் கள்வன்" நாடகத்தை நடித்தனர்.

19. மாடர்ன் தியேட்டர்ஸின் "கல்யாணி" சென்னையில் திரையிடப்பட்டது.

    தாம்பரம் பைன் ஆர்ட்ஸ் கிளப் அங்கத்தினர்கள் "மிஸ்டர் காரியதரிசி" நாடகத்தை நடித்தனர்.

20. ஆதம்பாக்கம் அமெச்சூர்ஸ், "கலிங்கத்து இளவரசி" என்ற நாடகத்தை நடித்தனர்.

Printed by S. Sriraman at Commercial Printing & Publishing House, 46, Armenian Street, Madras—1. Edited and Published by P. R. S. Gopal (Gundoosi) at 26, Godown St., Madras—1.

ஆகஸ்ட் வெளியீடு
தெவிட்டாத நகைச்சுவை!
உள்ளத்தை உருக்கும் உணர்ச்சிகள்
ததும்பிய படம்....
விஜயாவின்
கல்யாணம் பண்ணிப்பார்
டைரக்ஷன்...ப்ரசாத்
தயாரிப்பு...
நாகிரெட்டி...சக்ரபாணி


அழகுக்கு அழகு செய்
ஆபரணங்கள்
P.A.R
P.A.ராஜு செட்டியார்
தந்தி "ராஜா" கோயமுத்தூர் போன்: